
# அபத்தம்

ஆவணி 2023 8




## இலக்கியத்தின் அளவுகோல்

ஏதிர் இயல்

# இலக்கியத்தின் அளவுகோல்

எங்களுக்கு உயர் வகுப்பில் பௌதிகம் (இயற்பியல்) கற்பித்த ஆசிரியர் எங்களுக்கு வெளிநாட்டுக் கதை ஒன்று சொல்வார். வெளிநாடு என்பது வெறும் கனவாக இருந்த காலம். லயன்ஸ் கிளப் உறுப்பினராக அவர் ஜப்பான் சென்ற கதையையே, அவர் ஜப்பானில் கழித்த நாட்களை விட அதிகமான நாட்கள் எங்களுக்குப் படிப்பிக்கும் நேரத்தில் சொல்லிக் கொண்டிருந்தார். பாடத்தைப் படிப்பிக்காமல், இந்தக் கதையைச் சொல்லி நேரத்தை வீணடிப்பிப்பதற்காகவே அவரின் வாயைக் கிளறும் விண்ணர்கள் எங்கள் வகுப்பில் இருந்தார்கள்.

வெளிநாட்டுத் தொலைக்காட்சியில் அடிக்கடி காட்டுவார்களாம் என்று ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்லுவார்.

கிளாஸ் ஒன்றில் நீரை நிரப்பி முன்னால் வைத்து விட்டு, வயலினில் ஒரு குறிப்பிட்ட சுரம் ஒன்றை இசைக்கும்போது, அந்த நீரும் குவளையும் அதிர்ந்து உடைந்து சிதறுவதை அடிக்கடி காட்டுவார்கள் என்பார்.

நான் வெளிநாடு வந்த முப்பத்தைந்து வருடங்களில் என் கண்ணில் அப்படி ஒன்றும் பட்டதேயில்லை, யூடியூப் வரும் வரைக்கும்!

அந்த நீர் நிறைந்த குவளையின் அதிர்வும், வயலினின் சுரத்தின் அதிர்வும் சமனாக (Resonant frequency) வரும்போது, பெரும் பரிவு அதிர்வு ஏற்படுவதே அதற்குக் காரணம் என்பதைச் சொல்வதற்காகத் தான் அவர் அந்த உதாரணத்தைச் சொல்லியிருந்தார்.

காலாட்படைகளின் சீரான அணிவகுப்பு நடையின் அதிர்வும் பாலத்தின் அதிர்வும் சமனாக இருந்தால், பாலம் உடைந்து விழுவதும் இதே பௌதீக விதிகளின் அடிப்படையில் தான்.

உலகில் எந்த இலக்கிய உலகத்திலும் இல்லாத நடைமுறை ஒன்று தமிழ் இலக்கிய உலகிற்கு மட்டும் தனித்துவமானதாக இருக்கிறது. டிவிட்டருக்குப் போட்டியாக பேஸ்புக் திரெட்ஸ் செயலியை அறிமுகம் செய்ததால், தன் பிழைப்புக்கு பங்கம் வரும் என்று நினைத்த எலோன் மஸ்க், பேஸ்புக்கின் மார்க் சக்கர்பேக்குடன், மர்ம உறுப்பை அளவிடும் போட்டிக்கு சவால் விட்ட கதை போல, நம் இலக்கியவாதிகளும் ஆளாளுக்கு ஒரு அளவுகோலுடன் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

தாங்கள் எழுதும் இலக்கியம் தான் பெரியது என்பதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், உன்னத இலக்கியங்கள் எவை என்பது எல்லாம் தங்கள் அளவுகோல்களால் மட்டுமே முடிவு செய்யப்படுகின்றவை என்ற நினைப்போடு தான் இவர்கள் கைலியைத் தூக்கிக் கட்டிய பேட்டை ரவுடிகளாக வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

Judge, jury and executioner என்பது போல, தங்களுக்கு மட்டுமே அந்தத்

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

தகுதியும் உரிமையும் இருப்பதான நினைப்போடு தான் ஆசான் முதல் அடிப்பொடிகள் வரைக்கும் ஒரு மிதப்போடு திரிகிறார்கள்.

தமிழ் இலக்கிய உலகில் அது ஒரு வசதி.

காதல் கடிதம் எழுதத் தெரிந்த யாருமே தன்னை ஒரு கவிஞனாக (கவிஞையாகவும் தான்!) உரிமை கோரி விட முடியும். அதைப் போல, எழுதுகின்ற யாருமே தன்னை ஒரு தலை சிறந்த விமர்சகராக நினைத்து, எவரையும் கடித்துக் குதறவும் முடியும்.

அவற்றுக்கான தகுதித் தேவைகள் குறித்தோ, அதில் உள்ள நலவுரிமை முரண்பாடுகள் (conflict of interests) குறித்தோ அவர்கள் அலட்டிக் கொள்வதில்லை.

தங்களை அரசியல் ஆய்வாளர்கள் என்ற நினைப்பில், சகல சர்வதேச விவகாரங்கள் குறித்தும் தீர்வு வைத்திருக்கிற யாழ்ப்பாணிகள் மாதிரி, இந்த இலக்கியவாதிகளும் எல்லா இலக்கியங்கள் குறித்தும் தீர்ப்பளிக்கக் கூடிய தகுதி தங்களுக்கு உண்டென்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

கலை, இலக்கியம் என்பதின் வீச்சு ஓவியம், சிற்பம், கவிதை, கதைகள், பாடல்கள், நாடகம், திரைப்படம் மட்டுமன்றி, இவை யாவற்றையுமே சில அறிவுறுத்தல்களோடு மட்டுமே செய்யக் கூடிய கணனி யுகத்தின் செயற்கை நுண்ணறிவு அற்புதங்கள் வரைக்கும் என சிறுவரையறைகளுக்குள் அடங்காமல் பெருவீச்சுக்குள் இருக்கும் போது, தங்களை இவை யாவற்றிலும் விற்பன்னர்கள் என்ற நினைப்பில், அவற்றின் தரக் கட்டுப்பாளர்கள் தாங்கள் தான் என்று, பாவனைக்குகந்த இறைச்சிக்கு சீல் குத்துவது போல, முத்திரை குத்த தங்களுக்கு மட்டுமே தகுதி இருப்பதாக நினைக்கிறார்கள்.

ஒரு துப்பாக்கியை வைத்துக் கொண்டு தன்னைத் தேசியத்

**தமிழ் இலக்கிய உலகில் அது ஒரு வசதி.**

**காதல் கடிதம் எழுதத் தெரிந்த யாருமே தன்னை ஒரு கவிஞனாக (கவிஞையாகவும் தான்!) உரிமை கோரி விட முடியும். அதைப் போல, எழுதுகின்ற யாருமே தன்னை ஒரு தலை சிறந்த விமர்சகராக நினைத்து, எவரையும் கடித்துக் குதறவும் முடியும்.**

**அவற்றுக்கான தகுதித் தேவைகள் குறித்தோ, அதில் உள்ள நலவுரிமை முரண்பாடுகள்** (conflict of interests) **குறித்தோ அவர்கள் அலட்டிக் கொள்வதில்லை.**

தலைவராக நினைத்துக் கொண்டு, மண்டையில் போடுகின்ற உரிமை தனக்கு மட்டுமேயானது என்று நினைத்தவர் போல, இந்தத் தற்குறிகளும் தங்களைத் தான்தோன்றிச் சூரிய தேவர்களாக நினைத்துக் கொண்டிருப்பதை என்னவென்பது?

மனிதர்கள் எந்த விடயம் குறித்தும் அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதில் எந்தத் தவறும் இல்லை.

Everybody is entitled to his/her own opinion.

அது கருத்துரிமை சம்பந்தப்பட்டது தான்.

ஆனால், இன்னொருவரின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமாயின், குறைந்தபட்சம் அது informed opinion ஆக இருக்க வேண்டும்.

ஆனால், விபரம் அறிந்த எல்லா கருத்துக்களுமே நியாயபூர்வமானவையாக இருந்து விடுவதில்லை.



**facebook: George RC**

எங்களுடைய முடிவுகள் பெரும்பாலும் எங்களின் உளச்சார்பு நிலைகளிலேயே தங்கியிருக்கின்றன.

Cognitive biases எனப்படும் நாம் முடிவுகளை எடுக்கும் உளச்சார்பு நிலைகள், உளவியல் ரீதியாக எக்கச்சக்கமான வகைகளில் வகைப்படுத்தப்பட்டு உள்ளன.

அதில் முக்கியமான confirmation bias, egocentric bias, bandwagon effect, in-group favortism/ preference bias, social comparison bias (Envy/ jealousy tendency) ஐந்தையும் எங்கள் இலக்கியவாதிகளிடம் அடையாளம் காண முடியும்.

ஏற்கனவே தாங்கள் கொண்டிருக்கும் கருத்துக்களோடு உடன்பாடு கொண்டவையாகக் காண்கின்றவையை ஏற்றுக் கொள்வது (confirmation bias), தங்களைப் பற்றிய அதீதமான மதிப்புகளோடு உலவுகின்ற illusiory superiority இயல்பை உள்ளடக்கிய egocentric bias, எல்லாப் 'புத்திஜீவி இலக்கியவாதிகள்' மாதிரி அவர்களின் தெரிவுகளைத் தங்களுடையதாகவும் காட்டி தங்களையும் புத்திஜீவிகளாக காட்டிக் கொள்ள முயலும் bandwagon effect, தங்கள் சாதிகள்,

முகாம்களைச் சேர்ந்தவர்களையும், தாங்கள் ஆராதிப்போரையும் தங்களை ஆராதிப்போரையும் புகழ்ந்தேத்தும் in-group preference/ favoritism bias, மற்றவர்களோடு தங்களை ஒப்பிட்டு பொறாமை கொள்கின்ற social comparison bias ஆகியன தான் எங்கள் இலக்கிய உலகை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

இவற்றைக் கடந்து, எந்தப் படைப்பையும் தரத்தின் அடிப்படையில் மட்டும் அளவீடு செய்கின்ற ஒரு அளவுகோலை யாராவது காட்ட முடியுமா?

இந்த உளச்சார்பு நிலைகளைக் கடந்த, இலக்கிய அறம் நிரம்பப் பெற்றதொரு இலக்கிய மகானை யாராவது கண்டிருக்கிறீர்களா?

தாங்கள் பேசுகின்ற, கருத்துச் சொல்கிற விடயங்கள் குறித்து, குறைந்த பட்ச அறிவு கூட இல்லாமல் கருத்துச் சொல்ல முனைகிற மேதகுக்கள் ஊருக்குள் அதிகம். உலக இலக்கியப் பெருந்தகைகளின் பெயரைச் சொல்லுவதால் மட்டுமே தங்களைப் புத்திஜீவிகளாக்கி விட முடியும் என்ற நினைப்பு பலருக்கு உண்டு.

‘தமிழில் சிறந்த’, ‘புலம் பெயர் இலக்கியத்தின் மூத்த’ எனப் பட்டியல் போடுகின்ற எத்தனை பேர் அதையெல்லாம் வாசித்துக் கரை கண்டவர்கள்?

வாழ்நாள் சாதனை விருது கொடுக்கும் எத்தனை பேர் திறமைக்கு மட்டுமாக விருது கொடுத்திருக்கிறார்கள்?

தங்களுடைய முகாமைச் சேர்ந்தவர்கள், தங்களை ஆராதிப்போர், விரு(ந்)தோம்பினோர், பின்னால் பயன் பெறக் கூடியவர்கள் என்ற கணக்கீடுகள் இல்லாமல்...
அல்லது தங்களுடைய இருத்தலுக்கு அச்சுறுத்தலாக இருக்கக் கூடியவர்கள், தங்களை விடத் திறமை வாய்ந்தோர் பற்றி எல்லாம்

> **எப்போதும் இவர்களின் நிராகரிப்பின் பின்னால், பொறாமை தான் முக்கிய காரணியாக இருக்கும்.**
>
> **அங்கீகாரத்தின் பின்னால் தங்களுக்கு வரக்கூடிய லாபக் கணக்கீடுகள் தான் இருக்கும்.**
>
> **எந்த அறிவும் அடிப்படையும் இல்லாத அளவீடுகளை பிரபஞ்ச உண்மைகள் போல வலியுறுத்துகின்ற இவர்களின் அங்கீகாரங்களுக்காக அலைகிறவர்களினால் தான் இவர்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.**

பொறாமை எதுவும் இல்லாமல் தான் நாங்கள் அளவீடுகள் செய்கிறோம் என்று இந்த அளவுகோல்காரர்கள் யாராவது மனச்சாட்சியோடு சொல்லத் தயாரா?

இவர்கள் யானை பார்த்த குருடர்களாகவும் கூட இல்லை. கண்ணுக்கு முன்னால் தெரிவதையும் பார்க்க மறுக்கின்ற, கண்ணால் கண்டதைக் கூட கண்டதாக ஒப்புக் கொள்ள மறுக்கின்ற வகையினர்.

மொத்தத்தில், மனம் அறிந்து பொய் பேசும் அயோக்கியர்கள்.

இதனால் தான் தங்களுடைய தரத்திற்கு மிஞ்சிய படைப்புகள் குறித்தும் படைப்போர் குறித்தும் பொறாமை கொள்கிறார்கள். தங்களுடைய இருப்புகளுக்கு ஆபத்து ஏற்படும் என அச்சம் கொள்கிறார்கள்.

எப்போதும் இவர்களின் நிராகரிப்பின் பின்னால், பொறாமை தான் முக்கிய காரணியாக இருக்கும்.

அங்கீகாரத்தின் பின்னால் தங்களுக்கு வரக்கூடிய லாபக் கணக்கீடுகள் தான் இருக்கும்.

எந்த அறிவும் அடிப்படையும் இல்லாத அளவீடுகளை பிரபஞ்ச உண்மைகள் போல வலியுறுத்துகின்ற இவர்களின் அங்கீகாரங்களுக்காக அலைகிறவர்களினால் தான் இவர்கள் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் இலக்கிய உலகின் குறைபாடே, இலக்கியம் என்றால் என்ன என்பதை முழுமையாக விளங்கிக் கொள்ளாதது தான் என்று நினைக்கிறேன்,

எண்பதுகளின் பின்னால் ஆங்கிலத்தில் literature என்பதற்கு புதிய கருத்து ஒன்று பாவனைக்கு வந்தது. அச்சில் வருகின்ற விளம்பரத் துண்டுப்பிரசுரங்களையும், சிறு அறிவுறுத்தல் கையேடுகளையும் literature என்று அழைக்கும் பழக்கம் வந்து சேர்ந்தது. (Advertising and promotional literature)

இங்கே மேற்குலகில் எனக்குத் தெரிந்து, தமிழைப் போல இலக்கியத்தை அளவீடு செய்யும் முறையோ, மேதாவிகளோ இல்லை.

தங்களுடைய அளவீடுகளின்படி தான் இலக்கியம் அளவிடப்படும் என்று அடம் பிடிக்கிற ஆசான்களும் கிடையாது.

தங்களுடைய படைப்புகள் உன்னத இலக்கியங்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று அலைகிறவர்களும் கிடையாது.

காரணம், இங்கே இலக்கியம் ஒவ்வொரு வகைகளாக (genre) வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. சமீப காலங்களில், 90களின் பின்னால் என்று நினைக்கிறேன், எங்கள் புத்திஜீவி இலக்கியப் பெருந்தகைகள் (என தங்களைக் காட்டிக் கொள்ள விரும்புவோர்) பெருமையோடு தமிழ்படுத்தாமலேயே தமிழில் பயன்படுத்தும் வார்த்தை இது.

Pulp fiction, Harlequin புத்தகங்கள் என்று இல்லத்தரசிகளின் மனம் கவர்ந்த புத்தகங்கள் பெருவிற்பனை பெறும். நம்ம ராணி முத்து நாவல்கள் மாதிரி! அதற்கு இலக்கிய அந்தஸ்தை யாரும் கோருவதில்லை.

விஞ்ஞானக் கற்பனைகள், சித்திரக் கதைகளை மையப்படுத்திய நாவல்கள், திரைப்படமாக வந்த பின்னால் நாவல்கள் ஆக்கப்பட்ட திரைக்கதைகள் என்று பல்வேறு வெற்றி பெறும் (Best selling) வகைகள் உண்டு.

மர்ம நாவல்கள் எழுதும் அந்தக் காலத்து அகதா கிறிஸ்டி முதல் இந்தக் காலத்து ஜோன் கிரிஷாம், ஸ்டீபன் கிங், டான் பிறவுன் வரைக்கும் தங்களுக்கு இலக்கிய அந்தஸ்து கோரியதில்லை.

Fifty shades of grey பெருவெற்றி பெற்றதற்காக, தனக்கு இலக்கிய அங்கீகாரம் கோரி நின்றதில்லை.

காரணம், They are laughing all the way to the bank.

இங்கே நவீன இலக்கியம் என்பது கூட, சமகாலத்திய படைப்புகள் பற்றியதும் அல்ல, அது கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து 1960 கள் வரைக்கும் வெளிவந்த classics வகைகளை அடையாளப்படுத்துவது தான். இவற்றை ஒருவேளை இலக்கியம் என்று சொல்லக் கூடும். 1984, To kill a mockingbird போன்றன பாடசாலைகள், பல்கலைக் கழங்களில் பாடப்புத்தகங்கள் ஆக உள்ளன.

இப்படி இலக்கியத்தின் ஒவ்வொரு வகைக்கும் அதற்கான வாசகர் கூட்டம் இருக்கும்.

அதிகம் விற்பனையாகும் புத்தகங்களை எழுதுவோர், சிறுபுத்தக வெளியீடுகளை ஏளனமாகப் பார்ப்பதோ, சிற்றிலக்கியம் படைப்போர் பிரபலமானவர்களை பொறாமையுடன் பார்த்து நிராகரிப்பதோ இல்லை.

அலிஸ் மன்றோவையும், மார்கரட் அட்வூட்டையும், சல்மான் ரஷ்டியையும், இலக்கிய நோபல் பரிசு பெறும் இன்னோரன்ன எழுத்தாளர்களையும் வாசிப்போர்கள் எல்லாம், தங்களை ஏதோ மேல் உலகில் இருந்து வந்தவர்கள் மாதிரி, மேலே சொன்ன best selling எழுத்தாளர்களை வாசிப்போர்களை எல்லாம் கீழ்த்தரமானவர்களாக எண்ணுவதும் இல்லை.

Everyone has their place.

எல்லோருக்கும் அவரவர்க்கான இடம் உண்டு.

எங்களுடைய பிரச்சனை எல்லா இடங்களுக்கும் தானே ஆட்டையைப் போட புறம் போக்குகள் முயற்சிப்பது தான்.

எங்களுடைய பிரச்சனை மூன்று வகை சார்ந்தன.

ஒன்று, எல்லா இலக்கியங்களையும் வகை பிரிக்காமல் ஒரே கூடைக்குள் அள்ளிப் போட்டு அளவிட முனைவது. அப்பிள்களையும் தோடம்பழங்களையும் ஒப்பிட முயற்சிப்பது. எல்லாமே மரக்கறிகள் தானே என்று வெங்காயத்தையும் பூசணிக்காயையும் ஒரே கூடைக்குள் அள்ளிக் கொட்டி, கிலோ கணக்கில் விற்கும் முயற்சி போன்றது தான், நாஞ்சில் பி.டி.சாமி முதல் மு. வரதராசன் வரைக்கும், தமிழ்வாணன் முதல் ஜெயகாந்தன் வரைக்கும், சாண்டில்யன் முதல் சாரு வரைக்கும், சுஜாதா முதல் சுந்தர ராமசாமி வரைக்கும், அகிலன் முதல் ஆசான் வரைக்கும் ஒரே அளவுகோலால் அளக்க முயற்சிப்பதும்.

எங்களுடைய இலக்கியத்தில் வகையறாக்கள் (genre) இல்லை. அவ்வாறு வகைப்படுத்தக் கூடிய அளவுக்கு இலக்கிய உலகமோ, சந்தையோ பெரியதாகவும் இல்லை.

மற்றது, இலக்கியம் படைப்பதால் பணம் கிடைப்பதற்கான வழிகள் மட்டுப்படுத்தப்பட்டனவாக இருக்கின்றன.

அந்தக் காலத்துத் தமிழ்வாணனும் ராஜேஷ்குமாரும் ரமணி சந்திரனும் தங்களுக்கு என வாசகர்களைக் கொண்டிருக்கிறார்கள். அதிகமாக விற்கிறார்கள். அவர்களுக்கு அளவுகோல் பற்றி என்ன பிரச்சனை? றோயல்டியும் வங்கிக் கணக்கின் அளவும் தான் அவர்களுக்குப் பிரச்சனை.

இந்தக் குடுமிப்பிடிச் சண்டை எல்லாம் அந்த இருநூறு புத்தகம் விற்க முக்குகின்றவர்களின் புளிச்சல் ஏப்ப விளையாட்டுத் தான். இவர்களுக்கு இலக்கியம் படைத்தல் என்பது வாழ்வாதாரத்திற்கான வழியாக இருப்பதில்லை.

சாருவைக் குருவாகக் கொண்டவர்களும், ஆசானின் அடிப்பொடிகளுமாக முழுப்பேருமே புத்தகங்கள் வாங்கினால், அவர்கள் குரோர்பதிகளாக இருந்திருக்கக் கூடும். சுஜாதா சொன்ன மாதிரி, சாரு மளிகைக்கடை பில்லை எல்லாம் பிரசுரித்து யாசிக்க வேண்டியிருந்திருக்காது.

அதன் மூலமாக வரவேண்டிய பணம் கூட முறையாக வராத அளவுக்கு, இலக்கியம் படைத்தல் என்பது தமிழ் இலக்கிய உலகில் பெரும்பாலும் சொந்தச் செலவில் தனக்கே சூனியம் செய்து கொள்ளும் முயற்சிதான்.

இதனால் அங்கீகாரம் என்ற அளவில் பெயராவது வரட்டும் என்கின்ற நிலைமை தான். இந்த அங்கீகார வேட்கை தான் அளவுகோல்களுக்கான தேவையை உருவாக்குகிறது. ஆசான்களின் அருளாசியை இரந்து வேண்ட வைக்கிறது.

வாசித்து அறிவைத் தேடி சிந்தனையை வளப்படுத்தும் சமூகமாக இருந்து, இலக்கியவாதிகளைப் கௌரவித்துப் போஷிக்கிற இனமாக இருந்தால், அளவுகோல்கள் பற்றியோ, அங்கீகாரம் பற்றியோ அலைகிறவர்களாக இந்த இலக்கியவாதிகள் இருக்க மாட்டார்கள்.

புத்தகம் வாங்கியதைப் பெருமையாக பேஸ்புக்கில் ஆதாரம் போடுகின்ற வாசகர் கூட்டமும் இருந்திருக்காது.

ஒருவேளை பாடிப் பரிசில் பெற மன்னர்கள் இருக்கும் போது, நாம்

எதற்குக் கொடுக்க வேண்டும் என்று இந்நாட்டு மன்னர்கள் எல்லாரும் நினைத்திருக்கக் கூடும்.

இந்த இலக்கிய மேதகுக்கள் தங்களுக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் அடிப்பொடிகள் மட்டுமாவது புத்தகங்களை விலை கொடுத்து வாங்கியிருந்தால், அதனால் வரும் வருமானத்தில் பங்கு கொடுக்கக் கூடிய பதிப்பாளர்களும் இருந்திருந்தால், இந்த மேதகுக்கள் எழுத்தை மட்டுமே நம்பி வாழ்க்கையை ஓட்டி விட முடியும்.

pdf please இலக்கிய ஆர்வலர்கள் இருநூறு பேரையும் மட்டும் வைத்துக் கொண்டும், தங்கள் கடன் கணக்குகளைச் சொல்லிப் புலம்புகிற பதிப்பாளர்களையும் வைத்துக் கொண்டும் என்ன பண்ண முடியும்?

எலோன் மஸ்கின் dick measuring contest க்குத் தான் சவால் விட முடியும். நான் பத்தொன்பது புத்தகம் விட்டேன் என்று பீலா விடுகின்றவருக்கு, எத்தனை புத்தகம் விற்றேன் என்று சொல்லிப் பெருமை கொள்ள முடியாத அளவுக்குத்தான் கள நிலவரம்.

மூன்றாவது,

எங்களுடைய சிந்தனை எங்களுடைய சாதியமைப்புகளின் ஊடாக வளர்ந்தவையாகத் தான் இருக்க வேண்டும். தன்னை மேலானவனாகவும், மற்றவர்களைக் கீழானவர்களாகவும் பிறப்பை வைத்தே கணிக்கின்ற சமூகத்தின் தொடர்ச்சியும் நீட்சியும் தான் இது. ஏதோ ஒரு வகையில் தாழ்வுமனச் சிக்கலுக்கு உள்ளாகி, தன்னை மேலானவனாகக் காட்டி ஆக வேண்டும் என்று தவிப்பின் முயற்சியாக, ஒரு சாதிப்பாகுபாட்டை ஏற்படுத்தும் முயற்சியாகத் தான் இந்த அளவுகோல்கள் எனக்குத் தெரிகின்றன.

மற்றவர்கள் அதைச் செய்யாத போது, துப்பாக்கியை வைத்துக் கொண்டு தன்னைத் தேசியத் தலைவனாக்கிய கதை மாதிரி, அளவுகோலை வைத்துக் கொண்டு தானே ஆசானாகிய கதைகள் தான்.

எனவே, இலக்கியம் என்பதற்கான அளவுகோல் தான் என்ன?

எங்கள் இலக்கியவாதிகளைக் கேட்டால், பிறந்தவுடன் தாயின் முலையைத் தேடுவதற்கு முன்னால், தோஸ் தோயேவ் ஸ் கியின் புத்தகத்தைத் தேடின கதை தான்.

வாசிக்கிறவர்களின் வளர்ச்சி என்பது அவர்களின் வளர்ச்சியோடு ஒட்டியது. அம்புலிமாமாவும் வேதாளன் கதையும் (எனக்கு நற்கருணை வீரனும்!) என்று தொடங்கி, கல்கி, குமுதம், விகடன் தொடர்கதைகள், சுஜாதா, புஷ்பா தங்கத்துரை, ஜெயகாந்தன் என்று விரிந்து, அதற்கு அப்பாலான உலகங்களுக்கான தேடலாகத் தான் வாசிப்பு இருக்கும்.

இதில் தேடல் உள்ளவர்கள் தேடிக் கொண்டே இருக்க, அடுத்த கட்டங்களுக்குப் போகாமல் அந்தந்த இடங்களிலேயே தரித்து விடுவோரும் உண்டு. ஒவ்வொரு கட்டங்களிலும் தரித்து நிற்போர் தொகை அதிகமாக, அடுத்த கட்டங்களுக்குச் செல்லத் தேடிக் கொண்டே இருப்போர் எண்ணிக்கை குறுகிக் கொண்டு தான் போகும். இதனால் தான் சிறுசஞ்சிகைகள், சிற்றிலக்கியங்களைத் தேடி வாசிப்போர் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது.

ஆனால், தங்களுடைய தளங்களில் தரித்து நிற்போருக்கு அந்தந்தத் தளங்களில் உள்ள படைப்புகளோடு ஒன்றிக்க முடியும். அதற்கும் மேற்பட்ட மற்றத் தளங்கள் அவர்களுக்கு அந்நியமானவைதான்.

ஒவ்வொருவருடைய ரசனையும் பல்வேறு காரணிகளால் கட்டமைக்கப்படுகிறது. தனிப்பட்ட இயல்புகள், எதிர்பார்ப்புகள், அவர்கள் வளர்ந்த விதம், சிந்தனை வளர்ச்சி என்று எத்தனையோ விடயங்களால் தான் அது வடிவம் பெறுகிறது.

இதனால் தான், ஒருவருக்குப் பிடிக்கும் படைப்பு இன்னொருவருக்குப் பிடிக்காமல் போகிறது. எல்லோருக்கும் பிடித்தமானதாக இருந்தாலும், அதில் இருக்கும் வெவ்வேறு அம்சங்கள் தான் ஒவ்வொருவருக்கும் பிடித்தமானதாக இருக்கும்.

அதைப் போல, ஒரே ஆளுக்கு ஒரு கால கட்டத்தில் பிடித்த ஒன்று இன்னொரு கால கட்டத்தில் கண்ணில் காட்ட முடியாததாகிறது.

அதற்கு வளர்ச்சியும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இதனால் தான், ஒரு காலத்தில் கிக் ஏற்படுத்திய பாடல் பிற்காலங்களில் கேட்பதற்குப் பிடிக்காமல் போகிறது. அந்தக் காலத்து ஓரம்போவும் இந்தக் காலத்து எஞ்சாமியும் கணநேரக் கிளுகிளுப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்தும் fad களாகி விடுமே ஒழிய, செவ்விலக்கியங்கள் (classics) ஆவதில்லை.

பதின்ம வயதில் வாத்யார் படத்தை முதல் நாள் பார்த்தேன் என்பதற்காக, இப்போதும் விஜய் படத்தை முதல் நாள் பார்த்து செல்பி போட்டுத் தான் ஆவேன் என்று அடம் பிடிக்கிறவனின் வளர்ச்சி தான் என்ன?

படைப்புகளை ஏன் விரும்புகிறோம்?

அதன் பாத்திரங்களோடு எங்களை அடையாளம் காணக் கூடியதாக இருக்கக் கூடும். நாங்கள் ஆக வேண்டும் என்று விரும்புகிற இலட்சிய கதாபாத்திரமாக அது இருக்கக் கூடும்.

ஏதோ ஒரு வகையில் எங்களில் அதிர்வை ஏற்படுத்துகிற ஒன்றாக இருக்கும் போது தான், பேச்சுவழக்கில் நாங்கள் சொல்லும் 'ஒரே அலைவரிசை' விடயமாக வரும் போது, அது எங்களை ஆகர்ஷிக்கிறது. பரவசப்படுத்துகிறது.

ஆரம்பப் பள்ளி மாணவனுக்கு அது அம்புலிமாமாவாக இருக்கும்.

சாதாரண குடும்பப் பெண்ணுக்கு ரமணி சந்திரன் நாவலாக இருக்கக் கூடும்.

உயர்தர வகுப்பு மாணவனுக்கு விகடன் தொடர்கதையாகவோ, சரோஜாதேவி கதையாகவோ இருக்கக் கூடும்.

பேஸ்புக் வாசகனுக்கு அது ஏதோ ஒரு மொக்கையான பதிவாகக் கூட இருக்கும்.

அது ஒரு sex addict க்கு காமக்கதையாக இருக்கக் கூடும்.

இவையெல்லாம் இலக்கியவாதிகள் தங்களை மேலானவர்களாகக் காட்டிக் கொள்ள, முகாராமி, பாமுக், தோஸ்தோயேவ்ஸ்கி என்பது போல இல்லாமல், இயல்பாக வருகின்ற வாசிப்பு.

எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல், அடுத்த ஆளுக்கும் தெரியாமல் உன்னதங்களைத் தேடும் பலர் இருக்கிறார்கள். அவர்களின் தேடல்கள் பல எல்லைகளைக் கடந்தன. அதை அலட்டிக் கொள்ளாதபடிக்கு அது இயல்பாக வருகிறது.

எனக்கு அப்படித் தான்.

இப்படி, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று அதிர்வுகளை ஏற்படுத்துகிறது.

It resonates with them.

அவர்களுடைய அலைவரிசையோடு அது ஒன்றிக்கிறது.

They tune-in.

ஒருவருக்கு பெரும் அதிர்வலையை ஏற்படுத்தவது, மற்றவர்களுக்கு அது வெறும் காட்டுக்கத்தல் (Noise) ஆக இருக்கக் கூடும்.

இன்னொரு மொழியில் வரும் கலையுணர்வு மிக்க படத்தோடு ஒன்றிக்கும் ஒருவனுக்கும், கட்டவுட்டுக்குப் பால் ஊற்றும் ஒருவனுக்கும் எதிர்பார்ப்புகளும் அலைவரிசைகளும் வேறு. ஒருவருக்கு மற்றவருடையது வெறும் காட்டுக் கத்தலாகத் தான் இருக்கும்.

அந்தத் தெரிவு ஒவ்வொரு தனிமனிதனுக்குமானது. அந்த தனிமனிதனுக்கும் அது காலம் சார்ந்ததாகவும் இருக்கிறது. சில நேரங்களில் அவனுடைய அந்த நேரத்து மனநிலை (mood) சார்ந்ததாகவும் கூட இருக்கும்.

இதனால், தான் ரசிக்கிற அதே எழுத்தாளரையோ, நடிகனையோ எப்போதும் ரசிக்க முடிவதும் இல்லை. ‘அண்ணன் சொதப்பியிட்டார்டா!’ என்று சொல்லத் துணிகிற, பால் ஊத்துகிற ரசிகனுக்கு இருக்கும் நேர்மை, ஆசான்களை ஆராதிக்கும் அடியவர்களுக்கு இருப்பதில்லை.

கலை, இலக்கியத்தை அளவீடு செய்வது ஒவ்வொரு ரசிகனும் வாசகியும் தான்.

தங்களை ஒன்றிக்க வைப்பதை நேசிப்பதும் நிராகரிப்பதும் அவர்களால் தான் முடிவு செய்யப்படுகிறது.

படைக்கிறவர்களோ, இடைத்தரகு நந்திகளோ இல்லை.

தங்களுக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் இலக்கிய மேன்மையைத் தக்க வைத்துக் கொள்ள, தங்களால் ஆராதிக்கப் படுகிறவர்களின் படைப்புகள் எல்லாமே உன்னதமானவை என்று இலக்கியக் கூட்டத்தினர் நடிக்க வேண்டி இருக்கிறது... நித்தியானந்த பக்தர்கள் மாதிரி!

**அ.முத்துலிங்கத்தை அசோக மித்திரனின் தொடர்ச்சியாக ஆசான் காணும்போது, முத்துலிங்கம் குறித்த சோபா சக்தியின் கருத்தை சோபா சக்தியின் வரிகளுக்கு இடையில் தேடினால் ஆச்சரியமாக இருக்கும். அதை வெளியில் பகிரங்கமாகச் சொல்ல அவர் தயாராக இருக்க மாட்டார்.**

**ஆசானுக்கு அது நக்கி நாவிழந்த நன்றிக்கடன்.**

**சோபா சக்திக்கு அந்த மூடுலிங்கம் பிழைப்புக்குப் பங்கம்.**

இதற்குள் அதற்கான அளவுகோல் தங்களிடம் தான் இருக்கிறது என்கிற இலக்கியவாதிகளைக் கேட்டால், ஜெயகாந்தனா? சுந்தர ராமசாமியா? என்பதிலேயே யுத்தம் ஆரம்பமாகி விடும்.

இவர்கள் இருவருமே அதற்கு லாயக்கில்லை என்று ஏதோ பெயர்களுடன் நாலு மூலையிலிருந்தும் நான்கு வேறு அணிகள் கிளம்பும்.

அ.முத்துலிங்கத்தை அசோக மித்திரனின் தொடர்ச்சியாக ஆசான் காணும்போது, முத்துலிங்கம் குறித்த சோபா சக்தியின் கருத்தை சோபா சக்தியின் வரிகளுக்கு இடையில் தேடினால் ஆச்சரியமாக இருக்கும். அதை வெளியில் பகிரங்கமாகச் சொல்ல அவர் தயாராக இருக்க மாட்டார்.

ஆசானுக்கு அது நக்கி நாவிழந்த நன்றிக்கடன்.
சோபா சக்திக்கு அந்த மூடுலிங்கம் பிழைப்புக்குப் பங்கம்.


அவர்களுக்குள்ளேயே அந்த அளவுகோல்கள் தரப்படுத்த முடியாமல் (Standardized) இருக்கும்போது, அந்த அளவுகோல்களை வைத்து அவர்கள் என்ன செய்ய முடியும்?

எலோன் மஸ்கின் சவாலில் தங்களையும் சேர்த்துக் கொள்ளும்படி விண்ணப்பிக்கலாம்.

ஆனால், நானும் ரவுடி தான் என்று, தன் உள்ளுறுப்புத் தெரிய சாரத்தைத் (கைலியை) தூக்கிக் கட்டிக் கொண்டு, அமெரிக்கா, சிலி எல்லாம் நம்பர் வண் நானே என்று சாரு அதற்கும் உரிமை கோரப் போவதை நினைத்துத் தான்.....! அ

அபத்தம்

ஆவணி 2023




எழுதிய, எழுதப்பட்ட ஆளுமைகள் குறித்து மேலும் அறிந்து கொள்ளவும், அவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் அவர்களின் பேஸ்புக் அடையாளங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எழுத விரும்புவோர் Read the fine print ஐ வாசிக்க..

ஆக்கங்களுக்கு ஆக்கியோர்களே பொறுப்பு. ஆயினும் அதைப் பிரசுரிப்பதற்கான பொறுப்புகளில் இருந்து அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
**Editor/Design**
**George R. Ckrhushchev**

# லேட் ஆனாலும், லேட்டஸ்டா..!

நாங்கள் தவறு செய்யும் போதும், எங்கள் மீது சந்தேகங்கள் எழும்போதும், நாங்கள் சொல்லும் காரணங்கள் நியாயப்படுத்தக் கூடியதாகவும், நம்பகத்தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

பாடசாலை நாட்களில் வராததற்கும், தாமதங்களுக்கும் மாணவர்கள் சொல்லும் காரணங்கள் அமர்ந்திருக்கும் மற்ற மாணவர்களுக்குமே சிரிப்பாக இருக்கும்.

வீட்டுப்பாடத்தை நாய் தின்று விட்டது என்பது இங்கு புராதன ஜோக்.

இங்கே போக்குவரத்து விதிகளை மீறியதற்கான தண்டம் கட்ட மறுத்து ஒரு முறை நீதிமன்றம் போன போது, அங்கே ஒரு சோமாலிய டாக்ஸி ட்ரைவர் சொன்ன காரணத்தை நீதிபதிக்குத் தலைகுனிந்தபடியே மொழிபெயர்த்த சோமாலி மொழிபெயர்ப்பாளனின் சலனமில்லாத முகபாவனை எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

எப்படிச் சிரிக்காமல் இருக்கிறான் என்று!

சில நேரங்களில் சில காரணங்கள் முட்டாள்தனமாக (silly) இருக்கும்.

நாங்கள் தமிழர்கள். எங்கள் தவறுகளுக்கு நாங்கள் கூறும் காரணங்கள் எங்களுக்கே நம்ப முடியாமல் இருக்கும்.

எங்கள் அகதிக் கோரிக்கைக் கதை மாதிரி!

சிவப்பு விளக்கை மீறி ஓடியதற்கும் 47 நாடுகளின் சதியைக் காரணம் சொல்லலாம்.

நம்ப மறுத்த நீதிபதியைத் துரோகி என்றும் சொல்லலாம்.

நீதிமன்றத்தை அதிர வைத்த தமிழன் கெத்து என்று எங்காவது தலையங்கம் வரக் கூடும்.

சரி, இத்தனை சுற்றி வளைப்பும் ஏன் அபத்தம் தாமதமாக வருகிறது என்பதற்கான காரணத்தைச் சொல்லத் தான்.

ஒன்றில் பூமி சூரியனைச் சுற்றி வருவதையோ, களை எடுப்பையோ காரணமாகச் சொல்லலாம்.

தன்னையும் சுத்தி உலகத்தையும் சுத்துகிற தமிழன் மாதிரி, பூமி சூரியனைச் சுற்றி வருவதால் பருவ காலங்கள் உருவாகின்றன. துருவத்தை அண்டிய பகுதிகளில் பகல், இரவு நேரங்கள் மாறுகின்றன.

கோடை காலங்களில் சூரியன் மறைந்து இருள் சூழ்வதற்கு இரவு ஒன்பது மணிக்கு மேல் கூட ஆகக் கூடும். குளிர் காலங்களில் நான்கு மணிக்கே இருள் சூழ்ந்து விடும்.

பகல் நீண்டதால் தோட்ட வேலை இரவு வரை நீடிக்கும்.

இதற்குள் தோட்டம் முழுவதும் களை நிறைந்து விட்டது. உரிய காலத்திற்குள் பிடுங்கி முடிக்காவிட்டால், பயிர்களை மூடி விடும். இவ்வளவு நாள் உழைப்பிற்கும் பயன் இல்லாமல் போய் விடும்.

பகல் வேலை முடிந்து வந்து உடனேயும் தோட்டத்தில் வேலை செய்ய முடியாது. கொளுத்தும்

வெயில்.

வெயில் தணிந்து வேலை தொடங்கி களை எடுத்து முடிந்து வீட்டுக்குள் வந்து, நீராடி, இரவு உணவு உண்டு, தொண்டர்க்குமுள்ள உண்ட களை தீர பதினொரு மணியாகி விடும்.

நித்திரை வரும். மறுநாள் வேலைக்கும் போக வேண்டும்.

எழுத நேரம் இருக்காது.

தேசியத் தலைவர் மாதிரி இருந்தால் களை எடுப்பு சுபலமானது. பார்த்துப் பாராமல் போட்டுத் தள்ளலாம்.

பயன் இருக்காது... தோட்டத்தில்.

ஒவ்வொரு களையாக பார்த்து வேரோடு பிடுங்கத் தான் வேண்டும்.

அதற்குள் சிக்கிப் போயிருக்கும் கன்றுகளையும் பிடுங்கி விடாத படிக்கு கவனமாக!

அபத்தம் காத்திருக்கும். பயிர்கள் காத்திருக்காது.

இதற்குள் குடும்பக் கடமைகள் வேறு!

கூப்பிடும் போதெல்லாம், செய்ததை அப்படியே போட்டு விட்டு, ஆஜராகா விட்டால், அடுத்த நேரச் சாப்பாடு கிடைக்காது.

கோடை காலம் முடியும்வரைக்கும் இதே நிலை தொடரலாம்.

இருந்தாலும், அபத்தத்தைப் புலி தின்று விட்டது என்று ஒருநாளும் சொல்லப் போவதில்லை!

அபத்தம் வெளியிடுவதற்கான உழைப்பை உணர்ந்து நண்பர்கள் தங்களாலான பங்களிப்பை நல்கிய வண்ணம் உள்ளார்கள்.

அபத்தம் உங்கள் சிந்தனையும் அறிவும் வளர்ச்சி அடைய நல்கும் பங்களிப்பிற்கான பெறுமதியை வழங்க வேண்டும் என்று நினைத்தால், paypal மூலமாக apaththam@gmail.com என்ற முகவரிக்கும் எந்தத் தொகையையும் நீங்கள் அனுப்பலாம். அனுப்ப வேண்டும் என்று எந்த நிர்ப்பந்தமும் இல்லை.

அதற்குச் செலவிடும் நேரத்திற்கும் உழைப்புக்குமான பெறுமதியை உணர்ந்து கொண்டால் மட்டும் அனுப்புங்கள்.

முடியாது போனாலும் தொடர்ந்தும் ஆர்வத்துடன் அபத்தத்தை வாசியுங்கள்.

எழுதுங்கள். உங்கள் கருத்துக்களை தெரிவியுங்கள்.



படம் ஜோர்ஜ் இ.






# தடங்கள் பதிக்கும் புதுமை


இந்த மாத அட்டைப்படம் லக்ஷன் சிவலோகநாதன் Lakshan Sivaloganathan அவர்களால் வரையப்பட்டிருக்கிறது. ஓவியத்திலும் பொப் கலாசாரத்திலும் பெரும் ஈடுபாடு கொண்ட அவர் சுயமாகவே ஓவியத்தைக் கற்றுக் கொண்டவர்.

2011 இல் தனது தாயாரின் சடுதி மரணத்தினால் ஏற்பட்பட துயரை எதிர்கொள்வதற்கான வழியாகவும் இவர் தனது ஓவியம் வரைதலைப் பயன்படுத்திக் கொண்டார்.

பொப் கலாசாரத்தில் பலரின் செல்வாக்கைப் பெற்ற இசைக்கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள், நடிகர்கள், முக்கிய புள்ளிகளை தன் ஓவியங்களில் இவர் அதிகமாகக் காட்சிப்படுத்துகிறார்.

கனடாவில், ரொறன்ரோ நகரில், நகர மண்டபத்தின் முன்னால் வருடாந்தம் நடத்தப்படும் Torotnot Art Fair நிகழ்வில் 2022இல் காட்சிப்படுத்தப்படுவதற்கு இவருடைய ஓவியங்களும் தெரிவாகி, இரண்டு மாதங்கள் இவருடைய படைப்புகள் பல்வேறு பிரபலமான ஓவியர்களின் ஓவியங்களுடன் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

தன்னுடைய முயற்சிகளுக்கு உற்சாகம் தரும் தன் தந்தை, சகோதரன், குடும்பத்தினர், நண்பர்களுக்கு மிகுந்த நன்றியுணர்வோடு உள்ள இவரை அபத்தம் சார்பில் பெருமைகள் பல பெற வாழ்த்துகிறோம்.




# லக்ஷன் சிவலோகநாதன்












STARBOY
LAKERS
GUCCI

A53
STARBOY

Scotiabank Arena
2019




# அங்குலீமாலாவும் அகிம்சகரும்




அந்த வருடத்தில் இளவேனிற் காலத்தின் இறுதி நாட்களில் புத்தர் ஜோடன் வனத்திற்குத் திரும்பிய போது அங்குலீமாலா என்று பெயர் கொண்ட ஒரு பெரும் கொலைகாரனைச் சந்தித்தார். அவனை மனம் மாற்றினார்.

ஒரு நாள் கலையில் சாங்கி நகருக்குள் புத்தர் நுழைந்த போது, அந்நகரம் பேய் உலாவும் நகரம் போல வெறிச்சோடிக் கிடந்தது. எல்லா வீட்டுக் கதவுகளும் தாளிடப்பட்டிந்தன. தெருக்களில் ஆள் அரவமே இல்லை. வழக்கமாக அவருக்கு உணவு தானமிடும் ஒரு வீட்டின் முன் புத்தர் வந்து நின்றார். கதவை ஒரு இம்மியளவு திறந்து பார்த்த வீட்டுக்காரார், வந்திருப்பது புத்தர் எனத் தெரிந்ததும் வெளியே பதற்றத்துடன் ஓடிவந்து, வீட்டிற்குள் வரச்சொல்லி அவரை அவசரமாக அழைத்தார். புத்தர் வீட்டிற்குள் வந்ததும் கதவை உள்தாழிட்டு அவரை அமரச் சொல்லி வேண்டினார். வீட்டிற்குள்ளேயே இருந்து உணவை உண்ணுமாறு புத்தருக்கு அவர் ஆலோசனை சொன்னார். 'ஐயனே இன்று வெளியில் நடமாடுவது மிகவும் அபாயகரமானது. கொலைகாரன் அங்குலீமாலா இப்பகுதியில் இருப்பதாகச் சொல்கிறார்கள். வேறு நகரங்களில் அவன் பல மனிதர்களைக் கொலை செய்திருக்கிறான் என்று எல்லோரும் சொல்கிறார்கள்.

மொழிபெயர்ப்பு
ம.மதிவண்ணன்



ஒவ்வொருமுறை அவன் யாரையாவது கொல்லும் போதும், கொலையுண்டவர்களின் கைவிரல்களில் ஒன்றைத் துண்டித்து தன் கழுத்தில் அணிந்துள்ள மாலையில் அதைச் சேர்த்துக் கொள்கிறான். நூறு பேரைக் கொன்று ஐநூறு பேரின் விரல்களைத் தன் கழுத்தில் மாலையாக அணியும் போது, அவன் மேலும் பங்கரம் மிக்க துஷ்ட சக்தியை அடைந்து விடுவான் என்று சொல்லுகிறார்கள். ஆச்சரியம் என்னவென்றால் தான் கொல்லும் மனிதர்களிடமிருந்து பிற பொருட்கள் எதையும் அவன் அபகரிப்பதில்லை என்பதுதான். அவனைக் கொல்வதற்காய்ப் பசனேதி அரசன் படைவீரர்களின் தனிப்படையையே உருவாக்கியிருக்கிறார். இவ்வாறு அவ்வீட்டின் தலைவர் சொன்னார்.

ஒரேயொரு மனிதனைக் கொல்வதற்காக அரசர் எதற்காக ஒரு முழுப்படையணிணையே நியமிக்கிறார்? புத்தர் கேட்டார்.

மரியாதைக்குரிய கௌதமரே! அங்குலீமாலா மிகவும் அபாயகரமானவன். அவன் போரிடும் திறமை மிகுந்தவன். ஒருமுறை அவனைச் சூழ்ந்துகொண்ட நாற்பதுபேரையும் அவன் வென்றான். அவர்களில் பெரும்பாலானோரை அவன் கொன்று விட்டான். தப்பிப் பிழைத்தவர் தங்களது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓட்டம் பிடிக்கவேண்டியதாயிற்று. அங்குலீமாலா ஜாலின் காட்டிலேயே ஒழிந்திருப்பதாகச் சொல்லப் படுகிறது. இப்போதெல்லாம் யாரும் அவ்வழியே போகத் துணிவதில்லை. சமீபத்தில்தான் ஆயுதமேந்திய இருபது காவலர்கள் அவனைப் பிடிப்பதற்காகக் காட்டிற்குள் நுழைந்தனர். அவர்களுள் இருவர் மட்டுமே உயிருடன் வெளியே வந்தனர். அப்படிப்பட்ட அங்குலிமாலாதான் இப்போ ஊருக்குள் தோன்றியுள்ளான். வேலைக்குக் கடைக்கு என எங்கும் எவரும் வெளியே வரத்துணிவின்றி இருக்கிறார்கள். அங்குலீமாலா குறித்த செய்திகளைச் சொன்னதற்கு அவருக்கு நன்றி செலுத்திவிட்டு வெளியே கிளம்புவதற்காகப் புத்தர் எழுந்து நின்றார். வீட்டிலேயே பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று அந்த மனிதர் புத்தரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். ஆனால் புத்தர் அதை மறுத்துவிட்டார். வழமையாச் செய்வதைப் போலப் பிச்சசை எடுப்பதைத் தொடர்வதன் மூலம் மட்டுமே மக்களின் நம்பிக்கையைத் தன்னால் காப்பாற்ற முடியுமெனப் புத்தர் கூறினார்.

தெருவின் வழியாக மெதுவாகவும் யோசனையுடனும் புத்தர் நடந்து போய்க் கொண்டிருந்த போது தொலைவிலிருந்து யாரோ ஓடிவரும் காலடிச் சத்தம் அவருக்குக் கேட்டது. அது அங்குலீமாலாதான் எனப் புத்தருக்குத் தெரிந்த போதும், அவர் ஒரு சிறிதும் அஞ்சவில்லை. அவர் தனக்குள்ளாகவும் தனக்கு வெளியிலும் நடக்கின்ற அனைத்தையும் குறித்த அவதானிப்புடன் அவர் மெதுவாக நடந்து போய்க் கொண்டிருந்தார்.

'நில்லு துறவியே! நில்லு.

> புத்தர் பதிலிறுத்தார். 'பிற உயிர்களுக்குத் தீங்கு ஏற்படுத்தும் செயல்களை நெடுங்காலத்திற்கு முன்பாகவே நான் நிறுத்திவிட்டேன். உயிரைக் காப்பதற்கு: மனித உயிர்களை மட்டுமல்ல, வாழும் அனைத்து உயிர்களையும் காப்பதற்கு நான் கற்றிருக்கிறேன். அங்குலீமாலா! எல்லா உயிர்களும் உயிர் வாழவே விரும்புகின்றன. சாவதற்கு அனைத்து உயிர்களும் அஞ்சுகின்றன. நாம் கருணை கொண்ட இதயத்தைப் பேணி, அனைத்து உயிர்களின் உயிரையும் பாதுகாக்க வேண்டும்.'
>
> 'மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பாய் இருப்பதில்லை. நான் எதற்காக மற்றவர்கள் மீது அன்பைச் செலுத்த வேண்டும்? மனிதர்கள் கொடூரமானவர்களாகவும் ஏமாற்றுக் காரர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் கொன்று தீர்க்கும்வரை நான் ஓயமாட்டேன்.'

அங்குலீமாலா கத்தினான்.

புத்தர் மெதுவான ஆயினும் உறுதியான அடிகளை எடுத்து வைத்துத் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தார். அங்குலீ மாலாவின் காலடிச் சத்தத்தை வைத்து அவன் ஓடி வருவதை நிறுத்தி கொஞ்சம் வேகமாகத் தன்னை நோக்கி நடந்து வருவதையும், தனக்கும் அவனுக்கும் இடையில் சிறியளவு இடைவெளியே இருக்கிறது என்பதையும் அவர் அறிந்து கொண்டார். புத்தருக்கு இப்போது அய்ம்பத்தாறு வயதாகி இருந்தாலும் அவரது பார்வைத் திறனும் கேட்புத் திறனும் முன்னெப்போதையும் விட மிகத் துல்லியமானவையாய் இருந்தன.

அவரிடம் அவரின் பிச்சைப் பாத்திரத்தைத் தவிர எதுவுமில்லை. ஒரு இளவரசராய் இருந்த போதுத் தற்காப்புக் கலையில் எவ்வளவு வேகமானவராக, விழிப்பானவராக இருந்தோம் என்பதை நினைவு கூர்ந்ததால் அவரிடம் ஒரு புன்னனை தோன்றியது. அப்போது மற்ற இளைஞர்களால் அவர்மீது ஒரு அடிகூட அடிக்க முடியாது. அங்குலீமாலா மிக நெருக்கமாக வந்து விட்டான். அவனிடம் ஆயுதம் வேறு இருக்கிறது என்பதைப் புத்தர் உணர்ந்து கொண்டார். புத்தர் அலட்டிக் கொள்ளாமல் தொடர்ந்து நடந்து சென்றார்.

புத்தருடன் வந்து சேர்ந்து கொண்டதும் அவருக்கு இணையாகவே நடந்து கோண்டே அங்குலீமாலா கேட்டான்.

'துறவியே உம்மை நான் நிற்கச் சொன்னேனே!. ஏன் நிற்கவில்லை?

நடப்பதைத் தொடர்ந்து கொண்டே புத்தர் சொன்னார். 'அங்குலீமாலா! நான் நிறுத்தி நீண்ட காலமாகிறது! நீதான் இதுவரை நிறுத்திக் கொள்ளவில்லை.'

வழக்கமற்ற இந்தப் பதிலைக் கேட்டு அங்குலீமாலா குழம்பிப் போனான். அவன் புத்தரின் பாதையை மறித்து நின்று கொண்டு புத்தரைப் போக விடாமல் நிற்கச் செய்தான். புத்தர் அங்குலீமாலாவின் கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்தார். மீண்டும், அங்குலீமாலாவுக்குக் குழப்பமே ஏற்பட்டது. புத்தரின் கண்கள் இரு நட்சத்திரங்களைப் போல ஒளிவீசின. இம்மாதிரி அமைதியும் சாந்தமும் தவழுகிற ஒருவரை அங்குலீமாலா இதுவரை சந்தித்ததே இல்லை. அவனைப் பார்க்கின்ற யாராய் இருந்தாலும் அஞ்சி நடுநடுங்கி ஓடிப்போவதே வழக்கம். ஏன் இந்தத் துறவியின் முகத்தில் அச்சம் சிறிதும் புலப்படவில்லை? ஒரு நண்பனை ஒரு சகோதரனைப் பார்ப்பதுபோல் புத்தர் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார். புத்தர் அங்குலீமாலாவின் பெயரைச் சொல்லவே செய்தார். ஆகவே அவருக்கு அங்குலீமாலா என்பவன் யார் என்பது தெரிந்தே இருக்கிறது. அவனது துன்மார்க்கமான நடத்தைகள் குறித்து அவருக்கு நிச்சயம் தெரிந்திருக்கிறது. ஒரு கொடூரமான கொலைகாரனை நேருக்கு நேர் சந்திக்கும் போது

அவரால் எப்படி இவ்வாறு அமைதியாகவும், பதட்டமின்றியும் இருக்க முடிகிறது? கருணை ததும்புவதும் சாந்தம் நிறைந்ததுமான புத்தரின் பார்வையை இதற்கு மேல் தாங்க இயலாது என அங்குலீமாலா அந்த நொடியிலேயே உணர்ந்தான். துறவியே! நான் நிறுத்தி நீண்ட காலமாகிறது என்று சொன்னீர். ஆனால் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறீர். நான் தான் இதுவரை நிறுத்திக் கொள்ளவில்லை என்றும் சொன்னீர். நீர் சொல்வதன் பொருள் என்ன?'

புத்தர் பதிலிறுத்தார். 'பிற உயிர்களுக்குத் தீங்கு ஏற்படுத்தும் செயல்களை நெடுங்காலத்திற்கு முன்பாகவே நான் நிறுத்திவிட்டேன். உயிரைக் காப்பதற்கு: மனித உயிர்களை மட்டுமல்ல, வாழும் அனைத்து உயிர்களையும் காப்பதற்கு நான் கற்றிருக்கிறேன். அங்குலீமாலா! எல்லா உயிர்களும் உயிர் வாழவே விரும்புகின்றன. சாவதற்கு அனைத்து உயிர்களும் அஞ்சுகின்றன. நாம் கருணை கொண்ட இதயத்தைப் பேணி, அனைத்து உயிர்களின் உயிரையும் பாதுகாக்க வேண்டும்.'

'மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பாய் இருப்பதில்லை. நான் எதற்காக மற்றவர்கள் மீது அன்பைச் செலுத்த வேண்டும்? மனிதர்கள் கொடூரமானவர்களாகவும் ஏமாற்றுக் காரர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் கொன்று தீர்க்கும்வரை நான் ஓயமாட்டேன்.'

புத்தர் சாந்தமாகப் பேசினார். அங்குலீமாலா! பிற மனிதர்களின் கைகளால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறாய் என்பதை நான் அறிவேன். மனிதர்கள் சில வெளைகளில் ஆகக் கூடியளவு கொடூரமானவர்களாக இருக்கக் கூடும். இந்தக் கொடூரம் என்பது அறியாமை, வெறுப்பு, மோக, பொறாமை ஆகியவற்றின் விளைவால் ஏற்படுகிறது. ஆனால் மனிதர்கள் புரிந்துணர்வு கொண்டவர்களாகவும் கருணைகொண்டவர்களாகவும் கூட இருக்க முடியும். நீ இதற்கு முன் எப்பொதாவது ஒரு பிக்குவைச் சந்தித்திருக்கிறாயா? பிற அனைத்து உயிரிகளின் உயிர்களையும் காப்பதற்கான உறுதி ஏற்றவர்கள் பிக்குகள்.

மோகம், வெறுப்பு, அறியாமை ஆகியவற்றை வென்று கடந்து செல்ல உறுதி ஏற்றவர்கள் அவர்கள். சக உயிர்களைப் புரிந்து கொள்ளுதல், அவற்றின் மீது அன்பு செலுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் வாழ்ந்து வரும் பிக்குகள் மட்டுமல்ல பல மனிதர்களும் இங்கு உண்டு.

அங்குலீமாலா! இவ்வுலகில் கொடூரமான மனிதர்கள் இருக்கலாம். ஆனால் இரக்கமுள்ள மனிதர்களும் நிறையப் பேர் இருக்கிறார்கள். விபரமற்றவனாக இருக்காதே. என்னுடைய பாதை கொடூரத்தையும் கருணையாக மாற்றக் கூடியது. நீ இப்போது போய்க் கொண்டிருப்பது வெறுப்பின் பாதையாகும். அப்பாதையில் போவதை நிறுத்து. அதற்குப் பதிலாக மன்னிப்பு, புரிந்துணர்வு, அன்பு ஆகியவற்றின் பாதையைத் தெரிவுசெய்.

அங்குலீமாலா துறவியான புத்தரின் கருத்துக்களால் மனம் இளகினான். ஆயினும் அவனது மனம் ஒரு குழப்பத்திற்குள் ஆட்பட்டது. அதோடு ஏற்கனவே இருக்கும் காயத்தை மேலும் வெட்டி ரணமாக்கி அதன்மேல் உப்பைத் தூவியதுபோல் அவன் திடுமென உணர்ந்தான். அவன்மீது கொண்ட அன்பினாலேயே புத்தர் பேசினார் என்பதை அவனால் காணமுடிந்தது. புத்தரிடம் வெறுப்போ, ஒவ்வாமையோ சிறிதும் இல்லை. மதிப்பு மரியாதைக்குத் தகுதியுள்ள ஒரு முழுமையான மனிதனாகவே அங்குலீமாலாவைப் புத்தார் பார்த்தார்.

மக்களால் புகழப்படுபவரும் புத்தர் என அழைக்கப்படுபவரும் எனத் தான் கேள்விப்படும் கவுதமர் தான் இந்தத் துறவியா?

'நீங்கள் தான் கவுதமரா?' அங்குலீமாலா கேட்டான்.

புத்தர் தலையசைத்தார்.

அங்குலீமாலா சொன்னான், 'முன்னமே நான் உங்களைச் சந்திக்க முடியாமல் போனது அவலந்தான். என்னுடைய அழிவின் பாதையில் நான் வெகுதூரம் போய்விட்டேன். திரும்பி வருவதென்பது இனிமேல் சாத்தியமில்லை.'

புத்தர் சொன்னார். 'இல்லை அங்குலீமாலா, ஒரு நல்ல செயலைச் செய்வதற்கு மிகுந்த தாமதம் என்றெல்லாம் ஒன்றுமில்லை.'

'என்னால் செய்யமுடிகிற ஒரு நல்ல செயல் என்று எதைச் சொல்கிறீர்கள்?'

'வெறுப்பு, வன்முறை ஆகியவற்றின் பாதையில் பயணிப்பதை நிறுத்து.' எல்லாவற்றையும் விட மிகப்பெரிய செயல் அதுவேயாகும் அங்குலீமாலா! உனக்கு முன்புறம் வேதனையின் கடல் பரந்து விரிந்து இருந்தாலும், நீ பின்னால் திரும்பிப் பார்த்தால் நீ அக்கடலின் கரையைக் காண்பாய்.'

'கவுதமரே! இப்போது நானே விரும்பினாலும் என்னால் திரும்பிப் போக முடியாது. நான் செய்த அத்தனை அநியாயங்களின் விளைவாக என்னை அமைதியாக வாழ ஒருவரும் விடப் போவதில்லை.'

புத்தர் அங்குலீமாலாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு சொன்னார். 'அங்குலீமாலா உனது வெறுப்பின் மனதைத் தூக்கித் தூர எறிந்து விட்டு மார்க்கத்தைக் கற்பதற்கும் உன்னை அர்ப்பணித்துக் கொள்வது என்று உறுதி மேற்கொள்வாயேயானால் நான் உன்னைப் பாதுகாக்கிறேன். புதிதாகத் தொடங்குவதற்கும் மற்றவருக்குச் சேவை செய்யவும் உறுதி எடுத்துக் கொள். அது மிக எளிதானது. நீ நுட்பமான அறிவுடைய மனிதன். உணர்வு கொள்தலின் பாதையில் உன்னால் வெற்றி பெற முடியும் என்பதில் எனக்கு ஐயம் ஒரு சிறும் இல்லை.'

அங்குலீமாலா புத்தரின் முன் முழங்காலிட்டான். தனக்குப் பின்புறமாகத் தரித்திருந்த வாளை உறையிலிருந்து எடுத்தான்.

அதைக் கீழே வைத்தான். புத்தரின் திருவடியில் முகங்குப்புற விழுந்து வணங்கினான். தனது கைகளைக் கொண்டு முகத்தை மூடிச் சத்தமாக அழத் தொடங்கினான்.

நீண்ட நேரம் அழுத பிறகு, தனது தலையை உயர்த்திப் பார்த்துச் சொன்னான். 'நான் எனது துன்மார்க்கமான வழிகளைத் தூக்கியெறிந்துவிட உறுதி மொழிகிறேன். நான் உங்களைப் பின்பற்றி உங்களிடமிருந்து கருணையைக் கற்றுக் கொள்வேன். என்னை உங்களுடைய சீடனாக ஏற்றுக் கொள்ள இறைஞ்சுகிறேன்.'

அந்தக் கணத்தில் வணக்கத்திற்கு உரியவர்களான சாரி புத்தர், ஆனந்தர், உபாலி, இம்பாலா, மற்றும் ஏனைய பிக்குகள் அவ்விடத்திற்கு வந்தனர். அவர்கள் புத்தரையும் அங்குலீமாலாவையும் சுற்றிச் சூழ்ந்து கொண்டனர். புத்தர் பாதுகாப்பாக இருப்பதையும் அவரது திருவடிகளில் சரணடைய அங்குலீமாலா தயாராவதையும் கண்ட அவர்களின் இதயங்கள் மகிழ்ந்து களிகூர்ந்தன. புத்தர் ஆனந்தரிடம் அவரிடம் கூடுதலாய் இருந்த துறவிக்குரிய ஆடைகளை அங்குலீமாலாவிடம் வழங்கக் கேட்டுக் கொண்டார். புத்தர், சாரி புத்தரிடம் அங்குலீமாலாவின் தலையை மழிப்பதற்கு உபாலிக்கு ஒரு கத்தியைக் கடனாகத் தரமுடியுமா எனக் கேட்கச் சொன்னார்.

அங்குலீமாலா அங்கேயே அப்போதே துறவியாகத் தீட்சை பெற்றுக் கொண்டார். அங்குலீமாலா முழங்காலிட்டு, திரிசரணம் சொல்லி, உபாலியால் பவுத்த தீட்சை அளிக்கப் பெற்றார். பிறகு அவர்கள் அனைவரும் ஒன்றாக ஜேடவனத்திற்குத் திரும்பினார்கள்.

அடுத்து வந்த பத்து நாட்களுக்கு உபாலியும் சாரி புத்தரும் அங்குலீமாலாவுக்கு பவுத்த துறவிக்குரிய மத நடைமுறைகளையும் தியானத் திற்குரிய நடைமுறைகளையும் பிச்சை ஏற்றலுக்கான வழியையும் கற்றுத் தந்தனர். தனக்கு முன்பாகத் துறவறம் ஏற்ற எந்தப் பிக்குவைவிடவும் அங்குலீமாலா கூடுதலான முயற்சியை மேற்கொண்டார். அவரது துறவறச் சடங்குகள் நடந்ததற்குப் பிறகு இருவாரங்கள் கழிந்த நிலையில் அங்குலீமாலாவைப் பார்த்த புத்தரே அவரது மாறுதலைக் கண்டு அசந்து போய்விட்டார். சாந்தமும் அடக்கமும் அங்குலீமாலாவிடம் ஒளிவீசியதால் மற்றத் துறவிகளிடம் அரிதாய்க் காணப்பட்ட சாத்வீகத் தோற்றம் காணப்பட்டது. பிற துறவிகள் அவரை அகிம்சகா என்று அழைத்தனர். அப்பெயருக்கு வன்முறையற்றவன் என்பது பொருள். உண்மையில் பிறக்கும் போது அவரக்கு அப்பெயர்தான் இடப்பட்டிருந்தது. அகிம்சகாவின் பார்வையில் நிரம்பியிருந்த காருண்யம் என்பது புத்தரைத் தவிர்த்த வேறு எந்தப் பிக்குவிடமும் இந்தளவு நிரம்பியிருக்கவில்லை என்பதால், அகிம்சகா என்ற பெயர் அவருக்குப் பொருத்தமான ஒன்று எனப் பிற சீடர்கள் கண்டு கொண்டார்கள்.

ஒருநாள் காலையில் புத்தர் சாவத்தி நகருக்குப் பிச்சையேற்க அகிம்சகா உள்ளிட்ட ஐம்பது பேருடன் வருகை புரிந்தார். அவர்கள் நகரத்தின் நுழைவாயில் கதவுகளை அடைந்த போது அரசர் பசனேதியைச் சந்தித்தார்கள். அரசர் ஒரு குதிரையின்




மீதேறி, போர்வீரர்களின் ஒரு படையணிக்குத் தலைமையேற்று நடத்திச் சென்று கொண்டிருந்ததார். ஒரு போருக்கு முழுவதும் தயாரான நிலையில் அரசரும் அவரது படைத் தளபதிகளும் உடையணிந்திருந்தனர். புத்தரைக் கண்டதும் அரசர் குதிரையிலிருந்து கீழிறங்கி வந்து அவரை வணங்கினார்.

புத்தர் கேட்டார் 'மன்னர் பெருமானே! என்ன ஆயிற்று? தங்களின் எல்லைக்குள் மற்றொரு ராஜ்ஜியத்தின் அரசன் படையெடுத்து வந்து விட்டானா?'

அரசர் பதிலிறுத்தார். 'அய்யனே! கோவல நாட்டின்மீது எவரும் படையெடுத்து வந்துவிடவில்லை. கொலைகாரன் அங்குலீமாலாவைப் பிடிக்கவே வீரர்களைத் திரட்டிக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறேன். அவன் மிகவும் அபாயகரமானவன். அவனை இதுவரையிலும் யாராலும் பிடித்து நீதியின் முன் நிறுத்த முடியவில்லை. இருவாரங்களுக்கு முன்புதான் அவன் நகரத்தில் தென்பட்டிருக்கிறான். எனது மக்கள் இடைவிடாத அச்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறனர்.

புத்தர் கேட்டார். அங்குலீமாலா உண்மையிலேயே அந்தளவுக்கு அபாயகரமானவனா?'

அரசர் சொன்னார் 'அய்யனே! அவன் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் குழந்தைக்கும் ஆபத்தானவன். அவனைத் தேடிப்பிடித்துக் கொல்லும்வரை என்னால் ஓய முடியாது.'

புத்தர் கேட்டார் ஒருவேளை அங்குலீமாலா தனது மோசமான செயல்களுக்காக மனம் வருந்தி, மீண்டும் இனிமேல் எவ்வுயிரையும் கொல்வதில்லை என்ற உறுதியேற்றிருந்தால், ஒரு பிக்கு ஏற்கும் உறுதி மொழிகளை மேற்கொண்டு, அனைத்து உயிர்களையும் மதிக்கிறான் என்ற நிலை ஏற்பட்டால, அப்போது தாங்கள் அவனைப் பிடிக்கவும் கொல்லவும் வேண்டுமோ?

'ஐயனே! ஒரு வேளை அங்குலீமாலா உங்கள் சீடராக மாறி, கொல்லாமை விரதமேற்றிருந்தால், புனிதமானதும், மாசு மருவற்றதுமான ஒரு பிக்குவின் வாழ்க்கையை வாழ்வதாக இருந்தால் நான் அடையும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவனது உயிரைப் பாதுகாத்து அவனுக்கு விடுதலை அளித்து மட்டுமல்லாமல் அவனுக்குத் தேவையான துவராடைகள், உணவு, மருந்து ஆகியவற்றையும் நான் பரிசாக அளிக்கிறேன். ஆனால் அவ்வாறான நிலை ஏற்படும் வாய்ப்பே இல்லை.'

புத்தர் தனக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த அகிம்சகாவைச் சுட்டிக்காட்டிச் சொன்னார், 'மன்னர் பெருமானே! இந்தத் துறவி வெறு யாருமல்லர். அங்குலீமாலாவேதாம். பிக்குகளுக்கான விரதங்களை அவர் மேற்கொண்டிருக்கிறார். கடந்த இருவாரங்களாக அவர் புது மனிதராக மாறிவிட்டார்.'

பயங்கரமான கொலை காரனுக்கு அவ்வளவு நெருக்கமாகத்தான் இவ்வளவு நேரம் நின்று கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்ததும் அரசர் பசனேதி அச்சத்தில் உறைந்து விட்டார்.

புத்தர் சொன்னார் 'மன்னர் பெருமானே! அஞ்சத் தேவையில்லை. பூமியிலுள்ள வெகுசிலரான நற்குணசீலர்களைவிட அங்குலீமாலா குணவானாக இருக்கிறார். இப்பொழுது நாங்கள் அவரை அகிம்சகர் என்று அழைக்கிறோம்.'

அரசர் அகிம்சகரை எச்சரிக்கையுடனும் முழுமையாகவும் உச்சிமுதல் உள்ளங்கால் வரை ஆராய்ந்து பார்த்தார். பிறகு அவரை வணங்கினார்.

ஒருநாள் வணக்கத்திற்குரிய அகிம்சகர் மேனியெங்கும் இரத்தம் வடிய, நடக்கக் கூட முடியாதபடி பிச்சையேற்றலில் இருந்து திரும்பினார். இளஞ்சீடரான சுவாஸ்தி அவருக்கு உதவ ஓடினார். அகிம்சகர் தன்னனப் புத்தரிடம் கைத்தாங்கலாக அழைத்துச் செல்லக் கேட்டுக் கொண்டார். நகரத்தில் பிச்சையேற்றுக் கொண்டிருந்த போது, அவரைப் பழைய அங்குலீமாலா என்று சிலர் அடையாளம் கண்டு கொண்டதாகப் புத்தரிடம் விளக்கினார். அவரைச் சுற்றி வளைத்துக் கொண்டு அடிக்கத் தொடங்கினார்கள். அவர்களது அடிகளைத் தடுக்காமல், தனது கைகளைத் தாமரை மொட்டுப் போல் குவித்தக் கொண்டு, அவர்கள் தங்கள் ஆத்திரத்தையும் வெறுப்பையும் வெளிப்படுத்த அனுமதித்துக் கொண்டிருந்தார். அவர் இரத்த வாந்தி எடுக்கும் வரை அடித்து நொருக்கினார்கள் அவர்கள்.

அகிம்சகர் காயமடைந்தி ருப்பதைப் பார்த்ததும் புத்தர் ஆனந்தரை அழைத்து ஒரு பாத்திரத்தில் தண்ணீரையும் ஒரு துண்டையும் அவரது காயங்களைக் கழுவுவதற்காகக் கொண்டுவரச் சொன்னார். புத்தர் சுவாஸ்தியை அழைத்து மூலிகைகளைப் பறித்த வரச் சொல்லி அதை அரைத்து மருந்தாகத் தயாரித்துத் தரச் சொன்னார். அது அகிம்சகரின் காயங்களில் இடுவதற்காக.

மிகக் கடுமையான வலி இருந்த பொழுதும் அகிம்சகர் அழவில்லை. புத்தர் சொன்னார் 'இன்றைய உங்களது வேதனைகள், கடந்த காலத்தின் அனைத்து வேதனைகளையும் துடைத்துவிடும். அன்பினாலும், விழிப்பினாலும், தாங்கிக் கொள்ளப்படும் வேதனை ஓராயிரம் ஆயுட் காலங்களின் மோசமான வெறுப்புணர்வைத் துடைத்துவிடக் கூடியது. அகிம்சகரே! உங்களது உடை கிழிந்து கந்தலாகிவிட்டது. உங்கள் பிச்சைப்பாத்திரம் எங்கே?'

'ஐயனே! அவர்கள் அதை உடைத்து நொருக்கிவிட்டனர்.'

'உங்களுக்கு ஒரு புதிய துவராடையும் பாத்திரமும் கொடுக்க நான் ஆனந்தரைச் சொல்கிறேன் அகிம்சகரே!'

அகிம்சகரின் காயங்களுக்கு மருந்து தடவிக்கொண்டிருக்கும்போது அகிம்சை என்பதற்கான எவ்வளவு சிறந்த எடுத்துக்காட்டாக அகிம்சகர் திகழ்கிறார் என்பதை நினைத்து சுவாஸ்தி வியந்தான். முந்தின நாள் பிச்சையேற்கச் சென்ற போது வணக்கத்திற்குரிய அகிம்சகர் சுவாஸ்திக்குச் சொன்னார்.

காட்டில் ஒரு மரத்தின் கீழ் பிரசவ வெதனையில் துடித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணை அகிம்சகர் பார்த்தார். அந்தப் பெண் தாங்கமுடியாத வேதனையிலும் குழந்தையைப் பிரசவிக்க முடியாத வேதனையிலும் இருந்தாள். அகிம்சகர் அழுதே விட்டார். 'எந்தளவுக்குத் தாங்க முடியாத வேதனை.' என்ன செய்வதென்று கேட்பதற்காக அவர் புத்தரிடம் ஓடிவந்தார்.

புத்தர் சொன்னார் 'திரும்ப அந்தப் பெண்ணிடம் ஓடிப்போய், 'அம்மா! நான் பிறந்தது முதலே வேண்டுமென்றே எந்த உயிருக்கும் தீங்கு இழைக்கவில்லை. அந்த நற்செயலின் விளைவாய் நீயும் உன் குழந்தையும்அமைதியாகவும் பாதுகாப்பாகவும் இருப்பீர்கள். என்று சொல்லுங்கள்.' என்றார்

அகிம்சகர் மறுத்தார்.' இப்படியொரு கருத்தை நான் சொன்னால், நான் சொல்வது பொய்யாகவே இருக்கும். உண்மை என்னவெனில் நான் ஏகப்பட்ட உயிர்களுக்குத் தீங்கு இழைத்திருக்கிறேன் என்பதே.'


புத்தர் சொன்னார் 'அப்படியானால், அந்தப் பெண்ணிடம் 'அம்மா! சிறந்த தம்மத்தில் நான் பிறந்த நாள் முதலாய் வேண்டுமென்றே நான் எந்த உயிருக்கும் தீங்கு இழைக்கவில்லை. அந்த நற்செயலின் விளைவாய் நீயும் உன் குழந்தையும் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் இருப்பீர்கள்.' என்று சொல்லுங்கள்'


அகிம்சகர் காட்டுக்குள் ஓடிப்போய் அந்த வார்த்தைகளைச் சொன்னார். சில நிமிடங்களுக்குள் அப்பெண் பாதுகாப்பாகக் குழந்தையைப் பிரசவித்தாள்.

வணக்கத்திற்குரிய அகிம்சகர், புத்தரின் மிக உயரிய பாராட்டுக்களைப் பெற்று மிக நீண்ட தொலைவிற்கு புத்தரின் பாதையில் பயணித்தார். அ

# உலோகத்தின் எழுத்துக்கள்

## கறுப்பு 'யூலை'யும் கருகிய மூளையும்.






மனிதர்கள் மகத்தானவர்கள்.

அதிலும் மனித நேயம் கொண்டு வாழ்பவர்கள் புனிதர்கள்.

புனிதர்கள் பல விதமானவர்கள்.

அவர்கள் சுட்டிநிற்கும் புனிதங்கள் பல்வேறு விதமாக இருப்பதனால் அவர்களின் விதமே பலவிதமாக இருந்து விடுகிறது.

அவர்களில் சிலர் நல்லவர்களாக இருக்கிறார்கள்.

அல்லது நல்லவர்களைப் போல இருக்கிறார்கள்.

போல இருப்பது என்பது நடிப்பு. அதிலும் எல்லோருக்கும் நல்லவர்களாக இருப்பவர்கள்?

போலிகள்.

போலிகள் ஒருபொழுதிலும் எதையுமே வெளிப்படையாகப் பேச முனைவதில்லை.

அது தம்மையும் தமது இருப்பையும் உருக்குலைக்கும் என்ற அச்சத்தில் மவுனமாகக் கடந்து போக எத்தனிப்பார்கள்.

மவுனமும் ஒரு மொழி என்பதை அவர்கள் அறியாதிருக்கமாட்டார்கள். அதனால்தான் சொல்கிறேன் அவர்கள் மவுனமாகக் கடப்பதுவும் தங்களை எங்காவதொரு இடத்தில் அடையாளம் இடும் என்பதனையும் அவர்கள் நன்கு அறிவார்கள்.

அதனால்தான் வெளிப்படையில் தோன்றும் அடையாளத்தைக் கண்டு அவர்கள் அச்சப்படுகிறார்களே ஒழிய தங்களது மவுனத்தால் தாங்கள் அடையாளப்படும் இடங்களை அவர்களே கவனிப்பதில்லை.

எல்லோருக்கும் நல்லவர்களாக இருப்பதனால் அவர்கள் ஒளிந்து கொள்ள இடம் கிடைப்பதில்லை.

கடலில் இறக்கப்பட்ட கப்பலை இறுகப் பற்றிப் பிடித்தபடியிருந்தாலும் சுக்கான் வளையும் இடத்திற்கே

கற்சுறா

அடித்துச் செல்லப்படுவீர்கள். அல்லது காற்று உங்களை வேறு ஒரு திசைக்கு அடித்து அழைத்துச் செல்லும். இறுகப்பற்றியிருக்கும் கைகளால் நீருக்குள் நீங்கள் விழுந்து விடாதிருப்பீர்கள் என்பதுவும் நீரின் கையிலேயேதான் இருக்கிறது.

அதுவும் உங்கள் கைகளில் இல்லை.

இதுகூட உங்களுக்கான கதை மட்டுமல்ல.

இராச்சியத்தில் நிச்சயிக்கப்பட்ட வாழ்வைக் குலைத்தது ஒரு கதையின் களம் மட்டுமல்ல.

இரவின் அமைதியில் அல்லது இருளின் மறைவில் இருந்து நீட்டப்பட்ட எந்த வாள்களும் எந்தத் துப்பாக்கிகளும் யார் மீதும் பூக்களைச் சொரிந்ததில்லை. அச்சப்பட்ட இரவுகளை வாழ்காலம் பூராவும் சுமந்திழுத்த மண்ணிலிருந்தும் குழந்தைகள் பிறந்து கொண்டேதான் இருந்தார்கள். இருளுக்கும் இருளின் அமைதிக்கும் இடையில் விழித்திருக்க முடியாதிருந்தது பெரியவர்களுக்கு மட்டுமல்ல அந்தக் குழந்தைகளுக்குந்தான். எத்தனையோ இரவுகளில் வேலிக்கரை மரச் சருகுளினிடையே அவர்கள் ஒரு பிணத்தைப் புதைப்பது போல் உயிரைப் புதைத்து விழித்திருந்த காலங்களை நீங்கள் அறிவீர்களா? இந்த இரவுகள் என்ன நமக்கு வெள்ளை இரவுகளா? இந்த இனத்திற்கு ஒவ்வொரு இரவுகளும் தம் குழந்தைகளைக் காவுகொடுத்த இரவுகளே!

உங்களின் கறுப்பு யூலையின் அலையில் நெஞ்சாங்குழி அடிபட்டு சிதிலமாய் உங்களிடம் வந்தடைந்த உங்கள் ‘தோட்டக் காட்டானை’ நீங்கள் எங்கே குடியமர்த்தினீர்கள்? என்று வரைபடம் கீறி முன்னிருந்து பாருங்கள்.

இன்றைய உங்களின் கறுப்பு யூலைக் கொண்டாட்டத்தின் அர்த்தம் உங்களுக்கே புரியக்கூடும்.

கைவிடப்பட்ட காணிகளிலும் மனிதர்கள் வாழவே முடியாத தரைகளிலும் அவர்களை உறங்க வைத்தீர்கள். அவர்களின் படுக்கைகளின் கீழே மாரிமழை ஓடியது. அந்த வாழ்க்கைக்குள்ளும் கூட எத்தனையோ பெண்குழந்தைகளுக்கு நீங்கள் கொடுத்த துன்புறுத்தல்களை நான் அறிவேன். நீங்கள் அவற்றை ஒருபொழுதிலும் வெளியே சொல்லப் போவதில்லை. ஏனெனில் நீங்கள் ஈழத்தமிழ்த் தேசியத்தின் காவற்குஞ்சுகள்.

நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள்! வீதிக்கு மண்ணெடுத்த குழிகளில்





கொட்டிலிட்டு சேற்றுக்குள் படுத்திருந்த சனத்திற்கு, காட்டிற்குள் காணிபிரித்து கொட்டிலிடக் காட்டிவிட்டுச் சென்ற ‘வீரசிங்கம்‘ என்பவனை வன்னியின் ஒரு வீதிக்கருகில் சுட்டுப் போட்டார்கள் உங்கள் மேதகர்கள். இராணுவமே வரப்பயந்த வீதியில் அவனைச் சுட்டுக் கொலை செய்துவிட்டு இராணுத்தைச் சாட்டினார்கள் உங்கள் மேதகர்கள். தங்கள் வாழ்விற்கு வழிகாட்டிய சீவனைப் பறிகொடுத்த சனத்திற்கு அதன் பின்வந்தஇரவுகள் என்ன வெள்ளை இரவுகளாகவா இருந்திருக்கும்?

அறிந்ததைக்கூட வெறும் கதைகளாகவேனும் பேசத் துணியாதவர்கள் நீங்கள். அவற்றின் வலிகளை ஒரு பொருட்டாகவே பேசாதவர்கள் நீங்கள். ஆனால் மொத்த சமூகம் பற்றிய கரிசனை கொண்டவர்களாக அடையாளம் கொள்கிறீர்கள் பொதுவில்.

உங்களுக்கு நன்றாகவே தெரியும் தூக்கத்தின் சடுதியில் பாய்ந்த சன்னங்கள் வெறுமனே யூலை மாதத்தில் மட்டுமே பாய்ந்தவை இல்லை என்பது.

உங்களுக்கு நன்றாகவே தெரியும் உங்களிடம் இருந்து பாய்ந்த

சன்னங்கள் யாரையெல்லாம் கொன்று போட்டது என்பது.

உங்களுக்கு நன்றாகவே தெரியும் உங்கள் கைகளிலிருந்து பாய்ந்த சன்னங்கள் யார் வாழ்வைக் குலைத்தது என்பது.

உங்களுக்கு நன்றாகவே ஞாபகம் இருக்கும் அந்தக் காலங்களிலெல்லாம் எவ்வாறு நீங்கள் சந்தோசம் கொண்டீர்கள் என்று.

ஒவ்வொரு கொலைக்கும் நீங்கள் கொண்ட சந்தோசத்தைப் போலவே, நீங்கள் ஆடிய ஆனந்தத் தாண்டவம் போலவே 83இன் யூலைக் காலத்தில் ஒவ்வொரு கொலையினையும் அவர்கள் ரசித்தார்கள். அன்று அவர்கள் செய்ததற்கும் ரசித்ததற்கும் பின்னர் நீங்கள் செய்ததற்கும் ரசித்ததற்கும் இடையில் என்ன வித்தியாசம் இருக்கிறது ?

கடந்த காலத்தில் அது எந்தக் காலமாயினும் நம்மிடையே நடந்த எந்தக் கொலையை நீங்கள் வேண்டாம் என்றீர்கள்? அதனை எதிர்த்துக் கோசம் எழுப்பினீர்கள்?

1986இல் உங்கள் கறுப்பு யூலையினைவிடவும் மோசமாகவும் ஆக்குரோசமாகவும் நீங்கள் ரசித்துச் செய்த கொலைகளை எப்படி அடையாளம் காட்டுவது? அந்தக் கொலைகளுக்கெல்லாம் கறுப்பு வர்ணத்தை விட்டு வேறு என்ன வர்ணம் கொண்டு நாங் கள் அழைப்பது?

தின்னவேலியில்

கந்தன் கருணையில்

காத்தான் குடியில்

துணுக்காய் வதைமுகாமில்

வெருகல் ஆற்றில்

முள்ளிவாய்க்காலில் என்று உங்கள் கைகளிலிருந்த சன்னங்கள் பாய்ந்த பொழுது நீங்கள் அடைந்த சந்தோசத்திற்கு என்ன அளவு இருந்தது?

ஒரு பக்கம் கொலைகளை ஆதரித்துக் கொண்டு இன்னொரு பக்கம் கொலைகளை எதிர்த்துக் கொண்டிருப்பது மனநோயன்றி வேறென்னவாக இருக்கும்?

**ஒரு எழுத்தாளனுக்கும் கலைஞனுக்கும் சமூக அக்கறை கொண்டவர்களுக்கும் இருக்க வேண்டிய தர்மத்தைத் தொலைத்து அத்தனை வன்முறைகளையும் ஆதரித்து நின்றவர்கள் நீங்கள். இப்பொழுதும் கறுப்பு யூலை என்று கண்ணீர் சொரிகிறீர்கள். அது உண்மையான அறிவிலிருந்து எழுவதல்ல. இன்னும் எஞ்சியிருக்கும் எதையாவது அழித்துவிட்டுப் போகவும் அதனால் சுய இன்பம் காணவும் கடந்த காலத்தில் என்னவெல்லாம் களை கட்டி ஆடினீர்களோ அதன் தொடர்ச்சியன்றி வேறில்லை.**

பாலியல் வக்கிரம் கொண்டவன் பாலியல் துன்புறுத்தல் பற்றிப் பேசுவதைப்போல்: அன்றாடம் குழந்தைகளைத் துன்புறுத்தும் ஒருவன் சிறுவர் துஸ்பிரையோகம் பற்றிப் பேசுவதைப் போல் கொலைகளை ஆதரித்து நின்ற நீங்கள் எல்லோரும் திடீரெனக் கொலைகளை எதிர்ப்பதாகத் தோன்றுவது நியாயம் இல்லைத்தானே?

எமது ஈழம் என்பது தேசமல்ல.

அது ஒரு கதை.

அது கதையுமல்ல. அது ஒரு பெருங்கதை.

அந்தப் பெருங்கதைக்குள் நீங்கள் படுகொலையாளர்களாக இருந்தீர்கள்.

உங்களிடம் அதற்கான பயிற்சி முகாங்கள் இருந்தன.

உங்களிடம் வதை முகாங்கள் இருந்தன.

அதற்கான ஆதரவினை நீங்கள் முழுமையாகக் கையிலேயே கொண்டிருந்தீர்கள்.

ஒரு எழுத்தாளனுக்கும் கலைஞனுக்கும் சமூக அக்கறை கொண்டவர்களுக்கும் இருக்க வேண்டிய தர்மத்தைத் தொலைத்து அத்தனை வன்முறைகளையும் ஆதரித்து நின்றவர்கள் நீங்கள். இப்பொழுதும் கறுப்பு யூலை என்று கண்ணீர் சொரிகீறீர்கள். அது உண்மையான அறிவிலிருந்து எழுவதல்ல. இன்னும் எஞ்சியிருக்கும் எதையாவது அழித்துவிட்டுப் போகவும் அதனால் சுய இன்பம் காணவும் கடந்த காலத்தில் என்னவெல்லாம் களை கட்டி ஆடினீர்களோ அதன் தொடர்ச்சியன்றி வேறில்லை.

நமக்கு யுத்தம் தந்த பாடம் கொஞ்சமல்ல.

நமக்கு யுத்தம் அழித்த உயிர்களும் கொஞ்சமல்ல.

இருந்தும் என்ன கேவலம் என்றால்,

நாங்கள் சமாதான காலத்திலும் அழிந்தோம்.

அத்தனை சமாதான காலத்திலுந்தான்

எமது சிறுவர்களை நித்திரைப் பாயில் தூக்கிச் சென்றீர்கள்.

அத்தனை சமாதான காலத்திலுந்தான்

அவர்கள் கழுத்தில் சயனைட் குப்பியைக் கட்டினீர்கள்.

அத்தனை சமாதான காலத்திலுந்தான்

அவர்களுக்கு மொட்டை அடித்து உங்களின் சீரற்ற உடையை மாட்டினீர்கள்.

அத்தனை சமாதான காலத்திலுந்தான்

அத்தனை பெற்றோரையும் கண்ணீரும் சோறுமாக அலைய வைத்தீர்கள்.

எல்லாம் செய்த மனங்களால்,

நீங்கள் 'கறுப்பு யூலை' யை மட்டும் கதையாக்குவது ஒன்றும் தப்பில்லை. செய்யுங்கள்.

இனி உங்கள் காலம் மட்டுமில்லை. அ



# கோதாரிச் சாமீ 'ஈ'!

## சிறினோ சிறி சிறிசு

ஒன்று.

கோதாரியிலை போக, நான் 'இந்த கோதாரியிலை விழுவான்' கோதாரித்தனமாய் கேட்ட கோதாரிக்கேள்விக்கு, கோதாரியிலை அழுந்த, 'ஓம்,' எண்டு சொல்லிப்போட்டன். 'கோதாரியிலை விழுவான்' விட்டானா.?!

அழுங்குப்பிடியாய் பிடிச்சுக் கொண்டான் கோதாரி. எதுக்கும் கனக்க அழுங்காமல் (ஷ பயப்படாமல்), எனக்கு மாத்திரம் அழுங்குகிற இந்த கோ.விழுவான், இந்த கோதாரி விஷயத்திலை மட்டும் அழுங்குகிற மாதிரி தெரியேல்லை.

இஞ்சை, இந்த ' கோதாரி விழுவான்' ஆனவன் என்ரை நம்பர் வண் வெடிவால் குட்டிவிலா ஆவான்.!

'கோதாரியை' விட்டிட்டு விஷயத்துக்கு வந்தால்,: விஷயம் ரொம்ப ஸிம்பிள். அதேநேரம், இதே விஷயம் ரொம்ப கொம்பிளிகேற்றட்டும்..!!!

சிம்பிள் விஷயம் இதுதான்.

நான் குறுகிய காலத்தில் (கள்ள) சாமியார் ஆவது... அஃதாவது, (கள்ள) வேஷம் போடுவது.

என்ரை ' வெடிவால்' குட்டிவிலா, எனக்கு பிரதம அஸிஸ்ரென்ற்றாக 'வால் வெடி' வேலை பார்ப்பது.

(பணமும் புகழும் குவியும். இளம்பெட்டைகளும் காலுக்கை ஒண்டு, கமக்கட்டுக்கை ரண்டு, கையுக்கை மூண்டு, கவட்டுக்கை நாலு எண்டு குவிவினம்.!)

As simple as that/

Oh…No… Not too fast.

Not that easy.

சாமியாராவதோ, இல்லாட்டிப் போனால் மேற்படி பணம், புகழ், பெட்டைகளைக் குவிப்பதோ ஈஸி இல்லை. அது, நாள் படக்கூடிய, பெரிய புறொசீஜர்.

கொஞ்சம் கொஞ்சமாய்த்தான், அம்மிக்கு அடிமேல் அடி அடிக்க வேணும்.

'அடிச்சாப்போச்சு', எண்டு முடிவு எடுத்து விட்டேன்.

'அளவெட்டியா கொக்கா?!! ஃ ஆய்ஞ்ங்!

,இந்த கொக்குக்கதை நீ(ஈ) ளம் அகலமும். (ப)டக்கெண்டு சொல்லேலாது. ஆனா, கௌஸிக முனிபுங்கவரென்ன, விஸ்வாமித்ர ராஜ ரிஷியென்ன, வஸிஷ்ட மஹா தபஸியென்ன, முழுசு முழுசெண்டு 'முழு'சியும் எரியாத கொக்கூ(ஊ) இக்கொக்கு. 'முழு'சென்ன, 'அரை''சு' எண்டு ஆடினாலும் பஸ்மமாகாது.

அது மாத்திரமல்ல, மற்றவர் மண்டையில் எச்சமிடாத கொக்கூ(ஊ) எண்ட சொற்ப வியளங்களைச் சொல்லலாம். கொக்கெரிக்காக் கொங்'கணவர்',: ('கணவர்', கற்பு மாதிடம் பணிவிடைக்கு முன்னுரிமை கொண்டதால் உறுத்து முழுசி சாம்பராக்க முடியாமலுக்கு மொக்கையீனப்பட்டவர்.)

விதேக நாடு போய் மிதிலை வியாபரெண்ட இறைச்சிக் கடைக்காறனை குருவாக ஏத்து, விழுக்தி அடைஞ்ச சுவாரசியமான கதை உட்பட மிச்சத்தை பிறகொருக்கா சொல்லலாமெண்டு, இப்போதைக்கு சொல்லாமல் விடலாம்.

அம்மி நகருதோ இல்லையோ? ரண்டில் (கமக்கட்டு) ஒண்டு (கால்),: நாலில் (கவடு) மூண்டு (கை) எண்டு ஒரு 'கை' பார்த்து விடத்தான் கிடக்கு.

சனத்தை பேய்க்காட்டிறது ஈஸி ஆனால்( உம்), கயிட்டம்.

கோதாரீ, ஈ..!

இரண்டு.

ஆரம்பமே போதையிலைதான் துவங்கிச்சுது. கோதாரி.

பாரில் போய் தண்ணி அடிச்சபடி பிளான் பண்ணுவதாக முடிவு செய்தோம்.

That was a secret/closed meeting in

an open bar.

தமிழிலைதான் கதைச்சம், எண்டாலும் ஒரு முன் ஜாக்கிரதையாய், பாரின் கோடோகோடியின் தொங்கல் மேசையின்ரை வெல்வெற் 'பளக்குபளக்கும்' குஷன் கொண்ட ரண்டு நாற்காலிகளில் குத்திக்கொண்டோம்.

வாஸ்தவத்தில் அது நாலு நாற்காலி மேசை. ஒரு சோடி கதிரைகளைத்

தூக்கி அங்காலை கக்கூஸ¬களுக்கு போற ஹொறிடோர் பக்கமாய்வைச்சு விட்டன். ஆரும் வந்து உட்கார சான்ஸ் இல்லையெண்டாலும், ஒரு முன் எச்சரிக்கைதான்.

HAAAAPP…!

தூர, பழுப்புத்தள, பளிங்குத்தன பாதி நீள்வளைய பார் கௌன்ரறில் ஏழெட்டுப்பேர் குந்தி, குடியடித்துக் கொண்டிருந்தனர். மேலையும் கரைச்சுவர் மூலைகளிலையும், சொர்க்கத்திலை பூட்டியிருக்கிற கணியத்துக்கு (?) கொழுவியிருந்த பல்வர்ண மின் குமிழ்கள் ஆளையாள் பார்த்து கண் சிமிட்டின கிலாரடி மாயாஜாலம்தூக்கலாய்த்தெரிஞ்சுது. அதிலும், இளம்பச்சை 'ஜாலா' மின் விளக்கொண்டு கண்ணடிச்ச லாவகம், இளம்பெட்டையொண்டு கண் வெட்டின கணியத்துக்கு கிலாரடிச்சுது.

கௌன்ரறில், வாலிப வாலை ஒரு சோடி, நெருங்கிப் பிணைஞ்சு, பினைஞ்சு கொண்டிருந்த 'வில்புறிச்சான் வெளாட்டு' இஞ்சையியிருந்து பார்க்கவே விசித்திரமாய் தெரிஞ்சுது.

பொடி தலையை முட்ட, ஒட்ட மழிச்சு, அறம்புறமாய் றற்றூ கீறியிருந்தது. நெத்திக்கு நேரை மேலை, முன் மண்டை நடுவிலை குத்தியிருந்த 'பச்சை', 'சுவஸ்திகா' சின்னம் போலை தெரிஞ்சுது.

ஆனால், அது இந்து, சமண, புத்தத்து குறியீடோ அல்லது ஹிட்லர் கோஸ்டியின் இலச்சினையோ, எண்டு தெரியேல்லை.

முனி பாணினி சமஸ்கிருத இலக்கணப்புத்தகத்திலை முதல் முறையாய் சொன்ன சுவஸ்திகா, பழைய கிரேக்க, மெசொப்பத்தேமிய பிரதேசங்களிலும் இருந்ததெண்டது ஆச்சரியந்தான்.!

பொடிச்சி உடம்பு பூரா பச்சை குத்தியிருந்தாள். கொஞ்சமாய் போட்டிருந்த பிட்டம் காட்டிற கட்டைக்கழிசான், அநேகமாய் மிச்ச உடம்பு பூரா காட்டிற, 'எப்பன் துணி' முலைக்கச்சை நீங்கலாய் எல்லாத் தோல் பிரதேசங்களிலும் அம்பாரம் படங்கள் கீறியிருந்தது தெரிஞ்சுது.

அங்கங்கையும் கீறித்தான் இருப்பாள். ஆனா, அத்தப்பெண்மணியின் கொஞ்சத் துணிமணி மறைச்சதாலை பார்க்க ஏலாமலுக்கு போச்சு.

பொக்குளுக்கு நேரை கீழை குத்தின படம், 'பச்சையான' பச்சை குத்தல் படமோ எண்டும் யோசிக்கக் கிளப்பிச்சுது.

ஓவல் ஷேப்பில் ஒரு கீறல்.

போறது போகத்தப்பாதெண்டு, சாமியாராகப் போகத்தான் போறன். இதிலை, அசிங்கமாய் சிந்திச்சால் என்ன குறை.??!

'ஆசிங்கமில்லாத' "சாமி'. 'யார்'' இல்லை..???!!!!

ஹன்ட்றெட் பேர்ஸென்ற் ஒருத்தருமில்லை. கோதாரி.

'றற்றூ பூசின புளொண்ட் குட்டியைப் பாருங்கோ…சாய்.நல்ல கொழுப்பு,' எண்டான் கு.விலா.

'உனக்கு கண் கோதாரி. வெள்ளெளுத்து. முதலிலை, அவள் புளொண்ட் இல்லை, கோதாரி. டேர்ற்றி புறுனெற்,' எண்ட நான், 'நல்ல கொழுப்புகளைக் கரைக்கத்தானே சாமி யாவாரம் துவங்கப்போறம், கோதாரி,' எண்டன்.

(டேர்ற்றி புளொண்ட் எண்டு பொட்டைத்தலையை சொல்லுறேல்லை, எண்டதை நான் கு.வி. இற்கு சொல்லேல்லை.)

'அதுக்குத்தானோ, கக்கூஸ¬களுக்கு தூரமான கதிரைகளில் குந்தினனாங்கள்,' எண்டேதோ சம்பந்தா சம்பந்தமில்லாமல் சொன்னான், அவன்.

வலஞ்'சுழி' சுவஸ்திகாவை அண்டித்தான் சாமியார் குறியீட்டையும் குறியையும் வைக்கிறதெண்டு முடிவு செய்திருக்கிறதாய் சொல்லேக்கை, 'பேந்து, நியோ நாஸி, ஹிட்லரின்ரை ஆளெண்டு, சாமியார் யாவாரம் கிழிஞ்சு போகும்,' எண்டான் குட்டிவிலா.

நியாயந்தான்.

ஆனா, புறுனெற்றின் பொடியின் மண்டையைப் பார்த்துத்தான், எனக்கு 'வலங்குறி' 'சுவஸ்திக எண்ணம்' வந்த சமாச்சாரத்தையும் அவனுக்கு சொல்லேல்லை.

'எடேய், சாமியார்த் துணிக்கு கலர் ரொம்ப முக்கியம். சும்மா கந்தறுந்துபோன கந்தைக்கலரெல்லாம் வேண்டாம். சும்மா பார்த்தா பெண்டுகள் அரிப்'பூட்டப்பட்டு', ஐம்புலன்களும் 'பூட்டப்பட்டு', பஞ்சேந்திரியங்களும் பறுகி, குறுகவேணும்.'

'ஆனா, காவிக்கலர்தானே கிக்.'

'நோ! அது ஓல்ட் ஃபஷன்.'

'அப்ப, மேல் துணிக்கு என்ன கலர் போட, கலரிலை போட உத்தேஸம்..??

'இது வித்தியாஸமான 'வில்புறிச்சான்' விளையாட்டு. உனக்கு மூலநிறம் மூண்டும் என்னவெண்டு தெரியுமோ..??'

'உதெல்லாம் தெரிஞ்சால், நான் ஏன் உங்களுக்குப் பின்னாலை திரியிறன்..??'

'மூதேவி!! அடிப்படை நிறங்கள் மூண்டு. சிவப்பு, நீலம், மஞ்சல். இதுகளை பிரிக்கேலாது. மற்ற எல்லா எக்கச்சக்கமான கலர்களும் இதுகளை மாறிமாறி கலந்து தான் வரும்.

இந்த மூண்டு நிற மேல் துணிதான் எனக்கு 'காவி'. கோமணக்கச்சை எந்த நிறத்திலும் போடலாம். அது எல்லாருக்கும் தெரிய வராது.'

'ஆய்ய்! அப்ப, ஆராருக்கு தெரிய வரும்??'

'அதை இப்ப சொல்லேலாது. யாவாரம் எப்பிடிப் போகுமெண்டதை பொறுத்தது. நீ வேணுமெண்டால் படுகரி நிறத்திலை இடுப்புக்குக்கீழை 'காவி' கட்டு. உனக்கு, முண்டம் முழுவதுக்கும் துணி வேண்டாம். சங்கிலிகள், கடுக்கனுகள், ஒரு சேஞ்ச்சுக்கு கழுத்திலை மட்டும், தோளிலை இல்லை, வடம் மாதிரி சிவப்புநிற பூணூல் போடலாம். நீ உதவிக்காறன் தானே.'

'சரி, அப்படியே ஆகட்டும் மஹ்மஹா குருவே. ஐ மீன் மஹாமஹ் சாமியாரே.

இனி, துணி போக, மிச்சச்சோடனைகள் என்ன மாதிரி.?

'அதையும் இப்ப சொல்லேலாது. அது 'சிறித்திறில்' சம்பந்தமானது. "திறில் சிறி' செய்யிறதெல்லாம் சிறித்திறில் எனப்படும். போகப்போக பார்க்கத்தானே போறாய். சிலதை மாத்திரம் சொல்லலாம். ருத்திராட்சக் கொட்டை இராது. விபூதி, சந்தனம், குங்குமம், கற்பூரம் இராது. மண்டை மொட்டையுமில்லை. நீள சடாமுடியுமில்லை. நடுவுச்சி பிறிச்ச ஸ்ரைல். நிறைய்ய்ய வாஸமான ஹெயர் கிறீம் அப்பப்படும். அது டுப்'பெண்டு' 'பெண்டு'களை, 'பூச்சீ'க்களை பூ, பூந்தேன் இழுக்கிறமாதிரி இழுத்துத் தள்ளும். இடையிடை செவ்வரத்தம் பூ, வெந்தயம், பொன்னாங்காணிக்கீரை, கறி வேப்பிலை, கருஞ்சீரகம், முழு நெல்லிக்காய் நல்லெண்ணையிலை காய்ச்சின மயிர்க்கலவையை மண்டையிலை தட்டி, அந்த ஸ்பெஸல் எண்ணையையே உடம்பு பூரா 'உரைச்சு' முழுமுழுக்கு நடக்கும். குடமுழுக்கு ஏதும் நடக்காது.

அம்பாரம் சலம், பூவொடு தூ பம் இருக்கும். பால், பழம், பண்டி றச்சி, ஆட்டுக்குடல், மாட்டீரல் இருக்கும். எக்கச்சக்க சாம்பிறாணி போட்ட குங்கிலியத்து புகையடிச்சு, ஒரே புகை மண்டலத்திலை சிஷ்ய கோடிகளை வைச்சிருக்கிற 'ஜில்மால்' இருக்கவே இருக்கும். சனங்களை புகை மண்டலத்திலை வைச்சிருக்கிறதெண்டது ஒரு நம்பர் வண் மெற்றஃபோர். பிறக்ரிக்கலாயும் அது பொஸிபிளும் தேவையும். அது ஒரு சாம்பல் வலயம். ஒளியுமில்லை இருட்டுமில்லை. வெள்ளையுமில்லை கறுப்புமில்லை.

புகை போனா பகைதான் வரும்!'

'இதென்ன..?? கண்டறியாத சாமியார்' எண்டான் குட்டிவிலா

"கண்டறியாத' சாமியார்தான்,' எண்டேன்.

மூன்று.

(கொஞ்சம் முந்திய. பிந்திய விபரங்கள் உட்பட)

ஏலவே, எப்போதோ இடம் எடுத்தாயிற்று.

தோட்டம், சூத்திரத்துரவு தாண்டி, கிளி, அணில் கோந்தும் மாஞ்சோலை கடந்து, பொது கக்கூஸு என்று வரையறுக்கப்படக் கூடிய பனங்காணி கழிவு தரை.றை தாண்டி, நீண்டு, பரந்த பொட்டல் வெளி கடக்க வரும் பாரிய ஆலமரத்தை அண்டி, இடையிடை ஆடிக்கொருகால் ஐப்பசிக்கொருமுறை என்று, பொங்கிப் புழுக்குவது நீங்கலாய், ஷோபனமோ, ஸோபிதமோ காணாத சின்ன வைரவர் கோவிலைப் பிடுங்கி, எங்கள் சாமியார் மடம் அஸ்திவாரிக்கப்பட்டது. சுற்றுக்காணிகள் சுவீகரிக்கப்பட்டன.

இதில், சூலத்தையும் நாய் வாகனத்தையும் பிடுங்கியது பற்றி சோலி கிடையாது. சனாதன சின்னத்தைப் பிடுங்கி நாங்களென்ன விகாரையா கட்டப்போறோம்?!

கட்டியிருந்தாலும் சோலி வராது. பெரிய இடத்து செல்வாக்கு உண்டு.

இது, கிட்டமட்ட யானைக் காட்டையும் பூனை (விறாண்டி . பிராண்டி) பற்றையையும் அடாத்தாக அழித்து 'குறி'யீடு வைக்கிறபோழ்து, எவரும் ஏதுஞ் செய்யமுடியாத வகைக்கு இருக்கிற, மேல் மேலிட செல்வாக்கு போல் தோற்றினும் உண்மை அதல்ல.

தோட்டம் போச்சு. மா, பனை போச்சு. பொட்டல் போச்சு.

கிளி, அணில், பொதுக்கக்கூஸு எல்லாம் போச்சு.

இந்த விஷயம், ஆண்டிகள் மடங்கட்டிய கதையல்ல. சாமியார்மார் ஆண்டிகள்தான். ஆண்டிகளாய் இருக்க வேண்டுமென்று காலங்காலமாய் சொல்லப்படுகிறதுதான். மற்றபடி, தேஸம் பூரா மடாலயங்களைக் கட்டிக்கொண்டு போனால், அரசனும் ஆண்டியாவான், என்பது பிறகதை.

ஆனால், இது கண்டறியாத. கேட்டறியாத சாமியார்.ஆண்டி அன்றோ?!

FAST FORWARD:

துவக்கத்தில் யாவுமே சுபமாய் சோபிதமாய், ஷோபனமாய், சுவைக்கத்தக்கனவாய் நிகழ்ந்தேறின.

சனம் குவிந்தது. பணம் குவிந்தது. எங்குமில்லாத விருத்தத்துக்கு நான் அணிந்த மூவர்ண காவி (?) பற்றி அம்பாரம் ஆட்கள் பேசினர். சில 'கிணிசல்' கதை, கிலுசை கெட்ட தொடர்பூடகங்கள்,: வரிவரியாய் மாறி மாறி கழுத்திலிருந்து நிறம் மாறும் என் மேலாடை, (சிவப்பு: நீலம்:மஞ்சள்:சிவப்பு:நீலம்:மஞ்சள்: சி:நீ:ம.இன்ன பிற நீட்சி.)

இடுப்பு மட்டத்துக்கு வந்தவுடன் மட்டும் ஏன், ஆறு அங்குலத்துக்கு சிவப்பாக இருக்கிறதென்ற 'பொன்னை'க் கேள்விகளை கிளப்பின.

அது, அப்ஸொலூற் குரோதம்.

காழ்ப்பு, அதை உடைத்தார்க்கு எப்போவொரு தருணத்தில், ஆப்பு வைத்தே ஆகும்.

பிரபலமானோர்க்கு, பணத்தில் படுப்போர்க்கு, ஆடம்பர டாம்பீகிகளுக்கு, பணபல படாடோபிகளுக்கு,:

மழை வரக்கிளம்பும் புற்றீசல் போல எதிரிகள், சத்தாராய் விழுத்த சந்தர்ப்பம் பார்த்திருக்கும் சத்துராதிகள் என்று 'கூட்டாளிகள்'

கூடுவது லோக வழமைதான்.

மூவர்ண மேலங்கி, புகையடி விண்ண, புதுச்சாமியாராகிய 'சிறித்திறில்' 'திறில் சிறி'யாய எனக்கும் விரோதிகள் எட்டா பக்கமும் பெருகத்தொடங்கினர். அவதூறுகள், அழி தூற்றுகைகள், கிசுகிசுக்கள், குசுகுசுக்கள், என்று விஷக்கணைகள் ஏவப்பட்டன. ஆனாலிந்த கிசுகிசுக்களில் உண்மையேதுமில்லை, என்று பொய் சொல்ல மாட்டேன், நான்.

நான்கு.

'எடேய்! அந்த கூந்தல் நீண்ட பொடிச்சிக்கு என்ன நடந்தது?! இஞ்சை சின்ன, சிஷ்யப்பொடிச்சிகளுக்கு, டிஃ பெறென்றாய் இருக்கட்டுமெண்டு, பாதி மண்டையை ஃபுல்லாய் வழிச்சு, மிச்ச கபாலத்திலை ஷோர்ட்டாய் வெட்டின மயிரையும் விடச்சொன்னன். மழிச்ச மண்டைப்பாதியிலை எங்கடை சாமீ(ஈ)ச்சின்னத்து எழும்பி நிக்கிற 'ஈ'யை பச்சை குத்தச்சொன்னன். அந்தப்பொட்டை, அப்ப எப்பிடி நீள மயிரோடை புகையடி பூசைக்கு வந்தது?! ஆக இருவது வயது. பாவம். இப்ப பொட்டை எங்கை?! தோப்பன்காறன் பொலிஸிட்டை போயிட்டான். இது அடுத்த கேஸ்! டேஞ்ஜெறஸ் கேஸ்! மூதேவி.'

'சாமியாராணை, எழும்பி நிக்கிற ஈயாணை, எனக்கொண்டும் தெரியாது. இடை முத்தல் வாழைக்குலைக்கு கிடங்கு வெட்டி, புகையடிக்கிற மாதிரி, மண்டபம் முழுக்க சாம்பிறாணி, ஊதுவத்தி புகையடிச்ச மைம்மலுக்கை எந்தப்பெட்டை எங்கை நிக்கிறதெண்டு ஆருக்குத் தெரியும்?! உங்கடை சிவப்பிலை முடியிற மேற்போர்வைப் பாவாடையின்ரை பொம்மல் ஹெம்முக்கு கீழையிருக்கிற, பூப்பால் தாம்பாளத்தட்டு பாதங்களைத் தொட்டுக்கும்பிட்டு பதகளிக்கிற பொடிச்சிகள், நீங்கள் தலையிலை கை வைச்சு ஆசீர்வதிச்சு வருட, சடாரெண்டு,: நிலஞ்சாறேக்கை மண்வெட்டியிக்கை ஆப்பிட்டு, வெட்டுண்ட நாக்கிளிப்புழு துடிக்கிற மாதிரி, அதிர்ந்து போய், நடுங்கி, துடிச்சு, விழுகிற பொட்டையள், உங்கடை 'சாமீ(ஈ) மந்திர அனுங்கல் குரல் கேட்டே, மயக்கத்திலை தொபுக்கடீரெண்டு சாய்ஞ்சு கவிழிற சிஷ்யப் பொடி, பொட்டைகள், எண்டு, கும்பல்:சாம்பல் குழப்பமாய் இருக்கேக்கை கூந்தல்காறியை மட்டும் எங்கை பிடிக்க?!

'டேய்! வடுவா, மயங்கி விழுகிற ஆக்களை என்ன செய்யிறனீங்கள்?'

'நீங்கள் சொன்னமாதிரி, தூக்கிக்கொண்டு போய், உங்கடை புனித தண்ணி தெளிச்சு, உங்கடை புனித கஷாயம் பருக்கி, எழுப்பி, பிறகும் உங்களிட்டை அனுப்பிறதுதான்.

'டேய்!! றாஸ்கல், கோடியிக்கை இருக்கிற பூசைப்பு தோட்டத்துள்ளை வெட்டித் தாக்கேல்லைத்தானே?!

'ஐயையோ! அபத்தம்..!! அபச்சாரம்!! விபச்சாரம்! நீங்கள்தானே சொன்னனீங்கள், முரண்டு பிடிக்கிற ஆக்களெண்டாலும் நோ கொலை, நோ ஆளை அவுட்டாக்கி கிணத்திலை, குளத்திலை எறியிறது, நோ கழுத்திலை தொங்கப்போட்டு, தற்கொலை எண்டு தப்பிச்சுக்கொள்ளிறது.'

'அதெல்லாம் சரி. இப்ப கூந்தல் பொட்டைக்கு என்ன நடந்தது? எண்டு தெரிய வேணும்.'

'மயங்கி விழுகிற ஆக்களை தூக்கிக்கொண்டு போய், கஷாயம் குடுக்கிற சிஷ்ய அடியார் குறூப்பைத்தான் விசாரிக்க வேணும்.'

அதுக்கு முதல், என்னை விசாரிக்க பொலிஸ் வரும்!

ஐந்து.

பொலிஸ் வந்தது.

எனக்கெதிராய் எக்கச்சக்கமான வழக்குகள். ஆட்களை அடாத்தாகப் பிடித்து, சிஷ்யச் சாமியார். சாமிச்சிகளாக்குவது வெறுத்து, கோதாரி மடத்தை விட்டு வெளிக்கிட விரும்புவோரை பலாத்காரமாய் மறிப்பது, சூழல் மாசுபட புகையடிப்பது, லெளட் ஸ்பீக்கர் மந்திர உச்சாடனிப்பின் கோரஸால் பக்கத்து இடங்களில் சத்த சஞ்சலம், வரி ஏய்ப்பு என்று அம்பாரம் முறைப்பாடுகள்.

பிரசினம் அமந்தறையாய் இறுகுகிற போது, மேலிடம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் ஏதுஞ்செய்ய இயலாது. கை விரிக்கத்தான் பார்க்கும்.

எல்லாப்பக்கமும் ஓடிப்பார்த்தேன்.

'ங்ஹூம்!

சுருக்குக்கயிறு ஆக இறுகியது, கூந்தல்காரியின் காணாமலாக்கல் காரணமாய்த்தான். அப்பன்காரன் விடுவானா?

ஏதோ எக்குத்தப்பாய் நடந்திருக்கிறது. குட்டிவிலா சொல்ல பயப்'படுகிறான்'.

இனி, பட்டென்ன? படாமலென்ன?!!

மேலிடத்துக்கு மேலிடம் வந்தது. கையை விரித்தபின், 'இனி நாங்கள் ஏதுஞ் செய்ய இயலாது. சிறை போவதை தவிர்க்க வேண்டுமென்றால், உள்ளதைச் சுருட்டிக்கொண்டு நாட்டை விட்டு ஓடுமாறு புத்திமதி சொல்லிற்று.

அறுந்தது போ!!

ஆறு ('ஆறு'தலில்லாத முடிவு'.)॰

காசிருக்கு.

பின் தொடரக்கூடிய செம்மறி 'மந்தை' சிஷ்ய கோடிகளும் கணிசமாய் இருக்கினம்.

ஒண்டுதான் இல்லை.

'போக்கிடம்!'

கோதாரீ(ஈ)ஈ'!

இன்னும் பெருவாரியாய் சாமியார் யாவாரம் செய்து பெருபெரு வாழ்க்கை வாழ,

'கை'லாஷ் மாதிரி ஒரு 'கால்'லாஷ் இருந்தால் சொல்லுங்கோ.

பிளீஸ்ஸ்ஸ்.

# ‘சிதைப்பு’

### அதிகாரம் 2.

கோதாரிச்சாமீ ஈ‘ மற்றும்
கோதாரிச்சமாச்சாரங்கள், சில.:

கதைசொல்லி கதைசொல்லி
களைத்துலைந்தேன், கேளடா

எதை இனிநான் எடுத்தியம்ப
இருக்கிறதோ, எனவும்

சும்மா பொய்விடுங்கள்
சுவையான கதைசொல்ல

இம்மாவில் நீங்கள்தான்
இலைவேறெவரர்? என்றான்.

அறுவான் குட்டிவிலா
ஆய்க்கினையை கிளப்பி
விட்டால்

வெறுவாய் என்றாலும்
வெற்றிலை என்றரைபடுந்தான்.

சரியெடா அழிவானே
சக்தியெலாம் கூட்டி நானோர் ஈ

‚நன்றி°சிறீசுவின் சில
சிறுகதைகள்‘ தொகுப்பின்
‘சிதைப்பதிகாரம்‘
கதையிலிருந்து..
ளுநிவநஅநெச 2002. மித்ர
வெளியீடு:சென்னை.

நிலைமண்டல ஆசிரியப்பா
(ஆ) மாதிரி. குறு ‘அகவல்‘°

‘இருளும்‘ கோரர்தரு
இன்னலும் இவ்வைய

இருப்பினையே சதாபோதும்
உலுக்கிவர உழன்றடித்து

அருள்கொள் ‘பிரான் பிடாரர்‘
ஆசுவாசம் தருவரென

ஆவலில் கவிழ்ந்தடித்து
அடிவருடி மறுகி விழ

உருளும் நாப்பொய்யும்
உருட்டும் புரட்டுமென

உருப்படா மாந்தருக்?(கு)
உதவுவதாய் உருவேற்றி

கருந்தேள் கொட்டும்
கணியத்தில் விஷம் பாய்ச்சி

காசயடிக்கும் காமுகரே
கோதாரிச்சாமீ ‘ஈ‘யராம்.

முன்னதெல்லாம்
இருந்ததெல்லாம் மேலான(து)
என்றோம்பி

அந்நாளின் வாழ்வன்றோ
அதியுச்ச சிகரமென

இன்னதின்ன என்றறியா
இழிவாயர் பொய்யுரைக்க

தம் புலனை கொஞ்சமேனும்
தக்கவைக்க வழியற்று

முன் மன்னர், முன் மக்கள்
மகத்துவமே மாண்பென்று

இன்னுமின்னும் எண்ணி
நாறும் இவ்வவனி ஜனங்கள்
சொல்வர்

‘நன்மை பயக்கவென்றோ நம்
படைகள் ‘நாடு கொள்ளும்‘.

இன்னபிற எல்லாம்
ஆக்கிரமிப்பே.‘

என் சொல நான்?

எல்லோர்க்கும் எழ ஆசை
எல்லாமும் பெற ஆசை

**சிறினோ சிறி சிறிசு**

வல்லோராய் சிம்மாசன
வாழ்வமைய

படு(ஊ) ஆசை

மல்லராய் தேவை வரின் மழு
ஏந்தி சிரசறுத்து

புல்லராய் உருமாறி
போக்கிரியராய் சிதைந்து

வெல்ல வேண்டும் என்பதற்காய்
வேசியராகிய பின்

நல்லோர்க்கு வேடமிடும்
நாற்றக்குழி

இவ்வுலகர்

கல்லாதமையை மறைத்து
கயமையினை கவட்டொளிக்கும்

‘இல்லா‘ இடதுசாரிய இடரை என்
சொல்வேன்??

இரு ‘கரு‘ குறள்பாக்கள்°

போலியர் புளுகர் புருடர் பொய்
மாந்தர்
காலைவாரும் காலமே கலி (?).

அகர முதல எழுத்தெல்லாம்
‘ஆதி‘
பகரும் பாஷை என்பது பொய்.

ஒரு ‘கரு‘ம்பா (நேரிசை வெண்பா
மாதிரியும்.)°

இத்தனையும் ஆகி இவ்வுலகு
நாறுதலை

சத்தமின்றி பார்த்து சிரித்தபடி
உத்தமர்போல்

நாடக(ம்)மாடி நல்லோர்க்கு
வேஷமிடும்

ஆடுநரை கொண்டாடல்
‘அபத்தம்‘.

# இலக்கியச் சந்திப்பு பாரிஸ்

பாரீசில் நிகழ்த்த இருக்கும் இலக்கியச் சந்திப்பு இன்னொரு வகையான செயற்பாடுகளையும் மதிப்பீடுகளையும் கோரி நிற்கிறது. அது இதுவரையான தற்குறித் தனத்திலிருந்து அனைவரையும் விடுபடச் செயற்படும் ஒரு செயற்பாடாக முன்நிறுத்திச் செயற்பட வைக்க வேண்டிய தேவை அதன் முன் முக்கிய கருவாக இருக்கிறது. விட்ட தவறுகளிலிருந்து விடுபடுவதே சிறப்பு. அதனை நாங்கள் உரையாடலாகவும் அந்த உரையாடலை வெளிப்படையாகவும் நிகழ்த்துவதே நாம் தொடர்ந்து செயற்படும் கருத்தியலுக்கும் பேசிவரும் தர்க்கத்திற்கும் மதிப்பளிப்பதாக இருக்கும்.

உண்மையில் 50வது இலக்கியச் சந்திப்பில் இன்றுவரை கலந்து கொண்ட அனைத்துத் தரப்பினரும் அவர்களுடைய பங்களிப்புக்களும் முரண்பட்டு விலகிய நண்பர்களும் அவர்களுடைய முரண்பாடுகளின் காரணங்களும் அவற்றின் எதிர்வினைகளும் அவை எதிர் கொள்ளப்பட்ட விடயங்களும் என்று பேசுவதும் ஆரம்பகாலத்திலிருந்து பங்கு கொண்டவர்களது அனுபவங்களும் மறைந்த தோழர்களது நினைவுகளும் என்று இலக்கியச்சந்திப்பின் உள்ளிருந்து பேசவேண்டிய அதிக விடயங்கள் பேசியிருக்க வேண்டும். ஏனெனில் அதற்குப் பின்னால் நாம் கட்டாயம் பேசியே ஆகவேண்டிய பலநூறு விடயங்கள் கவனிக்கப்படாமல் இருந்து கொண்டே இருக்கிறது. இவை நீண்ட உரையாடலுக்குரியவை.

அவ்வாறான ஒரு உரையாடலை செயற்படுத்த முனையும் நிலையாக 50வது இலக்கியச் சந்திப்பின் நிலை இருக்கவில்லை. அது எந்தத் தளத்திலும் சிறு உரையாடலைக் கூட மறுதலித்தது. 50வது இலக்கியச் சந்திப்பினை நோர்வேயில் நடத்துவதற்காக சண்டை செய்து பெற்றுக்கொள்ள துணை நின்றவன் என்ற அடிப்படையில் எனக்கு மிகவும் குற்றவுணர்ச்சி மேலிடுகிறது. எமது தற்குறித்தனச் செயற்பாட்டினை வெளிப்படையாக சமூகத்தில் முன்வைப்பதைவிட இந்த வகைச் செயற்பாடுகள் எதையும் நமக்குப் புதிதாகத் தந்துவிடப் போவதில்லை. ஆனாலும் இதனையே தொடர்ந்து செய்கிறார்கள். இந்த வகை அற்பத்தனத்தை இனிவரும் இலக்கியச் சந்திப்புக்கள் தாங்கிவரக் கூடாது என்ற பெரு விருப்பின் அடிப்படையிலே இதனை எழுதுகிறேன்.

முன்வைக்கப்படும் எதிர்க் கதையாடல்களை பரிசுத்த மனதுடன் ஏற்றுக் கொண்டு நாம் இனிவருங் காலங்களிலாவது திறந்த மனதுடன் உரையாடல் செய்யக் கற்றுக் கொள்ள இன்னும் நமக்குக் காலங்கள் தேவையில்லை. இயக்க அனுபவங்களை விடவும் இந்த இலக்கிய அனுபவங்கள் பலருக்கு அதிகமாகவே இருக்கிறது. ஒரே விளையாட்டை நாங்கள் தொடர்ந்து விளையாடி நாமே ஏமாந்து போவதை இனியாவது தவிர்ப்போம்.

வெளிப்படையாக உரையாடுங்கள்.

சமூகத்திற்காகவும் சமூக நீதிக்காகவும் என்று இயங்குபவர்கள் ஏன் தற்குறித்தனத்துடன் இருக்கவேண்டும்?

ஏன் இந்த முரண்பாடு? எங்கே தவறு உள்ளது? என்று நாம் உரையாடவேண்டியகாலம் இது.

பாரீஸ் இலக்கியச் சந்திப்பின் மூலமாக இலக்கியச் சந்திப்பிற்கு இன்னொரு பாதையை வகுக்க வேண்டும்.

அதற்கு இறுதிவரை நேர்மையாக இருக்க வேண்டும்.

அதற்கு முதலில் நமக்குள் இருக்கும் தற்குறித் தனத்தைக் கைவிட வேண்டும்.

பெரு மாற்றத்தைக் கோரி நிற்கும் பாரீஸ் இலக்கியச் சந்திப்புக் குழுவிற்கு எனது வாழ்த்துக்கள்.

இலக்கியச் சந்திப்புக் குறித்த எனது கடந்த இதழின் பதிவிற்கு நண்பர் சுசீந்திரன் திருத்தம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதனையும் இங்கே இணைக்கிறேன். அந்தத் தவறு நான் அறிந்து விட்டதல்ல. நான் பார்த்திருந்ததை வைத்து எழுதியதே. ஆனாலும் அதனைத் தெரிவித்ததற்கு நன்றி சுசீந்திரன்

'சின்ன திருத்தம்◦ இலக்கியச் சந்திப்பினை பிரான்சுக்குக் கொண்டுவந்தது கலைச்செல்வன். தூண்டில் சஞ்சிகையினூடான தொடர்பினால் 5ஆவது சந்திப்பு முதல் கலைச்செல்வன் கலந்துகொண்டு பிரான்சில் நடாத்த எடுத்துச் சென்றார். அதன் பின்னரே பிரான்சில் உள்ள சபாலிங்கம் இணைந்து கொண்டார். புஸ்பராசா, சபாலிங்கம் ஆகியோர் கலைச்செல்வனால் இணைக்கப்பட்டவர்கள். எனவே லக்ஷ்மியும் கலைச்செல்வனுமே பிரான்சுக்குக் கொண்டு சென்றனர்.'

ந.சுசீந்திரன்.

**கற்சுறா**

# மூன்று இம்சை அரசிகள்




தாயகப் பயணம் குறுகியதாக இருந்தாலும் நான் நினைத்துப் போன காரியங்களும் நினையாமலே நடந்த நிகழ்வுகளும் மனதிற்கு இனிமையானதாய் அமைந்திருந்தன. என் பயணத்தின் பிரதான காரணியாக அமைந்தது என் தந்தையின் உடல் நிலை சீரின்மையும் அது குறித்த விசனமும் தான் என்பதால், என்னால் முடிந்த அளவு அவருடனேயே என் பொழுதுகள் கரைந்தன. அவரது பழைய நினைவுகளோடு இயைந்த பேச்சுகளும், அவரது மருத்துவ தேவை குறித்த வைத்திய சாலைக்கான பயணங்களும் அவருடனான நெருக்கத்தை இன்னும் அதிகரித்தது போன்ற உணர்வு எனக்குத் தோன்றியிருந்தது.

வழிப் பயணத்தில் வழமை போலவே பல சுவாரசியமான விடயங்களைப் பார்க்கவும் கேட்கவும் நேர்ந்ததைப் பகிர்ந்து கொள்ளத் தோன்றியதே இக்கட்டுரையின் நோக்கம். சில விடயங்கள் சிந்தனையைத் தூண்டுவதாயும், பல விடயங்கள் கவலை கொள்ள வைப்பதாயுமே இருந்தன. இங்கிலாந்திலிருந்து நேரே இலங்கை போய் இறங்காமல், வழியில் இன்னொரு விமான நிலையத் தரிப்பில் இறங்கிக் காலாற நடப்பதில் பணமும் மிச்சம் (அதை தாயகத்தில் ஏதாவதொரு நற்காரியத்துக்கு கொடுத்து உதவலாம் என்பது இனிமை), ஆரோக்கியமும் அடக்கம்.

எனக்கு சிறு வயது முதலே பயணங்களில் வாந்தி வருவது அடிக்கடி நேர்ந்து விடுவது தான் என்றாலும், தற்போது அதற்கான தடுப்பு மாத்திரைகள் இருப்பதனால் அந்த உணர்வு இல்லாமற் பயணிக்க முடிகிறது.

ஆனால் இம்முறைப் பயணத்தில் மாத்திரைகளை மறந்தாயிற்று. அத்தோடு என்னுடைய உடல் நிலையும் போற்றத் தக்கதாய் இல்லை என்பதும் குறிப்பிடக்கூடியதே. இங்கிருந்து டோஹா வரை எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை.

விமானத்தில், அருகில் அடுத்தடுத்த இருக்கைகளில் மூன்று இளைஞர்கள், மிகத் துடிப்போடும், நாகரீகத்தோடும், நடந்தும் பேசியும் கொண்டார்கள். தாம் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில், சேர்ந்து கல்வி கற்பதாகவும், இது அவர்களது விடுமுறையாதலால் முதன் முறையாக தாய்லாந்திற்கு பயணிப்பதாகவும் கூறினார்கள்.

**பூங்கோதை**

எனது கையில் இழுத்து வந்த பயணப்பொதியை மேலே தூக்கி வைக்க உதவி தேவையா எனக் கேட்டுக்கொண்டார்கள். டோஹாவில் இறங்கிப் போகும் போது உனது தாயகப் பயணம் இனிதாகட்டும் எனக்கூறியவாறே கடந்து சென்றவர்களை நானும் கவனமாகப் போய் வாருங்கள் என வாழ்த்தியனுப்பினேன்.

அடுத்த தொடர் பயணத்தில்த் தான் எனக்கு இம்சை காத்திருந்தது. வாந்திக்கான மாத்திரையின்றி பயணித்ததன் பலன் டோஹாவில் தெரிய ஆரம்பித்தது. மனதளவில் அதை அடக்கி வைத்திருக்க தீர்மானித்தாலும் அது வாயைத் திறந்தால் எதுவும் நடக்கலாம் என்ற நிலமையைத் தோற்றுவித்திருந்தது. விமான நிலையத்தில் அதிகாரிகள் உட்பட அனைவருக்கும்

புன்னைகையைத் தந்தபடி முன்னேறினேன். ஒருவருடனும் வாய் திறந்து பேச வேண்டிய தேவை ஏற்படாதது பெரும் ஆறுதலைத் தந்திருந்தது. தனியான பயணத்தில் வாசிக்க நூல்களும் எழுதுவதற்கும் குறிப்பெடுப்பதற்கு கைத் தொலைபேசியும் வழித்துணையாகின.

விமானத்தில் ஏறி இருந்த போது அப்பாடி என ஒரு அயர்ச்சி தோன்றி மறைந்தது. இம்முறை, டோஹாவிலிருந்து கொழும்பு நோக்கிய பயணத்தில் மூன்று இருக்கைகள் இருந்த வரிசையில் எனக்கு நடுவில் இருந்த இருக்கை தான் என்னுடையது. இரு புறமும் இன்னும் ஒருவரும் வந்திருக்கவில்லை. எனக்கும் அதைப் பற்றிய யோசனை எதுவும் இல்லாமல்க் கண்ணை மூடித்தூங்கத் தோன்றியது. அப்போதுதான் அந்த அசம்பாவிதம் ஆரம்பமாகியது. என் வலது புற இருக்கைக்கு ஒரு அறுபது வயது மதிக்கத்தக்க, ஒரு பருமனான பெண் வந்து பலத்த ஆரவாரத்துடன் அமர்ந்து கொண்டார். அவருக்குக் கை வைப்பதற்கு இலகுவாக நான் சற்றே இடப்புறம் தள்ளி இருந்து கொண்டேன். என்னை ஏற இறங்கப் பார்த்த போது மெதுவாய்ப் புன்னகைத்தேன். போனால் போகிறது என ஒரு பாதிப் புன்னகையைத் திருப்பித் தந்தார்.

நான் கண்களை இறுக மூடிக் கொண்டேன், தூக்கம் வந்தால் சொர்க்கம் தான் என எண்ணிக்கொண்டேன். வாந்தி எடுப்பதில்லை என்னும் தீர்மானம் இறுக்கமாய் மனதில் குந்திக் கொண்டது. பக்கத்தில் இருப்பவர்களுக்கு அது அசிங்கமாக இருக்கும் என்பதும் பிரதான காரணம் தான்.

'அப்பா, கொஞ்சம் கிறீம் பூசிறியளே!' வலப்பக்கத்துப் பெண்மணி தமிழ் மணக்கத் தனக்குப் பின் இருக்கையில் இருக்கும் தன் கணவனுக்கு கிறீம் கொடுக்க முற்பட்டதில் என் தூக்கம் தொலைந்தது. என்ன நடக்கிறது என என் கண்கள் ஆராய ஆரம்பித்தன. அவர் தன் கைகளுக்கு கிறீம் தடவிக் கொண்டிருந்தார். தடவிய பின்னர் பின் இருக்கையிலிருந்து எந்த மூச்சுப் பேச்சும் இல்லாததால், தானே ஒரு பெரு மூச்சை விட்டு, தன் ஏமாற்றத்தை வெளிக் காட்டிக் கொண்டார்.

'இனிக் கேட்க மாட்டன் அப்பா!' மீண்டும் ஒரு அப்பா பாட்டு பாடியும் அந்த மாமனிதர் ஒரு சத்தமும் எழுப்பவில்லை. தன் கைப் பையை எடுத்து, கிறீமை வைத்த பின் அதற்குள்ளிருந்து சில நகைகளை எடுத்து, அவசர அவசரமாக அணிந்து கொண்டார். இப்போது அவர் விரல்கள் எல்லாம் மோதிரங்களால் ஜொலிக்க, ஒரு பாரமான சங்கிலியும் அவர் கழுத்தில் ஏற்கனவே அணிந்திருந்த சங்கிலியுடன் சேர்ந்து கொண்டது.

என்னைத் திரும்பிப் பார்த்த போது, 'எவ்வளவு நகை வைத்திருக்கிறேன், பார்த்தாயா' என்பது போல அவர் முகம் ஏகத் திருப்தியில் பூரித்துப் போயிருந்தது. நானும் அது குறித்து குதூகலமாக இருப்பதை என் புன்னகை மூலம் தெரிவித்துக் கொண்டேன். ஏதோ என்னோடு பேசாத வரை எனக்கு எந்தத் தொல்லையும் இல்லை. என் கண்கள் தூக்கத்திற்காக ஏங்கின.

இடப்புற இருக்கையில் இன்னும் ஒருவரும் வரவில்லையே என்ற எண்ணத்திற்கு உடனடியாகப் பதில் கிடைத்தது. ஒரு கைத்தடியுடன் ஒரு பெண் மிக விரைவாக நடந்து வந்து கைத்தடியைத் தூக்கிக் கடாசி விட்டு பொத்தென இருந்தார். கையில் பிரித்தானியக் கடவுச் சீட்டு வைத்திருந்தார். இப்போது நான் சற்றே வலப்புறம் சரிந்து இருக்க நேரிட்டது. இரு புறத்து நங்கைகளும் தமது கைகளை எனது இருக்கையின் உள்ளே வரும்படி வைத்துக் கொண்டார்கள். நான் அனைத்தையும் பொறுத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. கண்களை மூடினேன். தூக்கம் வந்தால் உடல், உள அயர்ச்சி குறையலாம் என நம்பிக்கை வந்தது.



இப்போது, இடப்புறத்தில் வந்து தொப்பென இருந்த போது அப்பெண் தன் பையையும் பொத்தென நிலத்தில் வைத்து விட்டதால், அதை மேலே உள்ள பயணப் பொதிகள் வைக்கும் சிறு அலுமாரிகளுள் (overhead cabins) வைக்கும் படி விமானபணிப் பெண் அவரைத் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டார்.

அவருக்கு அதைத் தூக்கி மேலே வைப்பதில் சிரமம் ஏற்பட்டதைப் பார்த்து, நான் உதவி செய்ய முற்பட்ட போது இன்னொரு பணிப்பெண் அங்கு இடமில்லாததைக் கவனித்து விட்டு, என்னிடமிருந்த அவரது பயணப் பொதியைத் தூக்கி, அதற்குப் பக்கத்தில் இருந்த அலுமாரியில் வைத்து விட்டுப் போய் விட்டார். இடப்புறப் பெண்ணுக்கு அது உவப்பில்லாமல் போயிருந்தது என்பதை அவர் தலையை ஆட்டி உச்சுக் கொட்டியதில்க் காட்டிக் கொண்டார்.

கைத்தொலை பேசி டோஹா விமான நிலையத்தின் இணைய அருகலையினூடாக (WiFi) இயங்கியதில் நான் அங்கு ஒரு சில மின் அஞ்சல்களை வாசிக்கக் கூடியதாக இருந்தது. அவற்றில் ஒன்றை முழுதாக வாசிக்காததால் அதை வாசித்து முடித்து விட வேண்டும் என்ற ஆவலில், விமானம் பறப்பதற்கு முன்னர் என் தொலைபேசியைத் திறந்து மின் அஞ்சல்களைப் பார்க்கத் தொடங்கினேன்.

குழந்தைகள் போலவே இடப்புறப் பெண்மணியும் வலப்புறப் பெண்மணியும் தாம் பேசுவதை நிறுத்தி விட்டு, நடுவில் நசிந்து போயிருந்த என்னோடு ஒட்டியபடி வந்து சேர்ந்து என் மின் அஞ்சல்களை வாசிக்க முற்பட்ட போது எனக்குப் பகீரென்றாலும், சிரிக்கத் தோன்றியது. மின் அஞ்சல்கள் ஆங்கிலத்தில் இருந்ததால் இருவரும் தம் அதிருப்தியை உச்சுக் கொட்டிக் காட்டிக் கொண்டார்கள்.

இப்போது இடப்புறமும் வலப்புறமும் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பித்தது. உரையாடல்கள் முழுவதும் தமது கடந்தகால நோய்கள் பற்றியதாக மட்டுமே இருந்தன. ஆனால் அதை விமானம் முழுவதும் கேட்கக் கூடியதாக மிக உரக்கப் பேசிக் கொண்டார்கள். இருந்தாலும் எனது களைப்பினால் அது எனக்கு அது தாலாட்டுப் போலத் தெரியவே கண்களைத் தூக்கம் தழுவியது.

**இடது. யாழ்ப்பாணமே?**

**வலது. இல்லை, வடமராட்சி.**

**இ. நான் சில்லாலை. எனக்கு காலில மூண்டு வருசத்துக்கு முந்தி ஒப்பிறேசன் செய்தவங்கள். இப்ப சுகம். எண்டாலும் அதைச் சொல்லித் தான் வீல் செயார் (றாநநட உாயசை) கேட்டனான். ஏதோ ஒண்டும் கேட்காமலத் தந்திட்டாங்கள்.**

**வ. நானும் தான், எனக்குச் சில்லுத் தேய்ஞ்சு போச்சாம். நானும் வீல் செயார் தான். ஆனால் சிறிலங்காவில இறங்கினவுடன நல்லாய் நடப்பன்.**

**நான் நடுவில் இருப்பது தெரியாதது போலவே அவர்கள் பேசிக் கொண்டாலும் இடையிடையே பேச்சுத் தடைபட்ட போது, தாலாட்டு நின்றது போல், தூங்க முயற்சித்த நான் கண்களைத் திறந்து கொண்டேன்.**

இடது. யாழ்ப்பாணமே?

வலது. இல்லை, வடமராட்சி.

இ. நான் சில்லாலை. எனக்கு காலில மூண்டு வருசத்துக்கு முந்தி ஒப்பிறேசன் செய்தவங்கள். இப்ப சுகம். எண்டாலும் அதைச் சொல்லித் தான் வீல் செயார் (wheel chair) கேட்டனான். ஏதோ ஒண்டும் கேட்காமலத் தந்திட்டாங்கள்.

வ. நானும் தான், எனக்குச் சில்லுத் தேய்ஞ்சு போச்சாம். நானும் வீல் செயார் (wheel chair) தான். ஆனால் சிறிலங்காவில இறங்கினவுடன நல்லாய் நடப்பன்.

நான் நடுவில் இருப்பது தெரியாதது போலவே அவர்கள் பேசிக் கொண்டாலும் இடையிடையே பேச்சுத் தடைபட்ட போது, தாலாட்டு நின்றது போல், தூங்க முயற்சித்த நான் கண்களைத் திறந்து கொண்டேன். அப்போது, சொல்லி வைத்தாற் போல் இருவரும் என்னைப் பார்த்து, 'யாழ்ப்பாணமே...' என்றது அதிசயமாய் இருக்க நான் அவசர, அவசரமாய் இல்லை என்று தலையைப் பலமாய் ஆட்டினேன்.

இப்போது இடப்புறம் வலப்புறத்திற்கு தன் கண்டுபிடிப்பு சரிதான் என்பதைச் சொல்லிக் கொண்டார். 'அது தானே பார்த்தன்!'

விமானம் தரை இறங்கும் போதும் ஏறும் போதும் தான் என் வாந்திப் பிரச்சனை அதிகமாவதால் நான் கண்களை மூடியபடி தியான நிலைக்குப் போய் விடுவது வழக்கம்.

கொழும்பில் விமானம் தரை இறங்கி சில நிமிடங்களின் பின்னர் பயணிகள் எல்லோரும் தமது பயணப்பொதிகளை மேலேயுள்ள சிறு அலுமாரிகளிலிருந்து இறக்கத் தொடங்க, இடப்புறப் பெண், தன்னைக் கடந்து சென்ற விமானப் பணிப் பெண்ணிடம், மீண்டும் தமிழில் பேசி, தனக்கு உதவி செய்யுமாறும் தன் பயணப் பொதி தனக்குப் பின்னேயுள்ள இருக்கைக்கான அலுமாரியில் இருப்பதாகவும் கூறிய போது, தமிழ் புரியாததால் பணிப் பெண் குழம்பிப் போனார். அத்தோடு அவருக்கு வேறு ஏதோ ஒரு பணி அவசரமாக வரவே அவர் இவரிடம் திரும்பி வருவதாகக் கூறிச் சென்றார்.

நான் கண் திறந்து, அவருக்கு தமிழில், 'நான் சூட்கேஸை இறக்கித் தரலாம், அவசரப்பட வேண்டாம்.' என்று கூறி அமைதிப்படுத்தி விட்டு, அவருடைய சிறிய கைப் பயணப்பொதியை இறக்கிக் கொடுத்தேன்.

'அட, யாழ்ப்பாணமே...' என்றவருக்கு புன்னகைத்தபடி 'இல்லை' எனத் தலையாட்டியபடி விமானத்திலிருந்து வெளியேறினேன்.

# மக்கள் யுத்தத்தின் மகத்தான தளபதி





## சுகன்

இப்படியொரு தலைப்பில் உமாமகேஸ்வரனைப் பற்றி ஒரு பதிவு எழுத முயன்றால் அவரது தாபனத்திற்குள் இருந்த 50 வீதமானோர் மனத்தளவில் ஒரு சங்கடத்தையோ ஒவ்வாமையையோ உணரக்கூடும் .

மாவோ சே துங், ஜோசப் ஸ்டாலினைக் குறித்தும் இந்த 50 விகிதச் சமன்பாட்டை முன்வைத்தார் என்பர். மாவோவிற்கு விகிதச் சமன்பாடு இல்லை, கம்யூனிஸ்ட் கட்சியை ஒரு கட்டத்தில் கலைத்துவிட்டு தேசியவாதிகளான சியாங் கை சேக் அணியுடன் ஐக்கியமானார்.

லியூ சோ சி என்ற ஓநாய் ஒழிக! என்ற கோசமும், நால்வர் அணியைத் தாக்கி அழியுங்கள்! மைய அதிகாரத் தலைமைகளைத் தாக்கி அழியுங்கள்! என்ற கோசத்தினூடே மாவோவின் இரண்டாவது மனைவிக்கு எதிராகவே (நால்வர் அணி) ஈற்றில் அவரால் கடுமையாகப் போராடவேண்டியிருந்தது.

உச்சம் பொல்பொட், தோழர் பொல்பொட் என சொல்லும் வழக்கமும் இருக்கிறது. தோழர் ஸ்டாலினோ, தோழர் லெனினின் மத்தியகுழுவிலிருந்த அனைவரையும் மீதியின்றிக் கொன்று தன்னை நிறுவியவர்.

தாபனத்திற்குள் நிகழ்ந்த 50 இற்கு உட்பட்ட உட் கொலைகளுக்கு மௌனமாக அங்கீகாரம் வழங்கியும் செயலற்றும் பார்த்துக்கொண்டிருந்ததும் அக் கொலைகளுக்கு உடந்தையாக இருந்தார் என்றும் முகுந்தன் மீது இருந்து வரும் விமர்சனங்கள் அவர் அழிவிற்குச் சமாந்தரமாகச் செல்வன.

ஸ்டாலினிய காலத்தில் பெரியா, யகோடா, யசோவ் போன்றோர் கொலைப் பாத்திரங்களை ஏற்றநிலையில் முகுந்தனின் தளபதிகள் பெயர் அவ்வளவாக வெளியில் வரவில்லை. சங்கிலி மட்டுமே எல்லோருக்குமான கொலைப் பழியைச் சுமந்து கொண்டிருந்தார்.

'சொற்பமாயினும் சிறந்தது நன்று' என்ற லெனினின் புகழ்மிக்க கூற்று ஒன்றுண்டு. மிகச் சிறந்த கொம்யூனிஸ்ட் தோழர்களைக் கொண்ட அமைப்பு சொற்பமாயினும் அது சிறந்தது என்ற பொருளில் இக் கூற்று கையாளப்பட்டிருக்கவேண்டும்.

மிகச் சிறிய வடக்கு கிழக்கு மாகாணங்களைக் கொண்ட ஈழப் பின்னணியில் 1985 மட்டில் 25.000 அங்கத்தினரைக் கொண்டதாயிருந்த அமைப்பில் அதன் ஆரம்ப நிலை வளர்ச்சியே மிகவும் அபரிமிதமாயிருந்தது.

எனது இலக்கம் 3004 .

இதை வீக்கம் என சொல்வது. ஆனால் அப்போது மதிப்புமிக்க மிகப்பெரிய தாபனம்.

இதற்கேற்றாற்போல தாபனத்தை ஒழுங்கமைக்க ஒரு ஒழுங்கமைவும் வளங்களும் தாபனத்திற்கு இருந்தும் சிக்கலாக இருந்த அகப் புறச் சூழல்களை கவனத்தில் எடுத்துப் பேசுவதற்குப் பதில் விமர்சனங்கள் வேறு வேறு திசைகளில் போய்முடிந்தது.

ஒரு உதாரணத்திற்கு சொல்வதாயின் முகாங்களில் உணவுத்தட்டுப்பாடு வந்தபோது மாணிக்கதாசன், முகுந்தனிடம் 'ஐயா! முகாங்களில் சாப்பாட்டுப் பிரச்சனை பெரிய பிரச்சனையாயிருக்கு!' என்று கூற அதற்கு முகுந்தன், 'நீதான் அனைத்து முகாங்களின் பொறுப்பாளர்! நீதான் இவற்றைப் பொறுப்பெடுத்துக் கவனிக்கவேணும்!' என்று சொல்ல மாணிக்கம்தாசனுக்கு அப்போதுதான் தான்தான் அனைத்துமுகாங்களின் பொறுப்பாளர் என்று அறியக்கூடியதாக இருந்ததாக சொல்வர்.

உமாமகேஸ்வரனை தலைமைப் பொறுப்பில் இருந்து அகற்றவேண்டும் என்ற நோக்கோடு கூட்டப்பட்ட ஒரு மாநாட்டில் உமாமகேஸ்வரனே மீண்டும் தலைமைப் பொறுப்பிற்குத் தகுதியானவர் என முடிந்தது.

ஒரு உதாரணத்திற்கு சொல்வதாயின் முகாங்களில் உணவுத்தட்டுப்பாடு வந்தபோது மாணிக்கதாசன், முகுந்தனிடம் 'ஐயா! முகாங்களில் சாப்பாட்டுப் பிரச்சனை பெரிய பிரச்சனையாயிருக்கு!' என்று கூற அதற்கு முகுந்தன், 'நீதான் அனைத்து முகாங்களின் பொறுப்பாளர்! நீதான் இவற்றைப் பொறுப்பெடுத்துக் கவனிக்கவேணும்!' என்று சொல்ல மாணிக்கம் தாசனுக்கு அப்போதுதான் தான்தான் அனைத்துமுகாங்களின் பொறுப்பாளர் என்று அறியக்கூடியதாக இருந்ததாக சொல்வர்.

உமாமகேஸ்வரனை தலைமைப் பொறுப்பில் இருந்து அகற்றவேண்டும் என்ற நோக்கோடு கூட்டப்பட்ட ஒரு மாநாட்டில் உமாமகேஸ்வரனே மீண்டும் தலைமைப் பொறுப்பிற்குத் தகுதியானவர் என முடிந்தது.

அவ்வளவு ஆளுமையான ஒருவரை தாபனத்திற்குள்ளும் தாபனத்திற்கு வெளியேயும் தேடமுடியவில்லை.

விமர்சனம் வைத்தோர் எல்லாம் அவர் தலைமையை ஏற்றிருந்தார்கள்.

அவருக்கு மிகநெருக்கமான தோழர்கள் மத்தியில் அபூர்வமான தீர்க்கதரிசனம் மற்றும் அறிவு கொண்டவராகவே முகுந்தன் அறியப்படுகிறார்.

முதன்முதலில் எஸ்.ஆர் என்று எம்மால் நெருக்கமாகச் சொல்லப்பட்ட தராக்கி சிவராம், உமாமகேஸ்வரனை சந்தித்துவிட்டு வந்து 'என்ன அறிவு! என்ன அறிவு!' என்று என்னிடம் சொல்லி மெய்சிலிர்த்து நின்றது இன்றும் மறக்கமுடியாத ஒன்றாகவே இருக்கிறது. சிவராம் போன்ற ஒரு நுட்பமான அறிவுஜீவி உமாமகேஸ்வரனை விதந்து போற்றுவதெல்லாம் ஒரு தந்திரம் என்று அந் நாளில் சொல்வதற்கில்லை.

சிவராமை நான் அந்த நாட்களில் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு திரிந்திருக்கிறேன் ,

அப்போது தாபனத்தின் முக்கியஸ்தர் களும் அமைப்பாளர்களும் உமாமகேஸ்வரனைச் சித்தங்கேணிச் சந்திக்கு அண்மையில் உள்ள எமது தற்காலிக முகாமில் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. சென்றிக்கு நின்ற என்னை வந்து சந்தித்துப் பேசிச் சென்ற சிவராமின் முகத்தில் வெற்றிச் சிரிப்பு நிறைந்திருக்க டொமினிக் கேசவன், சோவியத் கலைச்சொல் சிற்றகராதி ஒன்றை வைத்துப் புரட்டிக்கொண்டிருந்தார், அக்கண நேரப் புரட்டலில் 'போ' என்ற சொல்லுக்கு விளக்கம் கொடுக்கும் பக்கம் தளப் பொறுப்பாளர் கேசவன் முகத்திற்கு முன்னால் விரித்தபடியிருந்தது.

என் போன்றவர்களெல்லாம் தாபனத்தில் ஈர்க்கப்பட முகுந்தனின் ஆளுமையே பிரதான காரணம் என்பேன். அவர் பேச்சை ஒருமுறை முகாம் அணிவகுப்பு மரியாதை நிலையில் கேட்டிருக்கிறேன்.

அப்படி ஒரு சிறந்த பேச்சைக் கேட்பதற்காகவே நடுத் தெருவிற்கு வரலாம்.


2. அந்நாட்களில் இயக்கத் தலைவர்களின் முகங்கள் எப்படியிருக்கும் என்பதைக் காண்பதைக் காட்டிலும் அம்மிக்கு மேல் நின்று அருந்ததி நட்சத்திரத்தைப் பார்த்துவிடலாம்,

கடைசி வரை தாபன வெளியீடுகள் எதிலும் தன் படமோ அடையாளமோ வருவதைத் தவிர்த்துக் கொண்டார் முகுந்தன்.

ஒரேயொரு சிறிய படம் நாகராசா வாத்தி வெளியிட்ட பத்திரிகை ஒன்றில் 'செயலதிபர் செப்புகிறார்! 'என்ற செய்தியோடு வெளியானது,

அதற்கே ஒரு ஒவ்வாமை இருந்தது,

அவர் படுகொலைக்குப் பின்னர் அவரை நினைவுகூரும் இன்றைய பதிவுகளில் அவர் படம் வருகிறது,



(இ-வ): சந்திரிகா குமாரதுங்கா, முகுந்தன் என்கிற உமாமகேஸ்வரன் அருகிலுள்ளார். நடுவில் சிரிப்பவர் வெற்றிச்செல்வன். ஜிப்பா அணிந்திருப்பவர் விஜய குமாரதுங்கா. இது அக். 1985-ல் டெல்லியில் எடுக்கப்பட்ட படம்

அடிப்படையில் அவர் உயிரோடு இருக்க நேர்ந்திருந்தால் அவர் ஆளுகைக்கு உட்பட்ட விடயங்களில் அவர் படம் வெளிவருவதை அவர் அறவே விரும்பியிரார் என்பது தெளிவு.

அடிப்படையான விடயங்களுக்கே அதிர்ச்சியடையும் நிலைகளில் எல்லோர் நிலையும் இருந்தது .

தாபனத்துக்கு கப்பல் ஒடுகிறது! என்றால் அதிர்ச்சி, சொந்த அச்சகம் இருக்கிறது! என்றால் அதிர்ச்சி !

ஓட்டுக்கடை வசந்தனும் ஓடிவிட்டான்! என்றால் அதிர்ச்சி.

வெலிக்கடைப் படுகொலையை அண்மித்த மிக ஆரம்ப நாட்களில் தாபனத்தின் பாடல்கள் அனைத்தும் அரசியல் முதிர்ச்சியோடும் ஏகாதிபத்திய எதிர்ப்போடும் ஒரு உணர்வெழுச்சியோடும் கேட்க ஒரு விதிர்விதுப்பு இருக்கும்!

போரின் எக்காளத்தொனியோடு தாக்குதல் பிரதாபங்களைச் சொல்லிவந்த புறநிலையில் எந்தத் தாக்குதல்களும் இல்லாது மிக ஆரம்பகால ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத் தாக்குதல் ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு

‘கஞ்சித்தண்ணி ஒண்ணுமில்ல
காடு மலை சொந்தமில்ல
நாடற்ற கூலிகளா கண்ணு மச்சான்!
நாம நாதியற்ற மனுசங்களா கண்ணு மச்சான் ...

ஆட்சி மக்கள் ஆட்சியில்ல
ஆள்பவனும் சட்டாம்பிள்ள....‘

இப்படிப்போகும் ஒரு பாடல்,

‘புதிய பாதை அழைக்கிறது தோழா
புரட்சி வெல்ல
உழைத்திடனும் தோழா
பகுத்தறிவை வளர்த்திடனும் தோழா
மூடப் பழமைகளைக் களைந்திடனும் தோழா
தூளாகும் அதிகார வர்க்கம் வரும்
தமிழீழம் தொழிலாளர் பக்கம்’

இப்படி ஒன்று..

ஆணும் இங்கே பெண்ணும் இங்கே அடிமைகள் இல்லையடா
ஆள்பவன் செய்யும் அதிகாரத்தை அஞ்சாதெதிர்த்திடடா ..
உடமைகள் எதுவும் இழப்பதற்கில்லை
ஆயுதம் நீ தாங்கு
உறுஞ்சும் இந்தச் சுரண்டல் அமைப்பை உடைத்துத் தூளாக்கு!

இப்படியாக ஒரு இடதுசாரி சிந்தனை முறையோடு அமைந்த ஒரு அரசியல் அமைப்பில் எட்டுத்திக்கும் ஒன்றையொன்று கவிழ்த்துப் போடும் சூழ் நிலைகளில் போராட்டத்தையும் தாபனத்தையும் காப்பாற்றிக் கொண்டு செல்வதெல்லாம் தண்ணீருக்குள் நெருப்பைக் கொண்டு செல்வதற்கும் மேலானது

பாரெங்கும் எத்தனையோ தாபனங்கள், புரட்சிகர விடுதலை இயக்கங்கள் முளையிலேயே கருகிய பின்தான் அவை அழித்தொழிக்கப்பட்ட பின்தான் அப்படி ஒரு அமைப்பு இருந்ததாக வெளியே தெரியவந்திருக்கின்றன .

3) டொமினிக்கின் ‘புதியதோர் உலகம்‘ வெளிவந்தபோது அதைப் படித்த ஒரு புகழ் மிக்க கம்யூனிஸ்ட் தலைவர் சொன்னது, ‘

‘இவையெல்லாம் தாபனத்திற்கு உள்ளே வைத்து விமர்சிக்கப்பட வேண்டியவை, விவாதிக்கப்பட வேண்டியவை, வெளியே அல்ல. எதிரிக்குத்தான் இவை வாய்ப்பாய் அமையும்.’

கட்சி உடைந்து அணி பிரிந்து கன்னை பிரிந்து முழுக் கம்யூனிஸ்ட் இயக்கமும் பலமிழந்து அழிந்துபோனதை கண்முன் கண்டு நொந்து வருந்தியவர் அவர் .

**அடிப்படையான விடயங்களுக்கே அதிர்ச்சியடையும் நிலைகளில் எல்லோர் நிலையும் இருந்தது.**

**தாபனத்துக்கு கப்பல் ஒடுகிறது! என்றால் அதிர்ச்சி,**

**சொந்த அச்சகம் இருக்கிறது! என்றால் அதிர்ச்சி !**

**ஓட்டுக்கடை வசந்தனும் ஓடிவிட்டான்! என்றால் அதிர்ச்சி .**

முன்பின் இடது தாபனங்களில் இணைந்து வேலை செய்த பழக்கமின்றி ,நடுத்தர வர்க்கத்தின் தூய்மைவாத நோக்கில் எல்லாவற்றையும் அணுகி தானும் அழிந்து இருந்ததையும் இல்லாமற் செய்த எந்தவொரு தூய்மைவாதக் குறுங்குழுவுக்கும் ‘ தீப்பொறி ‘என்று பேரிடலாம்.

அந்தத் தீப்பொறிக் குழுவின் இரண்டு பிரதானிகளும் தாபனத்தின் அதியுச்ச பொறுப்பில் இருந்தவர்கள், ஒருவர் காந்தன், ஜான், உமாமகேஸ்வரனுக்கு அடுத்தவர்,

டொமினிக் கேசவன் தளப் பொறுப்பாளர்.

இவர்களால் தாபனத்தின் குழப்பங்களை சீராக்க முடிந்திராதா? முடிந்திருக்கும்!

எங்கே பிழைத்தது?

தூய்மைவாதக் கண்ணோட்டம் !

அது புதியதோர் உலகம் நூலிலும் வெளிப்படையாக இருக்கும்.

எல்லோரும் ‘குமிழியாளர்களைப் போல அப்பழுக்கிலாத தூய்மையாளர்கள் !

பச்சாதாபத்தையும் கழிவிரக்கத் தையும் வேண்டி இரந்து தம்மைப் புரட்சியாளர்களாகவும் போராளிகளாகவும் நிறுவுவதில் கடைசி ஆசையைக் கொண்டிருப்பவர்கள் .

இதிலிருந்து உமாமகேஸ்வரன் வேறுபடும் இடம் எல்லாவற்றையும் தான் பொறுப்பேற்றுக்கொண்டது.

இவையெல்லாம் நீண்டகால நோக்கில் நிவர்த்தி செய்யக்கூடியவை என அவர் அப்போது நம்பினார் ,

ஜோர்ஜ் அப்பாஸ் போன்ற பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்களில் ஒருவரிலிருந்து, சந்திரசேகரன் போன்ற மலையகத் தலைமையிலிருந்து, தென்னிலங்கை புரட்சிகர சக்திகளிலிருந்து, கம்யூனிஸ்ட் தலைவர்களிலிருந்து இந்திய வெளியுறவுச் செயலாளர் பார்த்தசாரதி வரை அவருக்கு செல்வாக்கு இருந்தது, அவர்கள்

உமா மகேஸ்வரனை நம்பினார்கள்.

இந்த நம்பிக்கையே எல்லாவற்றிற்கும் ஆதாரம் .

தம்மை நம்பி வந்த தோழர்களையும் மக்களையும் வீண் அழிவுகளில் இழுத்து விட்டுவிட்டு சாகச வாதங்களில் சுவை கண்டு தன் இரத்தத்தை சுவைத்துண்டு பாலைவனங்களில் அலையும் ஒட்டகங்களாக ஆவதை அவர் பல்வகை அழுத்தங்கள் இருந்தபோதும் தாபனத்துள் அனுமதிக்கவில்லை.

பலஸ்தீனத்தின் சப்ரா, சட்டிலா முகாங்களின் படுகொலை நினைவை சுமந்து ஒரு புதியபாதை இதழ் வந்தது, அதை ஒரு படிப்பினை நிகழ்வாக எதிர்காலத்துக்கு எச்சரிக்கை கொடுத்து அமைந்த கட்டுரை. அந்த எச்சரிக்கை சுட்டிக்காட்டிய வழியிலேயே எம் எல்லோர் விதியும் ஈற்றில் அமைந்தது.

பிரபல்யமான இடதுசாரி மற்றும் கொம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர்களெல்லாம் தாபனத்தில் இணைந்திருக்கிறார்கள், ஆதர வாளர்களாக இருந்திருக்கிறார்கள். அரசியல் வகுப்புகளை நடாத்தி யிருக்கிறார்கள். சமூக விஞ்ஞானக் கல்லூரி இருந்திருக்கிறது.

தலைமறைவு தென்னிலங்கை புரட்சிகர சக்திகள் அடைக்கலம் கொண்டு தம்மைத் தற்காத்து வந்துள்ளார்கள்.

இவ்வழியே 'நீண்ட கால மக்கள் யுத்தம்' எனும் இயக்கப்போக்கு, சிந்தனைமுறை இன்றும் மிகப் பலமான ஒரு புரட்சிகர வழிமுறையாகவே காண்கிறேன்.

அதன் வெற்றிடம், அதன் வழி அமைந்த மக்கள் இயக்கத்தின் மகத்தான தளபதியாகிய உமா மகேஸ்வரன் அவர்களின் வெற்றிடத்தால் இன்றும் அச் செல்நெறி உணரப்படுகின்றது,

குறிப்பாக தென்னிலங்கை சிங்கள இனவாத சக்திகளுக்கு தாபனத்தின் அழிவு ஒரு பெரிய வாய்ப்பு .

இன்னொரு தளத்தில் 'எச்சத்தால் காணப்படும்' என்ற தொல்நூல் வழக்கிற்கேற்ப தாபனம் கொடுத்த அடிப்படைப் பயில்நிலை - Formation - இன்று சமூக சேவைகளில் உள் நாட்டிலும் புலம்பெயர்ந்தும் தம்மை இணைத்துக் கொள்பவர்களாகவும், போரின் போதான அழிவுகளிலிருந்து துன்பப்பட்ட மக்களுக்கு ஓரளவேனும் ஆறுதல் தரக்கூடியவர்களாகவும் அதன் முன்னாள் அங்கத்தினரை வளர்த்தெடுத்திருக்கிறது.

சீரமைக்க முடியாத அளவிற்கு தாபனம் உருச்சிதைந்து விட்டதென்றால் எஞ்சியிருக்கும் அதன் அங்கத்துவர்களைக் கொண்டு ஒரு புரட்சிகர இயக்கத்தை மீட்டுருவாக்கம் செய்யமுடியாதென்றால் அந்த தாபனத்தைக் கலைத்துவிடும் ஒரு இயல்பான நிலைக்கு அவர் ஈற்றில் வந்துசேர்ந்திருந்தார்,

'நீங்கள் எல்லாம் போய்விடுங்கள் !

மலையக மக்களையும், சிங்கள முற்போக்கு சக்திகளையும் இணைத்து நான் புதியதொரு தாபனத்தை உருவாக்கப்போகிறேன்! என்ற அவரது முடிவு ஒரு நெகிழ்ச்சியான புரட்சிகர முடிவாகவே இன்றும் தெரிகிறது.

அதுவே அவரது மரணத்திற்கும் காரணமாய் அமைந்தது என்பது தற்காலப் பதிவுகளில் இருந்து உய்த்துணரக்கூடியதாக உள்ளது.

மேலும் நீடித்த கால யுத்தச் சூழலில் எல்லா ஆளுமைகளும் உருச்சிதைந்து அழிந்து போவதே விதிக்கப்பட்டது.

வவுனியாவில் அமைந்த அவரது பெயரிலான தெருவும் உருவச் சிலையும் ஒரு நெருக்கடியான, சிக்கலான சூழ்நிலையில் அமைந்த ஒரு புரட்சிகர விடுதலை இயக்கத் தலைவனின் பெயரைச் சொல்லுமென்றால் அது பொருத்தமானதுதான்.

புயலடித்து ஓய்ந்து விடிந்த ஒரு காலையில் விடிந்தபின்னும் தெரிகின்ற ஒரு நட்சத்திரத்தின் உள்ளார்ந்து எரிகின்ற ஒளிர்வில் அவர் பெயர் நின்றிலங்கும்.

தோணி போகும், துறை நிற்கும் !

1) சப்ரா மற்றும் ஷதிலா படுகொலை 16 முதல் 18 செப்டெம்பர் 1982 வரை பாலஸ்தீனியர்களுக்கு எதிராக சப்ரா சுற்றுப்புறத்திலும் பாலஸ்தீனிய அகதிகள் முகாமிலும் நிகழ்த்தப்பட்டது..

2) கோமிண்டாங் (KMT) [Guomindang (GMD) தேசியவாதக் கட்சி (NPC) அல்லது சீன தேசியவாதக் கட்சி (CNP) என்பது சீனக் குடியரசின் ஒரு முக்கிய அரசியல் கட்சியாகும், ஆரம்பத்தில் சீனப் பெருநிலப்பரப்பிலும், பின்னர் தைவானிலும் 1949 முதல் Era-49 வரை ஆட்சியில் இருந்தது. சீன நிலப்பரப்பின் பெரும்பகுதி அதன் கட்டுப்பாட்டில் இருந்தது. சீன உள்நாட்டுப் போரில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, கட்சி 7 டிசம்பர் 1949 அன்று பிரதான நிலப்பகுதியிலிருந்து தைவானுக்கு பின்வாங்கியது. சியாங் காய்:ஷேக் இராணுவச் சட்டத்தை அறிவித்தார் மற்றும் 1980 களில் ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் 1990 களில் முழு ஜனநாயகமயமாக்கல் வரை டாங் குவோ அமைப்பின் கீழ் தைவான் மீது அதன் சர்வாதிகார ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டார். இன்று தைவானிய அரசியலில், KMT ஒரு மையவலது முதல் வலதுசாரிக் கட்சியாகும், மேலும் இது பான்: ப்ளூ கூட்டணியில் மிகப்பெரிய கட்சியாகும். தேர்தல்களில் KMT இன் முதன்மைப் போட்டியாளர் ஜனநாயக முற்போக்குக் கட்சி (DPP) மற்றும் பான்:கிரீன் கூட்டணியில் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆகும். 2023 ஆம் ஆண்டு நிலவரப்படி, யுவானின் சட்டமன்றத்தில் தற்போது KMT மிகப்பெரிய எதிர்க்கட்சியாக உள்ளது. தற்போதைய தலைவர் எரிக் சூ.

நவீன சகாப்தத்தில், ஹாங்காங்கில் உள்ள பெய்ஜிங் சார்பு முகாமுக்கு நிகரான இரண்டு பெரிய கட்சிகளின் சீன சார்பு கட்சியாக பரவலாகக் காணப்படுகிறது. (நன்றி கூகிள் )

# சுட்ட க[வி]தைகள்

## சுட்ட பரம்பரை

ஆண்ட பரம்பரை
என்றுதான் புறப்பட்டோம்
மீண்டுமொரு முறைக்காய்..

எதிரியைச் சுட்டு

துரோகியைச் சுட்டு

எழுதியவனைச் சுட்டு

வாசித்தவனைச் சுட்டு

கதைத்தவனைச் சுட்டு

கதை கேட்டவனைச் சுட்டு

சுட்டுச் சுட்டு
ஆளற்றுக் கடைசியில்
நம்மையே நாம் சுட்டு

சுட்ட பரம்பரையானோம்.

## நவமகன்

## துர்)ப்பாக்கியம்

## து(ர்)ப்பாக்கியம்

துப்பாக்கிகள்
அவன் முதுகில்
தொங்கிக் கொண்டிருப்பதாகவே

எல்லோரும்
எண்ணிக்கொண்டிருந்தார்கள்

அவன்
சுட்டிக் காட்டியவர்களையெல்லாம்

சுட்டுத் தள்ளிக்கொண்டிருந்த
துப்பாக்கிகள்

அவனையே சுட்டுத்
தள்ளியபோதுதான் புரிந்தது

துப்பாக்கிகளின் முதுகில்தான்
அவன் தொங்கிக்கொண்டிருந்தான்
என்பது.

## கவிதைகள்

## நான்கு!

## வேறு வழி ?

அப்பாவைச் சுட்ட
ஆமியைச் சுடத்தான்
இயக்கத்திற்குப் போனான்

இயக்கமோ
தம்பியைச் சுட உத்தரவிட்டது

காரணம் கேட்டான்,
மாற்று இயக்கமென்றது
தலைமை

தயங்கினால்
அம்மா தனித்துவிடுவாள்
என்பதால்

வேறு வழியற்றுத்

தம்பியைச் சுட்டான்
அண்ணன்.

## இயக்கங்களின் இயக்கமாய்!

மூத்த மகனை
இரண்டாவது மகனின் இயக்கம்
சுட்டது

இரண்டாவது மகனை
மூன்றாவது மகனின் இயக்கம்
சுட்டது

முடிவில், மூன்றாவது மகனை
முள்ளிவாய்க்காலில் இராணுவம்
சுட்டது

சுட்டுச் சுட்டுச் சுட்டெரித்த
சுடலையில்

தேசியமும், சுயநிர்ணய உரிமையும்
சுடாமலேயே செத்துப்போனது.


# To: கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்
# மேற்பார்த்து: ஈழத்தமிழ்த் தேசியர்கள்

கடந்த யூலை மாத அபத்தம் இதழில், 'தம்மைச் சமூகத்தின் மீதான கரிசனை கொண்டவர்கள் என்றும், எழுத்தாளர்கள் என்றும் கருத்தியலாளர்கள் என்றும் கவிஞர்கள் என்றும் அரங்க நிறுவனர்கள் என்றும் இன்னும் பல்வேறு பெயர்களில் நம்மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கும் இவரைப் போன்ற, பலவகைப்பட்ட கலைஞர்கள் கடந்த காலத்தில் எப்படியெல்லாம் நாக்கு உளறப் பேசினார்கள் என்பதனைக் குறித்து எல்லோரும் அறிந்து கொள்ளவே இதனை முழுமையாகப் பதிவு செய்கிறேன்.' என்று எழுதி, கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன் அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த 'நந்தன்' இதழிற்கு 1990களின் இறுதிக்காலத்தில் அளித்திருந்த நேர்காணல் ஒன்றைப் பதிவிட்டிருந்தேன். நமது வாழ்வு சார்ந்து, ஈழவிடுதலையின் தர்க்கம் சார்ந்து ஒரு உரையாடலுக்கான வெளியை வெளிப்படையாகவே கோரி நிற்கும் நேர்காணல் அது.

ஆனால் அந்த நேர்காணல் வெளிவந்த காலத்திலேயோ அல்லது மீள இந்த நேர்காணலை அபத்தத்தில் பதிவு இட்ட பின்னாலோ கூட, யாரும் அது குறித்து உரையாடவிருப்பமற்று நகர்வது என்பது மிகவும் உற்று நோக்கப்பட வேண்டியதொன்று. இவர்கள் பல விடயங்களைக் கண்களால் மட்டும் பார்த்து விட்டுக் கடந்து போகவில்லை. எதைப் பேச வேண்டும் என்றும், எதைத் தாம் பேசாது தவிர்க்க வேண்டும் என்றும் மிகவும் நுண்ணிய திட்டமிடலுடன் சிந்தனைக்குள்ளால் கடந்து போகிறார்கள். இதுவே நமது சமூகத்தின் இன்றைய இழி நிலைக்கு முக்கிய பங்கு ஆற்றிய, ஆற்றிக் கொண்டிருக்கும் தொடர் விடயமாகும்.

உங்களைப்போலவே, இன்னும் சொல்லப் போனால் உங்களை விடவும் கவிஞர் ஜெயபாலன் அவர்கள் எனது அதிக விருப்பத்திற்குரியவரே. எனது பதின்ம வயதில் அவரது 'சூரியனோடு பேசுதல்' என்ற அவரது முதலாவது கவிதைத் தொகுதியை வாசித்து நான் பிரமித்திருக்கிறேன்.

1985ம் வருடக் காலம் என நினைக்கிறேன் (சரியாக ஞாபகம் இல்லை) 'சூரியனோடு பேசுதல்' என்ற தொகுப்பினைக் கையில் எடுத்துக் கொண்டு எனது அப்பாவைச் சந்திக்க மல்லாவியில் வீட்டிற்கு வந்திருந்தார். அவரும் எனது அப்பாவும் மிக நெருங்கிய நண்பர்கள். அவர்கள் இருவரும் எமது வீட்டு முற்றத்திலிருந்த மணல் நிரப்பியிருந்த தொட்டியில் ஏறியிருந்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.


படம் 1992 பாரீஸ் இலக்கியச் சந்திப்பு

அவர்களது சந்திப்பின் பின்னர் ஏதோ ஒரு வகையில் அந்தக் கவிதைத் தொகுதியை தொட்டு வாசிக்கச் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது.

'நாம் வாழவே எழுந்தோம். சாவை உதைத்து. மண்ணிலெம் காலை ஆழப் பதித்து மரண தேவதை இயற்கையாய் வந்து வருக என்னும் இறுதிக் கணம்வரை ,மூக்கும் முழியுமாய் வாழவே எழுந்தோம்!'

என்று 1983 அழிவினை எழுதிய அன்றைய ஜெயபாலனிடம் எந்தப் பொய் முகத்தையும் நான் பார்க்கவில்லை.

1985ம் வருடம் மல்லாவியில் பார்த்த அந்தக் கவிஞனை 1992 ஆண்டு மீண்டும் பாரீஸ் இலக்கியச் சந்திப்பில் பார்த்தேன். அங்கே அவர் நீண்ட நெடுங்கவிதை ஒன்றை வாசித்தார். மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையிலிருந்த கவிதை மொழி அது. அவர் உட்பட அங்கிருந்த அனைவரும் வேறு ஒரு மனநிலைக்குள் கொண்டு செல்லப்பட்ட நிலை அது. அவரது கவிதையை அவரே வாசிக்கும் பொழுது எழும் கவிதையின் உருக்க மொழி, பல கவிஞர்களுக்கு வாய்ப்பதில்லை. தம்மைக் கவிஞர்கள் என அழைக்கும் பலர், மற்றவர்களுடைய கவிதைகளை வாசிக்க முடியாதிருக்கும் நிலையைக் கண்டிருப்பீர்கள். ஆனால் நம்மிடையே வாழும் பல கவிஞர்களுக்கு தமது கவிதைகளையே உறுத்து வாசிக்க முடியாது திண்டாடும் பல தருணங்களை நான் கண்டிருக்கிறேன். ஆனால் கவிஞர் ஜெயபாலன் அவர்களுக்கு அது ஒரு பொறி.

'பல்கலைக்கழக முன்றிலில் நின்று
தொடுவானங்களை எட்டிப் பிடித்த
எத்தனைபேரைக் களபலி தந்தோம்.

விமலதாசனை, ரவிசேகரனை
திருமலை தந்த கேதீஸ்வரனை
முல்லைத்தீவின் சிறீ எனும்
தோழனை
பொன்பூச் சொரியும் நிழல்
வாடிகளின்
நிழலில் நின்று
விடுதலைப் போருக்கு எம்மை
அழைத்த
எத்தனை பேரை நாங்கள்
இழந்தோம்.

வெடிகுண்டின்மேல் வீழ்ந்து
படுத்து
தோழரைக் காத்த
'வெத்திலைக் கேணி' அன்புவைப்
போல
இன்னொரு தோழனை காண்பது
எப்போ?

'காரைதீவுக் கடற்கரைப் போரில்
இரண்டாம் வன்னி நாச்சியாய்
எழுந்து
வீரம் விளைத்த சோபா என்ற
தேவதை போல
மீண்டுமோர் தோழியைக் காண்பது
எப்போ?

சாவகச் சேரியில் எதிரியை வேருடன்
கல்லி எறிந்த நீக்கிலஸ் போலவும்
நித்திரைப் பாயில் முற்றுகையிட்ட
நூற்றுவர் நடுங்கக் கூற்றென எழுந்த
வன்னிச்சிறுத்தை காத்தான் போலவும்
கொழும்பு வீதியில் போர் முரசறைந்த
மாணவன் பரிபூரணனைப் போலவும்
இன்னொரு தோழமை எய்துமோ
வாழ்வு?

விடுதலைக்கு மூலைக் கல்லாய்
இவர்களைத் தானே
நாங்கள் நாட்டினோம்
விடுதலைக்குத் திசை விண்மீனாய்
இவர்களைத்தானே நாங்கள்
எரித்தோம்'

என்பதனைப்போல பல்வேறு கவிதைகளை அவரின் மொழிச் செய்நெறிக்கு உதாரணமாகக் காட்டலாம். இந்த வரிகளை நீங்கள் வாசிக்கும் போது மனித வாழ்வின் அந்தரத்தை நீங்கள் கைவைத்து வருடும் உணர்வு அனைவருக்கும் ஏற்படும். அது ஒரு தனி மொழி. அவரது கவிதைக்கு எப்பொழுதும் நான் மிகச் சிறந்த ரசிகன்.

அப்படியான ஒரு இரசிக மனநிலையில் அங்கே அந்தக் கவிஞருடன் சேர்ந்து புகைப்படம் ஒன்று எடுத்துக் கொள்ள வேண்டும் என விரும்பினேன். இன்றும் ஒரு கவிஞனாக எனக்கு ஜெயபாலன் அவர்களை நன்கு பிடிக்கும். அவர் பின்நாளில் நடிகனாக சினிமாவில் அறிமுகமானபொழுது ஆடுகளத்தின் பிதாமகனாக உருவாகிய பொழுதில் அன்று நானிருந்த மனநிலையோடு எனது பிள்ளைகள் இருந்தார்கள். அவரைக் கண்டவுடன் அவருடன் ஒரு புகைப்படம் எடுத்துவிடும் ஆசை அவர்களுக்கும் இருந்தது. இதுவொரு ரசிக மனநிலைதான். இன்னொரு பக்கம் எந்த மதிப்பீட்டையும் அது கொண்டு காப்பதில்லைத்தான். ஆனால் ஜெயபாலன் அவர்களது கவிதை மனதிற்கு ஒரு மதிப்பு உண்டு என்றே இன்றும் நான் நினைப்பவன். வெறும் உணர்ச்சிக் கதையாடலாக அது விரிவதான ஒரு தோற்றத்தைப் பலர் கொள்ளக் கூடும். காசி ஆனந்தனது கவிதைக்கும் அவரது கவிதைக்கும் வேறுபாடில்லை எனப் பலர் குறை சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் எனது எண்ணம் அதுவல்ல.

கவிஞர் ஜெயபாலன் அவர்களது கவிதைகள் எப்பொழுதும் பொய் கலந்ததாக இருக்காது. அவர் தான் நம்புவதற்கு அந்தக்கணமே நேர்மையாக இருக்க முனைபவர். அவரது அகதியின் பாடல் கவிதைத் தொகுதியில்

யாழ் நகரில் என் பையன்
கொழும்பில் என் பெண்டாட்டி
வன்னியில் என் தந்தை
தள்ளாத வயதில்
தமிழ்நாட்டில் என் அம்மா
சுற்றம் பிராங்போட்டில்
ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்
நானோ வழிதவறி
அலாஸ்கா வந்து விட்ட ஒட்டகம்
போல் ஒஸ்லோவில்.

என்ன நம் குடும்பங்கள்

காற்றில் விதிக்குரங்கு கிழித்தெறியும்
பஞ்சுத் தலையணையா?

என எழுதிச் செல்லும் வரிகளில் எந்தப் புனைவும் இருந்ததில்லை.

ஒருவகை நயத்தோடு நிஜ வாழ்வை எழுதுவதில் மகத்தானவர் அவர். இதுதான் அவரது உண்மை முகம்.

ஆனால் இந்த முகத்தைத் தொலைத்து இந்த நேர்காணலில் அவரைப் பொய் சொல்லத் தூண்டியது எது? அதற்கு அவர்தான்

விளக்கம் சொல்ல வேண்டும். இந்த நேர்காணலில் அவர் மனமறிந்து சுத்துமாத்து விடுகிறார் என்பதே என் கருத்து. இந்த வகையான சுத்துமாத்துத் தனத்தை அவர் கைக் கொண்டிருக்கவே கூடாது. தனது வாழ்வியல் அனுபவத்திலிருந்து, தான் ஏற்கனவே எழுதிய பல்வேறு ஆய்வுகளிலிருந்து எந்தக் கருத்துக்களையும் அடிப்படைக்குக் கூடப் பெறாது அவற்றிற்கெல்லாம் எதிராகக் கருத்துரைக்கத் தூண்டியது எதுவென்று இன்றைக்காவது அவர் வெளியில் சொல்ல வேண்டும் தானே.

இது அவரைக் குறித்தது மட்டுமல்ல அவரை மறுத்துக் கருத்துச் சொல்லத் தேவையே இல்லை என்ற மனநிலையில் வாழும் மற்றய இலக்கியப் புலிப் பயில்வான்களுக்குமானதே. ஒரு உரையாடலாக எதையும் கடந்து போக நினைக்காது வெறுமனே தற்குறித்தன ஆவர்த்தனங்களாக ஆடும் நமது இலக்கியப் பயில்வான்கள் கேலிக்குரியவர்களே. வாழும் சூழலில் நான் முக்கியமாகக் குறிப்பிட்டு நிற்கும் இடமும் நிலையும் இதுதான். இந்த வகைக் குளறுபடிக்களுக்கு முக்கிய காரணகாரியமாக இருப்பவர்கள் இந்தப் புலிப் பயில்வான்களேதான் என்பதுவே என் கணிப்பு. இவர்களுக்கு யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை. தமது இருப்பும் வாழ்வும் என்ற தற்குறித்தனமே கணிப்பு.

இனி அந்த நேர்காணலில் அவர் குறித்து நிற்கும் சுத்துமாத்துக்களை ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

சுத்துமாத்து 1 போராட்டங்களுக்குப் பிறகு இன்றைக்குத் தமிழ் பேசுகிற முஸ்லீம்களுக்கு மத்தியில் தேயிலைத் தோட்டத்தை மையமாகக் கொண்ட மலையகத் தமிழ் மக்கள் மத்தியில், யாழ்ப்பாணத்துக்கு வெளியில் உள்ள மட்டக்களப்பு, வன்னி, அம்பாறை போன்ற கிழக்கு மாகாணத் தமிழர் முஸ்லீம்கள் மத்தியில் ஆண் பெண்களிடத்து நிறைய விழிப்புணர்ச்சியும் கலாச்சார எழுச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

**இவர்களைப் போன்றவர்கள் ஈழத்தில் 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள்' குறித்துக் கருத்தாட முனையும் போது பொதுவான கண்ணோட்டத்தில், ஈழத்தில் கடந்த காலம் முழுவதுமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த கரிசனையில் அதனை அறிய முற்படுவதில்லை. மாறாக அதனையும் அவர்கள் தமது குறுகிய ஈழத்தமிழ்த் தேசியச் சிந்தனைக்குள் இருந்து முள்ளிவாய்க்காலுக்குள் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து மட்டுமே பேச முற்படுவார்கள். அதிலிருந்து அவர்களை நாம் அயோக்கியர்கள் என்று இலகுவாக அடையாளப்படுத்திவிட முடியும். கண்டு பிடித்துவிட முடியும். ஆனால் இவர்கள்தான் பெருவாரியாக கலைஞர்கள் என்ற போர்வையில் நமது சமூகத்தில் உலாவந்து கொண்டிருக்கிறார்கள்.**

உண்மையான ஈழத்து இலக்கியம் இப்போதுதான் பரிணமிக்க ஆரம்பித்திருக்கிறது' என்று சொல்கிறார்.

இந்த இடத்தில் இவர் சொல்லும் 'போராட்டங்களுக்குப் பிறகு' என்ற அர்த்தம் எதைக் குறித்து நிற்கிறது? ஆக, ஈழத்தின் சாதியவிடுதலைப் போராட்டங்களினூடு எழுந்த எழுச்சியோ அதனோடு கூடிநின்ற எழுத்து முறைமைகளோ அல்லது கருத்தியல் போராட்டங்களோ உண்மையான ஈழத்து இலக்கியத்துக்குள் அடையாளம் காட்ட முடியாதா? அன்றைய காலத்தில் வன்னியில் புலிகளிடம் ஞானஸ்தானம் பெற்றெழுந்து பேசிய வார்த்தைகளல்லாமல் வெறென்னவாக நாம் இதனைப் பார்க்க முடியும்? தன்னியல்பு தவிர்த்து கவிஞர் இவ்வாறு தடம் புரண்டு சீழிந்து போனது என்பது எனக்கு இன்றும் மிகப்பெரிய மனக்குறையே.

சுத்துமாத்து 2. 'விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லீம்களுக்கும் ஏற்பட்ட பிரச்சனையை முஸ்லீம்கள் கூடச் சமயப்பிரச்சனையாகப் பார்க்கவில்லை. இரு தமிழ் பேசுகிற இனங்களுக்கிடையேயான பிரச்சனையாகத்தான் அவர்களும் அதைப் பார்க்கிறார்கள்.' என்று சொல்லும் கவிஞர் அந்தப் பிரச்சனை என்னவென்று எந்த இடத்திலும் சொல்லவில்லை. இந்த இடத்தில் வடபகுதியிலிருந்து ஒட்டு மொத்தமாக 24 மணி நேரத்திற்குள் காலக்கெடு விதித்து வெளியேற்றப்பட்ட கொடூரம் குறித்து எதுவுமே சொல்லாது கடந்து போய் இரண்டு இனங்களுக்கிடையேயான பிரச்சனை என முடித்து வைக்கிறார்.

உண்மையில் கவிஞர் ஜெயபாலன் அவர்களுக்கு அந்த சம்பவங்களின் பின்னிருந்த அயோக்கியத்தனமான அரசியல் நன்கு தெரிந்திருந்தும் இங்கே அதனை மழுப்பிப் பொய் சொல்கிறார். உண்மையில் வடபகுதியிலிருந்து முஸ்லீம்களை வெளியேற்றியதற்காக அப்போது புலிகளால் சொல்லப்பட்ட காரணத்தின்படி பார்த்தால், பாதித் தமிழ் பேசும் இந்துக்களும் தமிழ் பேசும் கிறித்தவர்களும் வெளியேற்றப் பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி நிகழவில்லை. ஆக, 'முஸ்லீம்கள் கூடச் சமயப்பிரச்சனையாகப் பார்க்கவில்லை.' என்று முஸ்லீம்கள் சார்பாகச் சொல்லவருவதன் சூத்திரம் என்ன?

சுத்துமாத்து 3. 'மூவாயிரம் நாலாயிரம் இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டும் இராணுவ முகாம்களாக மாற்றப்பட்டும் இருப்பது உங்களுக்குத் தெரியும். இது தொடர்பாக இந்தியாவில் உள்ள இந்து அமைப்புக்கள் கோபப்பட்டால் அது நியாயம் இல்லை என்று கூறமாட்டேன்' என்கிறார்.

இந்து அமைப்புக்கள் கோபப்படுவது இருக்கட்டும். இந்தமாதிரியான பொய்யை ஜெயபாலன் அவர்கள் உதிர்த்து இத்தனை நாள் ஆகியும் ஈழத்திலுள்ள எந்த அமைப்பிற்கும், எந்தத் தனிநபருக்கும், எந்த இலக்கிய

சமூக ஆர்வலர்களுக்கும் எந்தக் கோபமும் வரவில்லை என்பதுதான் அபத்தம். இவ்வாறு தமிழகச் சூழலுக்குள் ஒரு கதையையும் ஈழத்தின் சூழலுக்குள் இன்னுமொரு கதையையும் சொல்லிவருபவர்களின் முன்னோடியாக இருப்பவர் கவிஞர் ஜெயபாலன் அவர்கள் தான். அவரைப் பின் தொடர்ந்தவர்கள் தான் சோபாசக்தி போன்றவர்கள்.

அதிலும் தமிழ்நாட்டிலிருக்கும் ஞானக் கூத்தனும் சோவும் தங்களைப் பிழையாக விளங்கி வைத்திருக்கிறார்கள் என்று விளக்கம் சொல்கிறார். அடிப்படைச் சிந்தனையில் மகாமோசமான கருத்தியலை உதிர்க்கும் சோ போன்றவர்கள் கொஞ்சம் மனம் மாறித் தங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் எனக் கெஞ்சுகிறார். இதற்குள் 'முஸ்லீம்கள் கூடச் சமயப்பிரச்சனையாகப் பார்க்க வில்லை.' என்று புலிகளது பாசிசச் சிந்தனையின் வெளிப்பாட்டிற்கு பொன் முலாம் பூச வெளிக்கிடுகிறார்.

சுத்துமாத்து 4. 'விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக் குமிடையிலான முரண்பாடுகளை சிங்கள அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறதே தவிர சிங்கள அரசு இந்தியாவை நண்பனாக ஒருபோதும் பார்க்கவில்லை. அப்படி இருந்திருந்தால் தமிழக மீனவர்களை சிங்கள அரசு ஒருபோதும் நாய்களைப் போல் சுட்டுத் தள்ளாது. தமிழக மீனவர்களை அச்சுறுத்தி எதிர்காலத்தில் அவர்களை தங்களது கையாட்களாக மாற்றுகிற நோக்கம் சிங்கள அரசுக்கு இருப்பதாக நம்மில் பலருக்குச் சந்தேகம் உள்ளது.' என்கிறார்.

பாருங்கள், இங்கே இலங்கை இந்தியச் சூழலில் உருவாக்கப்பட்டிருக்கும் மீனவர்களது சிக்கல்கள் எதையும் விரிவாக ஆராயாமல் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறும் தமிழக மீனவர்கள் சுடப்படுவது மொழியால் அவர்கள் தமிழர்களாக இருப்பதால் என்கிற தமிழ்த் தேசியத்தின் மோட்டுச் சிந்தனை என்பதுடன் புலிகளின் தொப்பூழ் கொடி உறவு என்ற சாபத்தின் நீட்சியேயல்லாமல் அது வேறு என்ன?

அதிலும் சிங்கள அரசு தமிழக மீனவர்களைச் சுட்டு வெருட்டித் தமது கையாட்களாக மாற்றப் போகிறார்கள் என்று இவருக்கு சந்தேகம் வேறு இருக்கிறதாம். இவர் புலிகளின் கையாளாக மாறிப்போனதில் உளறும் வார்த்தைகள் தானே இவை. ஒரு கவிஞன் என்பவன் இந்த இடத்தை வந்து அடைந்திருக்கவே கூடாது. ஆனால் என்ன நமக்கு வாய்த்த பல ஈழத்துக் கவிஞர்கள் இறுதியில் வந்து அடைந்த இடம் இதுவாகத்தான் இருக்கிறது. அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் தேசியம் எனச் சொல்லிவந்த கதை உண்மையாகத்தான் இருக்கிறது.


எனக்கு இந்த வகைக் கவிஞர்களிலோ அல்லது இவர்களைப் போன்ற போடுதடிகளிலோ கோபம் வரவில்லை. மாறாக இவர்கள் சொல்லுகின்ற இந்தக் கருத்துக்கள் இந்த சமூகத்தை எப்படியெல்லாம் பாழ்படுத்திப் போனது என்று இன்று வரை உரையாடாது கடந்து செல்பவர்கள் மீதே அதிக கோபம் வருகிறது. நமது சமூகத்தில் கருத்தியலாளர்களாகவும் உரையாடல் வெளிகளைத் திறந்து விடுபவர்களாகவும் காட்டாப்புக் காட்டி வரும் பலர் இது போன்ற எந்த விடயங்களையும் பாராது கடந்து போய்விடுவார்கள். தமக்குள் சிறு உரையாடலைத் தன்னும் நிகழ்த்தாது கடந்து போய்விடுகிறார்கள்.

உதாரணத்திற்கு இவர்களைப் போன்றவர்கள் ஈழத்தில் 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள்' குறித்துக் கருத்தாட முனையும் போது பொதுவான கண்ணோட்டத்தில், ஈழத்தில் கடந்த காலம் முழுவதுமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த கரிசனையில் அதனை அறிய முற்படுவதில்லை. மாறாக அதனையும் அவர்கள் தமது குறுகிய ஈழத்தமிழ்த் தேசியச் சிந்தனைக்குள் இருந்து முள்ளிவாய்க்காலுக்குள் வைத்துக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து மட்டுமே பேச முற்படுவார்கள். அதிலிருந்து அவர்களை நாம் அயோக்கியர்கள் என்று இலகுவாக அடையாளப்படுத்திவிட முடியும். கண்டு பிடித்துவிட முடியும். ஆனால் இவர்கள்தான் பெருவாரியாக கலைஞர்கள் என்ற போர்வையில் நமது சமூகத்தில் உலாவந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தமாதிரி எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக வாழ்ந்து விட்டுப் போக நினைத்துக் கொண்டிருப்பவர்களைக் குறித்தே எக்ஸிலில் எழுதியிருந்தேன். அதனையும் விட 'யாழ்ப்பாணத்து சாதியமைப்பு: ஒரு சமூகவியல் பரிசீலனை என்ற ஆய்விலிருந்தும் 'தேசிய இனப்பிரச்சனையும் முஸ்லீம்களும்' என்ற நூலிலிருந்தும் எமது கவிஞர் ஜெயபாலன் அவர்கள் தனது ஆய்வாக எழுதியிருந்த அவரது கருத்துக்கள், எவ்வாறு அவரது இந்த நேர்காணலுக்கே எதிராக இருந்தது என்று எடுத்துக் குறிப்பிட்டு விளக்கம் காட்டியிருந்தேன்.

ஒரு குறிப்பிட்ட காலம் வரையும் ஈழச்சாதியமைப்புக் குறித்தும் ஈழத்து முஸ்லீம் மக்களின் வாழ்வு மற்றும் உரிமைகள் குறித்தும் தெளிவாகவும் :மிக விரிவாகவும் கருத்துச் சொல்லிவந்த கவிஞர் திடீரென்று தடம் மாறிக் கருத்துரைக்கும் பொழுது அதனை இடைமறித்தே ஆகவேண்டியிருந்தது எனக்கு.

அதனால்த்தான் இந்த நேர்காணலில் அவர் 'டானியல் அண்ணா, இக்பால், டொமினிக் ஜீவா, சண்முகதாசன் காத்திகேசு மாஸ்டர், எஸ்ரி.என் நாகரட்ணம், எம்சி.சுப்பிரமணியம் என்கிற சாதியப் போராட்டத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த தோழர்களால் ஊட்டி வளர்க்கப்பட்டவன் நான் என்று சொல்லும்போது, இவர்கள் யாருமே யாருக்கும் நஞ்சு வைக்கவில்லை என அன்றே எக்ஸிலில் எழுதிவிட வேண்டியிருந்தது. ஆம், இந்த நேர்காணலில் கவிஞர் ஜெயபாலன் அவர்கள் சொன்ன கருத்துக்கள் புலிகளையும் புலிகள் காட்டிய ஊத்தைத் தமிழ்த் தேசியத்தையும் காப்பாற்ற ஈழத்தமிழர்களுக்கு ஜெயபாலன் அவர்கள் வைத்த நஞ்சுதான் என்பதில் எனக்கு இன்றும் வேறு கருத்து இல்லை.. அ




# ஏறிச் சென்றவர்களால் மறக்கப்பட்ட ஏணி




இலக்கிய உலகம் அங்கீகாரம் தேடி அலைகிறவர்களாலும் சுயமோகிகளாலும் நிறைந்து வழிந்தபடியே இருக்கிறது. இந்தத் தேர்த்திருவிழா அமளிகளுக்குள் இலக்கியத்திற்காக உண்மையாகவே தங்கள் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் மறக்கப்பட்டபடியே இருக்கிறார்கள். அவர்கள் என்ன நம்பிக்கையைக் கொண்டிருந்து தங்கள் வாழ்க்கையைத் தொலைத்தார்கள் என்பதையோ, அதற்கான தர்க்கரீதியான நியாயத்தையோ இன்னமும் என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

அரசியல் தத்துவங்களை வரித்துக் கொண்டவர்கள், தங்கள் தலைமையில் நடக்கப் போகும் உலகப் புரட்சிகள் பற்றியும், தங்கள் கைகளில் கிடைக்கப் போகும் வர்க்கச் சர்வாதிகாரம் குறித்தும் நம்பிக்கையைக் கொண்டிருக்கக் கூடும்.

இலக்கியத்தை வரித்துக் கொண்டவர்களுக்கு என்ன நம்பிக்கை இருந்திருக்கும்?

குடும்பத்திற்கு உணவையோ, குழந்தைகளுக்கு அற்ப சந்தோசங்களையோ தரக்கூடிய சொற்பப் பணத்தைச் செலவிட்டு அச்சிட்ட இதழ்களையும் கவிதைத் தொகுப்பைகளையும் பையில் சுமந்து அலைந்து திரிந்து விற்றவர்களுக்கு என்ன எதிர்பார்ப்பு இருந்திருக்கும்?

இந்தச் சமூகம் திருந்தி விடும் என்ற எண்ணமாக இருக்குமா?

தங்களைத் தலையில் தூக்கிக் கொண்டாடித் தேர்த்திருவிழா நடத்தும் என்பதாக இருக்குமா? இந்தச் சமூகம் தங்கள் மளிகைக்கடைக் கடனை அடைக்கும் என்பதாகவோ, தங்கள் இதழ்களில் எழுதிப் பெயர் வாங்கியவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கான பள்ளிச் செலவைப் பொறுப்பேற்பார்கள் என்பதாக இருக்குமா?

இப்படி, இலக்கியத்திற்காக தன் வாழ்வைச் சிதைத்துக் கொண்ட பொன்.விஜயன் பற்றி முன்பு கவிஞர் இந்திரன் எழுதியிருந்தார். இதனால் பொன்.விஜயன் பற்றி மேலும் விபரங்களைத் தேடிப் பிடித்து அபத்தம் இதழில் எழுதியிருந்தோம்.

தற்போதும் அஃக் என்ற இதழை வெளியிட்ட பரந்தாமன் பற்றியும் கவிஞர் இந்திரன் எழுதியிருக்கிறார். இவரைப் பற்றி நான் ஒரு போதும் கேள்விப்பட்டதேயில்லை. எத்தனையோ இலக்கிய முக்கியஸ்தர்களைத் தூக்கி விட்ட அவரை இன்று நினைக்க ஆளில்லை.


'நெருங்கிப் பழகியவர்களை இன்று கேட்டால் பிடிவாதக்காரன், பைத்தியக்காரன், உலகத்தைப் புரிந்து கொள்ளாதவன் என்று என்னிடம் சொல்கிறார்களே ஒழிய, அவனுக்குள் வாழ்ந்த கலைஞனைப் பற்றி என்னிடம் பேசுவதில்லை' என்கிறார் கவிஞர் இந்திரன்.

ஆக, ஒரு பிழைக்கத் தெரியாதவன் என்பதுதான் இலக்கிய உலகின் தீர்ப்பு.

ஆன்மாவை விற்றுப் பிழைக்கத் தெரிந்தவர்கள் இலக்கியத்தால் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்கள் அதே இலக்கியக் கூட்டத்தால் கொண்டாடப்பட்டுக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

ஏமாளிகள் தங்கள் வாழ்க்கையைப் பலி கொடுத்து, தங்கள் குடும்ப வாழ்வையும் சிதைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை இந்தச் சமூகம் மட்டுமல்லாமல், அவர்களை ஏணியாகப் பயன்படுத்தி மேலே போனவர்கள் கூட நன்றியோடு





நினைவு கூராமல் இருக்கிறார்கள் என்பது தான் மிகவும் துயரமானது.

இப்படித் தங்களை உலகம் அறியக் காரணமாக இருந்தவர்களையே மறந்து விடும் அதே இலக்கியப் பெருந்தகைகள் தான் இன்றைக்கு 'இலக்கிய அறம்' பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அறம் பற்றி அதிகமாக அலட்டிக் கொள்கிறவர்களே அயோக்கியர்களாக இருக்கிறார்கள்.

முகநூலில் கவிஞர் இந்திரன் எழுதியிருந்த இந்தப் பதிவை அபத்தத்தில் நன்றியுடன் மறுபிரசுரம் செய்கிறோம்.



# அஃக் கலை இலக்கிய இதழை நடத்திய பரந்தாமன்

## கவிஞர் இந்திரன் ராஜேந்திரன்

அஃக் எனும் அபூர்வ கலை இலக்கிய இதழை நடத்திய பரந்தாமனை ஏன் மறந்தார்கள் இலக்கியவாதிகள்? பிரமிள், வெங்கட் சுவாமிநாதன், ஞானக் கூத்தன், கே.எம் கோபால் என்று அவர் தூக்கி விட்ட எழுத்தாளர்களும் ஓவியவர்களும் ஏராளம்.

இருந்தாலும் ஏன் மறந்தார்கள்? ஆத்மா நாம் பெயரில் ஒரு விருது உண்டு. ஜீ.நாகராஜன் பற்றி பேச ஆள் உண்டு. குழு மனப்பான்மை இல்லாது இயங்கிய பரந்தாமனிடம்

1.சாகும்போது பணம் இல்லை.

2. அவர ் எந்த ஜாதி சங்கத்தையும் சார்ந்தவர் இல்லை

3. எந்த இலக்கிய சன்னிதானத்துக்கும் ஜால்ரா அடிக்கவில்லை

4. தனித்துவமான கலை வெளிப்பாடு குறித்து யாரிடமும் சமரசம் செய்து கொள்ளவில்லை

5. எந்த கட்சிக்கும் சுவரொட்டி ஒட்டவில்லை.

1970ஜூனிலிருந்து 1980 ஜூன் வரை) இலக்கிய இதழை நடத்திய பரந்தாமன் என்கிற சமரசமற்ற ஒரு தனிமனித பட்டாளமாய் கலை இலக்கிய உலகில் இயங்கிய சிந்தனை காம்பீர்யம் கொண்ட ஒரு கலைஞன்.

தன் சொந்த வீட்டை விற்று சிற்றிதழ் நடத்தியவர். இன்று இவரை நினைத்துப் பார்க்க யாரும் இல்லை என்பதுதான் தமிழ் இலக்கிய உலகம்.

இதோ இவரது எழுத்தைக் கவனியுங்கள்.

'ஆக மொத்தம் பத்தாண்டுகள். ஒரு Decade. என்றாலும் நான் நினைத்த சர்வ நிச்சயமான சோபையுடன் அந்த மோகனமான முதல் 'அஃக்' இன்னும் வெளிவரவே இல்லை. இந்த பத்தாண்டுகளும் மனதாலும், சரீரத்தாலும் சதா சர்வகாலமும் இதையே நினைத்து இதற்காகவே அலைந்து திரிந்து இருக்கிறேன்.ஒரு பைத்தியக்காரனைப் போல என் கையில் இருந்த கடைசி சல்லியையு மிதற்காகவே செலவு செய்து விட்டு தற்சமயம் நான் தான் எனக்கு மீதியாகவிருக்கிறேன்.

நான் தூக்க நினைத்தது கோவர்த்தன கிரியை. குடிக்க நினைத்தது பாற்கடலை. இப்படி நினைக்கவே ஒரு மனோ தைரியம் வேண்டும்.

இது என் சுபாவம் எனக்களித்த சாகாவரம்.'

அஃக் பரந்தாமன் எழுதிய 'கடிவாளங்களோடு வருகிறார்கள்'

இறுதியில் சித்தப்பிரமை பிடித்து இறந்தார்.

இவரோடு நெருங்கி பழகியவர்களை இன்று கேட்டால் பிடிவாதக்காரன், பைத்தியக்காரன், உலகத்தைப் புரிந்து கொள்ளாதவன் என்று என்னிடம் சொல்கிறார்களே ஒழிய அவனுக்குள் வாழ்ந்த கலைஞனைப் பற்றி யாரும் என்னிடம் பேசுவதில்லை.

ஆனால் கடைசி வரை கலைஞனாகவே இருந்தார். கலைஞனுக்கு என்று ஒரு மூலை தமிழ்ச் சமூகத்தில் இல்லை என்பதின் ரத்த சாட்சி சேலத்தைச் சேர்ந்த அஃக் பரந்தாமன்.

பின் குறிப்பு. இவர் உயிரோடு இருந்த போது நான் சொன்ன ஒரு வார்த்தைக்காக இவரது மொத்த அஃ க் இதழ்களையும் ஒரு நூலாக வெளியிட்டார் ஜென்டில்மேன் பப்ளிஷர் சந்தியா நடராஜன். (இதற்காக பிறகு ஏராளமான துன்பங்களை அனுபவித்தார் என்பது வேறு கதை)




வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வலதுகரை வாய்க்கால், இடதுகரை வாய்க்கால் என இரு பிரமாண்டமான வாய்க்கால்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு குடியிருப்பாளர்களுக்கும் 3ஏக்கர் வயல் நிலமும் 2 ஏக்கர் மேட்டுநிலக் காணியும் வழங்கப்பட்டு அந்தக் காணியில் ஒரு சிறிய கல்வீடு, ஒரு குழி மலசலகூடம் ஆகியனவும் அமைத்து வவுனிக்குளம் குடியேற்றத் திட்டமாகக் கொடுக்கப்பட்டன.

இத்திட்டம் முடிவுறுத்தப்பட்டு 1960ஆம் ஆண்டு மக்களுக்குக் கையளிக்கப்பட்டது. இந்த வயல்களில் நீர்ப்பாசனத்தின் மூலம் நெற்செய்கை செய்யக்கூடியவாறு கிளைவாய்க்கால்கள் அமைக்கப்பட்டு காணிகள் துண்டு போட்டு எல்லைக் கற்கள் நடப்பட்டு மக்களுக்குப் பிரித்துக்கொடுக்கப்பட்டன.

வலது கரையின் கிழக்குப் பாகத்தில் பாலையடி (பாலிநகர்), இரண்டாம் யூனிற், முதலாம் யூனிற், மூன்றாம் யூனிற், நான்காம் யூனிற், ஐந்தாம் யூனிற் என வீட்டுத்திட்டங்கள் அமைக்கப்பட்டன. அதற்கு மேற்குப் புறமாக அதாவது வாய்க்காலைக் கடந்தால் வயலுக்குப் போக வசதியாக பாலங்கள் அமைக்கப்பட்டன. வாய்க்கால்களில் இருந்து மேற்காகச் செல்லும் பாதைகள் பாலியாற்றை ஊடறுத்துச் சென்றன. அதன் ஒரு புறத்தில் அமைக்கப்பட்ட கால்வாய்கள் பாலியாறுவரை நீண்டு சென்றன. மேலதிக நீர் கழிவு வாய்க்கால்கள் மூலம் பாலியாற்றுக்குள் சென்று சேரும் வழி இருந்ததால் மழைகாலத்தில் வயல்கள் நீரில் மூழ்கும் அபயம் இருக்கவில்லை. வவுனிக்குளம் நீர்ப்பாசன வேலைகளைக் கட்டமைத்தவர்கள் மிக நேர்த்தியாகவும் அர்ப்பணிப்புடனும் இதைச் செய்திருந்தார்கள்.

இந்த வவுனிக்குள வலதுகரை வாய்க்காலுக்கும் பாலியாற்றுக்குமான தொடர்பு நான்காம் யூனிற் பிள்ளையார் வாய்க்கால்வரை இருந்தது. துணுக்காய் : ஒட்டங்குளத்தை இணைக்கும் பாலியாற்றுப் பாலம் எனது இளமைக்காலத்தில் பிரமிப்பை ஏற்படுத்திய உலகின் மிகப் பெரிய பாலமாக இருந்தது.

### ஒரு ஏக்கர் திட்டம்

இந்த 5 ஏக்கர் வேலைத்திட்டத்தில் 3ஆம் யூனிற்றையும் நான்காம் யூனிற்றையும் ஐந்தாம் யூனிற்றின் ஒரு பகுதியையும் எல்லைகளாகக் கொண்ட ஒரு ஏக்கர் திட்டம் மல்லாவிச் சந்தி, மருத்துவமனை, மூன்றாம் யூனிற் மகாவித்தியாலயம்,

நான்காம் யூனிற் சங்கக் கடை ஆகியவற்றை மேற்கு எல்லையாகவும் மாங்குளம் : துணுக்காய் முதன்மை வீதியைக் கிழக்கு எல்லையாகவும் கொண்டிருந்தது. இந்தக் குடியிருப்பாளர்களுக்கு ஒரு ஏக்கர் மேட்டுக்காணி மாத்திரமே வழங்கப்பட்டதால் 'ஒரு ஏக்கர்' திட்டம் என்று பெயர் பெற்றது. 1977இன் பின் அறிமுகப்படுத்தப்பட்ட வவுனிக்குள வேற்று நீர்ப்பாசன வேலைத் திட்டத்திலும் இந்த 'ஒரு ஏக்கர்' திட்டம் உள்வாங்கப்படவில்லை. இதனால் விவசாய முயற்சிகளில் மிளகாய், வெங்காயம் ஆகிய செய்கைகள் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு ஒரு ஏக்கர் திட்டத்தில் வாழ்ந்தவர்களுக்கு இருக்கவில்லை. ஒரு வகையில் வவுனிக்குள நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் 3 ஏக்கர் வயற்காணியையும் ஒரு ஏக்கர் மேட்டுக் காணியையும் கொண்ட நான்கு ஏக்கர் நிலமே இந்தக் குடியிருப்பாளர்களுக்குக் கிடைத்தது.




### பழைய குடியிருப்பும் புதுக்குடியிருப்பும்

பொதுவாக ஒரு பழைய குடியிருப்புப் பகுதியில் புதிதாகக் குடியேறிய ஊர்களைப் புதுக்குடியிருப்பு என்று அழைப்பது வழக்கம். ஆனால் மல்லாவியையோ, ஏனைய வவுனிக்குளக் குடியேற்றத் திட்டத்தையோ யாரும் புதுக்குடியிருப்பு என்று அழைத்ததாகத் தெரியவில்லை. ஏற்கனவே மல்லாவிக் குளத்தின் கீழ் நெல் வயல்கள் இருந்த மல்லாவிக் குடிகளை "பழைய குடியிருப்பு, பழைய மல்லாவியார்" எனப் புதிதாகக் குடியமர்த்தப்பட்டவர்கள் அழைக்கும் வழக்கம் இருந்தது.

வவுனிக்குளக் குடியேற்றத்தை அண்மித்த பல பழைய குடியிருப்புகள் இருந்தன (பழைய வன்னி மக்கள்). நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், திராட்டி குளம், வன்னிவிளாங்குளம், அணிஞ்சியன் குளம், குஞ்சுக் குளம், மல்லாவி, துணுக்காய், ஆலங்குளம், சென்னியன் குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், கோட்டை கட்டிய குளம் எனப் பழைய குடியிருப்புக்கள் வன்னிச் சிற்றரசுகளுடன் சம்பந்தப்பட்டவை. இந்த மக்கள் தமது திருமண நடவடிக்கைகள், கொள்ளல், கொடுத்தல் விடயங்களைப் பழைய வன்னி மக்களுடனேயே வைத்திருந்தனர். இவர்களின் திருமண வைபவங்களில் கூடப் புதிதாகக் குடியேறியவர்கள் கலந்து கொண்டதாக எனக்கு ஞாபகமில்லை. இவர்களின் வாழ்க்கை வயல் செய்கை, மாடு வளர்ப்பு (பெரிய பட்டிகள்), வேட்டையாடுதல், குளத்து மீன் பிடி, நீர்ப்பாசன முகாமைத்துவம் என மட்டுப்படுத்தப்பட்ட இயற்கையுடன் ஒன்றிப்போன வாழ்க்கையை வாழ்ந்தார்கள்.

சிறு கோவில்கள், வேள்விகள், மடை பரவுதல் என வணக்க முறைகள் இருந்தன. பிள்ளைகள் கற்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கவில்லை. 3ஆம் யூனிற் மகாவித்தியாலயத்தில் நான் 5ஆம் வகுப்புக்குக் கீழ் படித்த காலத்தில் (1969 1973) நட்டாங்கண்டல், அணிஞ்சியன் குளம், வன்னிவிளாங்குளம், துணுக்காய், ஆலங்குளம், சென்னியன் குளம், பரப்புக்கால், கோட்டை கட்டிய குளம், திராட்டி குளம், பாலைப் பாணி ஆகிய பகுதிகளில் இருந்து 10ஆம் வகுப்பில் கல்வி கற்ற பல ஆண் மாணவர்கள்



சைக்கிள்களில் பாடசாலைக்கு வந்ததும் அவர்களின் சைக்கிள்கள் எல்லாம் சோடனைப் பொருள்கள் பலவற்றால் அலங்கரிக்கப் பட்டிருந்ததும் ஞாபகம். சிறிய மின்கலத்தில் இயங்கும் வகையில் சில்வர் நிறத்தில் செய்யப்பட்ட சிறிய விமானம் போன்ற அழகிய சைக்கிள் கோன்களைப் பூட்டி வைத்திருப்பார்கள். பாடசாலை உள் விறாந்தையில் பல சைக்கிள்கள் பளபளப்பாக வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கும். பாடசாலை முடிந்ததும் வரிசையாக அவை வெளியேறிச் செல்வதை ரசித்திருக்கிறேன்.

வவுனிக்குளக் குடியேற்றத் திட்டத்தில் யாழ்ப்பாணத்து எல்லா ஊர்கள், தீவுப்பகுதிகளில் இருந்து மக்கள் வந்து குடியேறினார்கள் என்பதைவிடத் தமிழ்க் காணி அதிகாரிகளால் குடியேற்றப்பட்டார்கள் என்பதே பொருத்தமானது. நெடுந்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, காரைதீவு (காரைநகர்), அனலைதீவு, வேலணை, சரவணை, நயினாதீவு என அனேகமாக எல்லாத் தீவுகளில் இருந்தும் குடியேறியிருந்தாலும் நெடுந்தீவிலிருந்தவர்களே அதிகம் குடியேறினார்கள். நெடுந்தீவின் இன்னோர் பெரும்பகுதி மக்கள் வவுனியா, செட்டிகுளம், பெரிய தம்பனைப் பகுதிகளில் குடியேறினார்கள்.

முதலாம் யூனிற்

இந்தப் பகுதியில் குடியேற்றப் பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் வடமராட்சியைச் சேர்ந்தவர்கள். அப்போதைய அரச அதிபராக இருந்த கதிர்காமநாதன் என்பவர் வடமராட்சியைச் சேர்ந்தவர் என்பதால் வடமராட்சி ஊர்களில் இருந்து வந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது என்கிறார்கள். கரவெட்டி, புறாப்பொறுக்கி, திக்கம், உடுப்பிட்டி பகுதிகளில் இருந்து வந்து குடியேற்றப்பட்டனர். இதற்கு முன்னிற்று செயற்பட்டவர்கள் காணி அபிவிருத்தி அலுவலர்களாக இருந்த முருசேம்பிள்ளை, தம்பி முத்து ஆகியோரும் என அறிய முடிகிறது. அவர்கள் தமது உறவுக்காரரையும் தமக்குத் தேவையானவர்களையும் குடியேற்றினர் என்று அறிய முடிகிறது.

இரண்டாம் யூனிற்

வவுனிக்குளம் கட்டப்படுவதற்கு முன்னர் முதலியன் குளம் என்றொரு குளமும் அதன் கீழ் நீர்ப்பாசன விவசாயமும் இருந்தது. வவுனிக்குளம் கட்டப்பட்டபோது முதலியன் குளம் வவுனிக்குளத்துக்குள் உள்ளடக்கப்பட்டதால் அந்தக் குளத்தின் கீழ் விவசாயம் செய்தவர்களுக்கு இரண்டாம் யூனிற் பகுதிக் காணி வழங்கலில் முன்னுரிமை கொடுக்கப்பட்டது. இதனால் பழைய குடியிருப்புக் குடும்பங்கள் அதிகளவில் பாலையடி (பாலிநகர்) பகுதிக்குள் உள்வாங்கப்பட்டனர். இந்தப் பழைய குடியிருப்பு மக்கள் பனங்காமம், ஒட்டறுத்தகுளம் பகுதிகளைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள்.

இரண்டாம் யூனிற்றில் வழங்கப்பட்ட காணிகளில் உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, உடுத்துறை, மீசாலை எனப் பல ஊர்களில் இருந்து மக்கள் குடியேற்றப்பட்டனர்.

மூன்றாம் யூனிற்

இதில் இடைக்காடு, உடுத்துறை, கட்டைக்காடு கோப்பாய், மல்லாகம், நீர்வேலி, பருத்தித்துறை, கரவெட்டி, நெல்லியடி, புன்னாலை ஆகிய பகுதிகளில் இருந்து வந்தோர் குடியேறினர். தென்மராட்சி, வடமராட்சியைச் சேர்ந்தவர்களும் இதில் குடியேற்றப்பட்டனர். 3ஆம் யூனிற் பாடசாலைக்குப் பின்புறமாக நெடுந்தீவைச் சேர்ந்த பசுபதி என்பவரின் குடும்பம் இருந்தது.

நான்காம் யூனிற்

இதில் பெரும்பாலானவர்கள் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள். வேலணை, பருத்தித்துறை, நீர்வேலி ஆகிய பகுதிக் குடியேற்ற வாசிகளும் குடியேற்றப்பட்டனர்.

5ஆம் யூனிற்

மல்லாகம், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, அனலைதீவு, நயினாதீவு, புத்தூர், சாவகச்சேரி, சரசாலை, மட்டுவில் ஆகீய பகுதிகளில் இருந்து வந்தவர்கள் குடியேற்றப்பட்டனர். புத்தூரைச் சேர்ந்தவர்கள் வீதி ஒன்றில் குடியேற்றப்பட்டனர்.

ஒரு ஏக்கர் திட்டம்


இதில் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களின் தொகை அதிகம் இருருந்தது. காரைநகர், சாவகச்சேரி, வேலணை, உசன், ஏழாலை, பருத்தித்துறை எனப் பல ஊரவர்கள் குடியேறினர். இதைவிட மல்லாவிக் கடை வீதியில் புங்குடுதீவு, நெடுந்தீவு, காரைநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தோர் விவசாயத்தில் ஈடுபடாது வியாபார நோக்கத்தில் குடியேறினர். இவர்கள் கொலனி வீடுகளில் வாழவில்லை. தமது கடைக்குப் பின்னால் காடு வெட்டிச் சிறிய வீடுகளை அமைத்திருந்தார்கள். மல்லாவிச் சந்திக்கு அருகில் அனிஞ்சியன் குளம் என்ற பழைய குடியிருப்புக் கிராமம் ஒன்றிருந்தது. அவர்களுக்குக் கொலணி வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

இந்தக் குடியேற்றங்களைவிட கொத்தம்பியாகுளம், பண்ட் றோட், கொக்காவில் றோட் ஆகிய கொலணி வீடுகளும் இருந்தன. கொக்காவில் வீதிக் குடியேற்றத்திட்டத்தில் நாவற்காடு, கதிரிப்பாய், வடமராட்சி, பழைய குடியிருப்பு மக்களும் குடியேற்றப்பட்டனர்.

கொத்தம்பியாகுளம் பகுதியில் வடமராட்சி, கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் பண்ட் றோட்டில் வாதரவத்தை, மட்டுவில் பகுதியைச் சேர்ந்தவர்களும் அதிகம் குடியேற்றப்பட்டனர்.

இந்த வவுனிக்குளக் குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றப்பட்ட மக்களின் பின்னணியில் காணி அலுவலர், காலணி உத்தியோகத்தர் என யாரோ ஒருவர் தொடர்புபட்டிருந்தார். அவர்கள் பெரும்பாலும் வேளாளர்களாக இருந்தனர். தமது ஊர்களில் இருந்து குடியேற்றவாசிகளைத் தெரிவு செய்தபோது வேளாளர் அல்லாத சாதிகளுக்கு அங்கு தொழிலில்லை (கடல், பனைகள் இல்லை என்று கூறி) என்று விவசாயிகள் மாத்திரமே அங்கு குடியேறலாம் என்றுகூறி ஏனைய சாதியினர் குடியேறாதவாறு தந்திரமாகத் தடுத்தனர். குடியேறிய மக்கள் வீதி வாரியாக அல்லது இலக்க அடிப்படையில் வழங்கப்பட்ட வீடுகளில் தமக்கு அருகில் வேளாளர் அல்லாதவர்களைக் குடியேற்றுவதில் அக்கறை காட்டவில்லை. இதனால் யாழ்குடாநாட்டிலிருந்த வேளாளர் அல்லாத மக்கள் வவுனிக்குளக் குடியேற்றத் திட்டத்தில் காணிகளைப் பெறமுடியவில்லை.

காணி வழங்கும் உத்தியோகத்தர்களாக ஓவசியர் என்ற பதவிகளில் கந்தையா, ஐயாத்துரை, பரஞ்சோதி, செபஸ்தியாம்பிள்ளை எனப் பலர் கடமையாற்றினார்கள். பின்னர் இவர்களுக்குப் பதவி உயர்வுகளும் கிடைத்தன. கொலணி ஓவ்பீசர் என்பவர் அடுத்த நிலை அதிகாரியாக சி.ஓ என்று அழைக்கப்பட்டனர். இந்தப் பதவிகளில் ராசு, முருகேசம்பிள்ளை, சக்திவேல், கந்தையா, வேலுப்பிள்ளை (பிரபாகரனின் தந்தையார்) எனப் பலர் இருந்தனர்.




காணி அபிவிருத்தி அதிகாரி (எல்.டி.ஓ) பதவியில் சபாநாதன் தம்பிமுத்து ஆகியோர் கடமையாற்றினர். குடியேற்ற வாசிகளுக்கு அமைத்துக்கொடுத்த வீடுகள் சீமெந்துக் கற்களால் கட்டிச் சுவர் பூசப்படாமல் ஓடு வேயப்பட்டுச் சமையற் கட்டு அமைக்கப்பட்டிருந்தன. மழையில் நனையாதபடி வாழத்தக்க அடிப்படை வசதிகள் அப்போதைய குடியேற்றத்திட்டத்தில் செய்து கொடுக்கப்பட்டது ஒரு வரப்பிரசாதம் என்று கூறலாம்.

# நீதியைக் கோரும் அறநெறி இல்லாத சமூகம்

ஜோர்ஜ் இ.

எங்கள் யாழ்ப்பாணச் சமூகம் பற்றி நண்பர்களுடன் பேசும்போது நான் அடிக்கடி குறிப்பிடுவது, 'இது ஒரு அறநெறி இல்லாத சமூகம்'.

இது ஏதோ வெறும் கோபத்திலோ, மேலெழுந்த வாரியாகவோ சொல்கின்ற ஒன்றல்ல. அந்த சமூகத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்ததால் வந்த அனுபவம்.

ஒவ்வொரு சமூகமும் தனக்கென ஒரு ஒழுக்கக் கோவை (Moral/ethical code) ஒன்றை அடிப்படையானதாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தச் சமூகத்தின் எல்லாரும் அதைக் கைக்கொண்டு புனிதர்களாக வாழ வேண்டும் என்பதுமில்லை.

அது சாத்தியமுமில்லை. முடிவது மில்லை.

ஆனால், குறைந்த பட்சம் பெரும்பாலானவர்கள் ஒரு சமூகம் இப்படித் தான் வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு இருப்பதாக இருந்தாலோ, அல்லது எண்ணிக்கையில் அதைவிடக் குறைந்த ஆனால் சிந்திக்கத் தெரிந்த, தனது சிந்தனையைச் சுதந்திரமாகப் பகிரங்கமாகத் தெரிவிக்கக் கூடிய ஒரு சிறுபான்மையைக் கொண்டிருந்தால் கூட அது ஒரு நாகரிகமடைந்த சமூகமாக தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கு போதுமானதாக இருக்கும்.

நவீன உலகத்தில் ஒரு சமூகம் எந்த விதக் கட்டுப்பாடும் இல்லாத அராஜக (anarchy) நிலையில் வாழ முடியாது. அதற்கான ஆட்சி முதல் குடும்ப வாழ்வு வரையிலான கட்டமைப்புகளோடு வாழ வேண்டுமாயின் அதற்கான சட்ட திட்டங்களும் அந்த சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படுகின்ற மனிதர்களும் இருந்தே ஆக வேண்டும். சட்டங்களால் அமுல்படுத்த முடியாத சமூக, தனிமனித ஒழுக்கவியல்களையும் அந்தச் சமூகம் கொண்டிருந்தால் தான் சமூக நீதி தழைத்தோங்க முடியும்.

அதற்கு மனிதர்களுக்கு சுயநலத்தை விட, நாங்கள் ஒரு சமூகம் என்ற அடிப்படையிலான சிந்தனை மேலோங்கி இருக்க வேண்டும். பொதுவாக, சாதிகள் என்ற குழுக்களாகத் தமிழரும், தமிழ்த்தேசியம் என்ற பெயரில் யாழ்ப்பாணிகளும் சிந்திப்பதெல்லாம் சமூகம் என்ற கருத்துக்குள் அடங்காது.

சமூக நீதி என்பது சமத்துவத்திற்குள்ளால் வருவது. எல்லாரும் சமன் என்பதன் அடிப்படையில் தான் சமூகநீதி ஒரு சமூகத்தில் அமுலாக்கப்பட முடியும்.

**குறைந்த பட்சம் பெரும்பாலானவர்கள் ஒரு சமூகம் இப்படித் தான் வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு இருப்பதாக இருந்தாலோ, அல்லது எண்ணிக்கையில் அதைவிடக் குறைந்த ஆனால் சிந்திக்கத் தெரிந்த, தனது சிந்தனையைச் சுதந்திரமாகப் பகிரங்கமாகத் தெரிவிக்கக் கூடிய ஒரு சிறுபான்மையைக் கொண்டிருந்தால் கூட அது ஒரு நாகரிகமடைந்த சமூகமாக தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கு போதுமானதாக இருக்கும்.**

உயர்வு, தாழ்வு என்ற நிலையில், உயர்வின் இரக்கத்தில் மட்டும் தான் தாழ்வு வாழ முடியும்.

தன்னுடைய கட்டுப்பாட்டில் இல்லாத, எதேச்சையான பிறப்பை மட்டும் வைத்துக் கொண்டு, தங்களை மேலானவர்களாக நினைப்பவர்கள் சமூகமாக இயங்கலாம். அங்கே சமூகநீதி இருக்காது. சமூக வெறி மட்டும் தான் இருக்கும். காரணம் அங்கே சமத்துவம் இருக்காது.

தாழ்வை அடிமையாக்கி வைப்பதிலேயே உயர்வு குரூர இன்பத்தையும், தன்னைப் பற்றிய பெருமிதத்தையும் நிலைநிறுத்தி வைத்திருக்கும்.

எனக்குத் தெரிந்தவரை, யாழ்ப்பாணத் தமிழர்கள் போல, தங்கள் எல்லோரையும் ஒரு சமூகமாகச் சிந்திக்க முடியாதவர்களாக நான் கண்டது, சோமாலியர்களைத் தான். யாழ்ப்பாணத் தமிழர்களுக்குள் இருக்கும் அதே சாதீயச் சிந்தனை அப்படியே அவர்களிடம் இனக்குழுக்களாக (Tribes) இருக்கிறது.

அவர்கள் சட்டம், ஒழுங்குகள் பற்றி அலட்டிக் கொள்வதேயில்லை. என்னோடு நீண்ட காலமாக வேலை செய்தவர்கள் பலர். அவர்கள் பற்றி அவர்கள் மூலமாகவே அறிந்து கொள்ளலாம். இதை நான் ஏதோ இனவாத உணர்வுடன் சொல்வதாக நீங்கள் ஊதிப் பெருப்பிக்கத் தேவையில்லை.

*யாழ்ப்பாணிகள் கனடாவில் தாங்கள் இதுவரை கேள்விப்பட்டிராத இலாகா ஒன்றுக்கு மந்திரியாகத் தற்போது தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டதை பெருவெற்றியாகக் கொண்டாடக் கூடும். இந்த அரசாங்கம் தனது செல்வாக்கு குறைந்து வரும் நேரத்தில் தேர்தலுக்கு கிட்டவாக இந்த நியமனத்தைச் செய்ததே வாக்குப் பொறுக்குவதற்காகத் தான்.*

*ஆனால், இந்த அரசாங்கம் ஆரம்பித்த காலத்திலேயே முக்கிய துறையான குடிவரவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டவர் சோமாலிய வம்சாவளியினர் ஒருவர் தான்.*

*சோமாலியாவில் ஆட்சி கவிழ்ந்து, மதவாதிகள் தலையெடுத்து அராஜகம் தலைதூக்கியபோது, கனடாவிலிருந்து சென்றவர் ஒருவர் தான் பிரதமராக நியமிக்கப்பட்டிருந்தார்.*

*இவர்கள் இப்படி இருந்தாலும், பொதுவெளியில் அவர்கள் பற்றிய அபிப்பிராயம் வேறு. இந்த சோமாலியர்கள் பற்றிய பொதுஅபிப்பிராயம் காரணமாக, எங்களோடு வேலை செய்த இன்னொருவன், கேட்டால் 'நான் சோமாலியன் இல்லை, சோமாலிலாண்ட்டைச் சேர்ந்தவன்' என்பான். சோமாலியா சிதறுண்ட பின்னால், பிரிந்து போன அந்தப் பகுதி அரசியல் ஸ்திரம் கொண்ட பகுதி.*

*அவ்வளவுக்கு அவர்கள் மீதான மரியாதை.*

*யாழ்ப்பாணிகள் எப்படி முதன்முதலாக இன்னொரு யாழ்ப்பாணியைச் சந்திக்கும்போது, உடனடியாகவே 'ஊரில எவடம்?' என்று கேட்டுச் சாதியை அறிய முனைகிறார்களோ, அதேபோன்று 'உனக்கு அவரைத் தெரியுமா? இவரைத் தெரியுமா?' என்று தான் சோமாலியர்களும் தொடங்குவார்கள். அப்படி அவரது இனக்குழுவை அடையாளம் கண்டு, தன்னுடைய குழுவைச் சேராதவர் என்று கண்டு கொண்டு விட்டால், அதன் பின்னால் பேசவே மாட்டார்களாம்.*

**இன்றைக்கு ஈழக்கோரிக்கை என்ற ஒன்றின் கீழ் தமிழர்கள் எல்லாம் ஒன்றிணைய வேண்டும், எங்கள் ஒற்றுமையைக் காட்ட வேண்டும் என்கின்ற இந்தச் சமூகத்தின் கடந்த கால வரலாறு என்ன?**

**தற்போதைய யாழ்ப்பாணச் சமூகம் சட்டத்தின் கீழ் வாழ்ந்த காலத்தை விட, சட்ட மறுப்பில் செலவிட்ட காலம் தான் அதிகம்.**

**போத்துக்கேயர் முதல் ஆங்கிலேயர் வரைக்கும் இவர்கள் சமூகமாக, தங்கள் மீதான ஆட்சியையும் அடக்குமுறையையும் எதிர்த்துக் கலகமோ, புரட்சியோ செய்ததாக எந்த வரலாறும் இல்லை.**

*இது சோமாலியாவில் பிறந்து எதியோப்பியாவில் வளர்ந்த என் நண்பன் ஒருவன் சொன்னது.*

*இந்த சோமாலியர்கள் பற்றி, சோமாலிய பத்திரிகையாளர் ஒருவர் முன்பு ரொறன்ரோ ஸ்டார் பத்திரிகையில் தனது நாட்டு அரசியல் நிலை பற்றி எழுதிய போது, சோமாலியர்களை* 'Legendary individualistic people' *என்று எழுதியிருந்தார்.*

*அப்படி அவர்களுடைய சுயநலம் பிரசித்தமானது. சட்டம், ஒழுங்குகள் பற்றியோ, சமத்துவத்தின் அடிப்படையிலான சமூகநீதி பற்றியோ அக்கறையில்லாத அதே தன்மை யாழ்ப்பாணிகளிடமும் உண்டு.*

*இன்றைக்கு ஈழக்கோரிக்கை என்ற ஒன்றின் கீழ் தமிழர்கள் எல்லாம் ஒன்றிணைய வேண்டும், எங்கள் ஒற்றுமையைக் காட்ட வேண்டும் என்கின்ற இந்தச் சமூகத்தின் கடந்த கால வரலாறு என்ன?*

*தற்போதைய யாழ்ப்பாணச் சமூகம் சட்டத்தின் கீழ் வாழ்ந்த காலத்தை விட, சட்ட மறுப்பில் செலவிட்ட காலம் தான் அதிகம்.*

*போத்துக்கேயர் முதல் ஆங்கிலேயர் வரைக்கும் இவர்கள் சமூகமாக, தங்கள் மீதான ஆட்சியையும் அடக்குமுறையையும் எதிர்த்துக் கலகமோ, புரட்சியோ செய்ததாக எந்த வரலாறும் இல்லை.*

*பண்டாரவன்னியனும் சங்கிலியனும் தங்கள் அதிகாரத்திற்கு அச்சுறுத்தலாக இருந்ததாலேயே எதிர்த்தார்கள். தமிழர்கள் அடிமையாக இருக்கக் கூடாது என்பதற்காக இல்லை.*

*சிங்களப் பகுதிகளில் அந்நிய ஆட்சிக்கு இருந்த எதிர்ப்பு போல, தமிழ்ப்பகுதிகளில் இருந்ததில்லை. சிங்களப் பகுதிகளில் தனிமனிதர்களாக எதிர்ப்பு நடத்தியவர்கள் கூட இன்றைக்கும் தேசிய வீரர்களாகக் கொண்டாடப்படுவது போல, எங்கள் பகுதியில் எவரும் இல்லை.*

*(புலிகளை தேசிய விடுதலை வீரர்களாகவும், அவர்கள் நடத்தியது தேசிய விடுதலைப் போராட்டம் என்றும் மண்டையில் போடப்படும் என்ற பயத்தை ஆதரவு என்றும் சித்தரிப்பது யாழ்ப்பாணிகள் மட்டும் தான்! படுகொலை அரசியல் என்ற பயங்கரவாதம் தான் அது என்பது உலகத்துக்கே தெரியும். யாழ்ப்பாணிகளுக்குத் தான் தெரியவில்லை.)*

*அப்படி துப்பாக்கிகளுக்குப் பயந்து சட்டம், ஒழுங்குகளைக் கவனமாக ஒழுகி வந்தவர்கள் இவர்கள்.*

*ஆனால், சுதந்திரம் கிடைத்த கொஞ்சக் காலத்திலேயே சிங்களவர்களுக்கு கீழே வாழக் கூடாது என்ற எண்ணம் மேலோங்கி, சட்ட மறுப்புகளும், எதிர்ப்புகளும் ஆரம்பித்தன.*

*தமிழ்நாட்டில் மேலெழுந்த தமிழை*

மேம்படுத்திய மொழியுணர்வின் பிரதிபலிப்பாக, மொழி முதன்மைப் படுத்தப்பட்டு, இலங்கையர் என்ற உணர்வும், இது எங்கள் நாடு என்ற என்ற எண்ணமும் தமிழர்களுக்கு அறவே இல்லாமலேயே போய் விட்டது.

அந்த உணர்வு இல்லாமல் போனதற்கு, சிங்கள தரப்பில் இனவாதம் வளர்ந்ததும் மிகப் பெரிய காரணம்.

(வெளிநாடு போய் இன்னொரு நாட்டில் குடியேறலாம் என்றதும் இன்னொரு காரணம் என்பது பெரும் முரண் நகை)

ஆனால், இந்த 'மூளை பெருத்த படித்த' யாழ்ப்பாணிகளால், அந்த 'மோட்டுச் சிங்களவர்'களைக் கையாள முடியாமல்... அல்லது பேய்க்காட்ட முடியாமல் போய் விட்டது தானே!?

அதற்கான முக்கிய காரணம், யாழ்ப்பாணிகளை முதன்மைப்படுத்திய தமிழ்த் தலைமைகள்.

வெற்றுக் கோஷங்களை வைத்து அரசியல் செய்யலாம் என்பதை விட, இவர்கள் தாங்கள் வேண்டும் அதிகாரப் பரவலாக்கம் பற்றிய தெளிவோ, அதைப் பெறுவதற்கான சூட்சுமங்களை அறிந்தவர்களாகவோ, அதற்கான சந்தர்ப்பங்களைப் பயன் படுத்தக் கூடிய திறமையோ கொண்டவர்களாக இருந்ததில்லை.

ஆக்க பூர்வமாக எதையும் செய்யாமல், பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்புக்கும் கூட எந்த முயற்சியும் எடுக்காமலேயே, வெறும் கோஷங்களைப் போட்டபடியே தேர்தல் அரசியல் செய்யலாம் என்ற அவர்களுடைய அதே யாழ்ப்பாணச் சிந்தனை தான் இன்றைக்கும் தொடர்ந்து வருகிறது.

காந்திய அகிம்சையைப் பின்பற்றுகிறோம் என்ற பெயரில், உண்ணாவிரதம் இருந்து, இப்போது

**இந்த 'மூளை பெருத்த படித்த' யாழ்ப்பாணிகளால், அந்த 'மோட்டுச் சிங்களவர்'களைக் கையாள முடியாமல்... அல்லது பேய்க்காட்ட முடியாமல் போய் விட்டது தானே!?**

**அதற்கான முக்கிய காரணம், யாழ்ப்பாணிகளை முதன்மைப்படுத்திய தமிழ்த் தலைமைகள்.**

**வெற்றுக் கோஷங்களை வைத்து அரசியல் செய்யலாம் என்பதை விட, இவர்கள் தாங்கள் வேண்டும் அதிகாரப் பரவலாக்கம் பற்றிய தெளிவோ, அதைப் பெறுவதற்கான சூட்சுமங்களை அறிந்தவர்களாகவோ, அதற்கான சந்தர்ப்பங்களைப் பயன் படுத்தக் கூடிய திறமையோ கொண்டவர்களாக இருந்ததில்லை.**

**ஆக்க பூர்வமாக எதையும் செய்யாமல், பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்புக்கும் கூட எந்த முயற்சியும் எடுக்காமலேயே, வெறும் கோஷங்களைப் போட்டபடியே தேர்தல் அரசியல் செய்யலாம் என்ற அவர்களுடைய அதே யாழ்ப்பாணச் சிந்தனை தான் இன்றைக்கும் தொடர்ந்து வருகிறது.**

பகிஷ்கரிப்பு, ஹர்த்தால் என்று வீட்டில் படுத்திருந்தபடியே போராட்டம் நடத்தும் அளவில் தான் சமூகத்தின் போராட்ட உணர்வு இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் தமிழரசு என்று, ஏதோ ஆண்ட பரம்பரைக்கு ஆளுவதற்கு அரசாங்கம் வரப் போகிறது என்ற பிரமையை ஊட்டிக் கொண்டே ஆங்கிலத்தில் 'சமஷ்டிக் கட்சி' என்று வைத்துக் கொண்டு, ('அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் தான்!) 'மோட்டுச் சிங்களவர்களையும்', யாழ்ப்பாணிகளையும் ஒரே நேரத்தில் பேய்க்காட்டலாம் என்ற எண்ணத்தைத் தவிர, உரிமைகள் என்று இவர்கள் எதையும் கோரியதில்லை.

காரணம், சிங்களத் தலைமைகளுடன் முரண்படுவதாகக் காட்டிக் கொண்டே, அதனோடு அனுசரித்துப் போனபடியே யாழ்ப்பாணிய நலன்களை முன்னெடுக்கலாம் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது.

இந்த யாழ்ப்பாணியத் தலைமைக்கு என்றைக்குமே யாழ்ப்பாணிய 'அறநெறியை' மீறும் நோக்கம் இருந்ததில்லை.

ஒரே மொழியைப் பேசுகின்ற தமிழர்களை சமனாக நடத்தாமல், பாடசாலைகளிலும், கோயில்களிலும் உணவகங்களிலும் அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கு எதிரான சமூகநீதியை அமுல்படுத்துவதற்காக முயற்சியை எடுக்காமல், அதற்கான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போது, அதை எதிர்த்ததும், 'நடுநிலை' வகித்ததும் தான் யாழ்ப்பாணித் தமிழ்த் தலைமையின் வரலாறு.

இந்த இன உணர்வு, 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை?' என்று அதே ஆண்டான், அடிமைச் சமூகத்தை நீட்சி பெற வைக்க முயன்றதே அன்றி, இந்த தமிழ்ச் சமூகத்தில் சமத்துவம் வேண்டி நின்றதில்லை.

ஈழப் போராட்டம் பெரியாரின் போராட்டம் போன்று சமூக நீதிக்கான போராட்டம் இல்லை. சமூக அநீதியை தொடரச் செய்வதற்கான போராட்டமே!

இதனால் தான், தமிழ்ப் பகுதிகளில் நடந்த சமூக நீதிப் போராட்டங்களுக்கு ஆதரவு அளித்த சிங்கள அரசுகளை தமிழ் மக்களை அழிக்க முயல்கின்றவைகளாகக் காட்ட முடிந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியோடு சகல சமரசங்களையும் மேற்கொண்ட

தமிழரசுக் கட்சிக்கு, வடக்கில் சமூக நீதிக்கு உதவி செய்த, அடக்கப்பட்ட தமிழ்ச் சிறுபான்மையினரோடு தொடர்புகளைப் பேணிய இடதுசாரிகளைக் கொண்டிருந்த சுதந்திரக் கட்சி மீது வெறுப்பு ஏற்பட்டது.

தங்களுடைய போராட்டத்தின் அடிப்படைக் காரணமாகக் காட்டுகின்ற தரப்படுத்தல் கூட, நகரப் புற மாணவர்களுக்கு இருந்த வசதி காரணமாகக் கிடைத்த பல்கலைக்கழக நுழைவு வசதியை, கிராமப் புற மாணவர்களுக்கும் கிடைக்கவழி செய்த இட ஒதுக்கீடாகக் காண முடியாமல், பல்கலைக்கழக நுழைவில் யாழ்ப்பாணத்தவர்களுக்கு கிடைத்த வசதிக்கு வைக்கப்பட்ட ஆப்பாகக் காட்டி, இனத்தை அழிக்கும் முயற்சியாகக் காட்டிக் கட்டமைக்கப்பட்டது.

ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதேசங்களில் அவர்களின் கல்வியை மறுத்தவர்களுக்கு, வசதி வாய்ந்த மேல் சாதியினரின் சலுகைக்கு ஆப்பு வைக்கப்பட்டதை முழுத் தமிழினத்தின் மீதான நடவடிக்கையாக திரிக்க முடிந்தது.

இந்த இன விடுதலை 'அறம்' இவ்வாறாகத் தான் இருந்தது.

எந்தச் சட்டமாக இருந்தாலும், அதைக் கடைப்பிடித்து ஒழுகி, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட உதவுவதை விட, அதை எப்படி மீறுவது என்பதில் தான் சிந்தனையே ஆரம்பிப்பது தொடங்கி, அதை மீறுவதைக் கூட தன்னுடைய புத்திசாலித்தனப் பெருமையாக நினைக்கின்ற சமூகம் இது.

இந்தச் சமூகத்திற்கு சோமாலிய warlords போல, துப்பாக்கியை வைத்துக் கொண்டு மரண பயத்தை உண்டு பண்ணுகிற பிரபாகரன் சூரிய தேவனாக வந்துதித்ததில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை.

சட்டத்தை மீறுவதை பெருமையாகக் கருதிய அதே இனம், துப்பாக்கிக்குப் பயந்து வீடுகளும் நகைகளும் பறிக்கப்படுவதையும், வரி விதிக்கப்படுவதையும், ஏன் பிள்ளைகளை யுத்தத்திற்கு இழுத்துச் செல்வதையும் ஏற்றுக் கொண்டும், துரோகிகள் என்று கல்விமான்கள், புத்திஜீவிகளைக் கொல்வதையும் நியாயப்படுத்தியும் தான் வந்திருக்கிறது.

காரணம், அதன் அறநெறி வெறும் சுயநலமும், தான் மட்டுமே தப்பிப் பிழைத்தலும், இனத்தின் அழிவில் தான் பயன் பெறலாம் என்ற நம்பிக்கையுமாகத் தான் இருக்கிறது.

ஒரு புறத்தில் அகதி கோரிக்கைக்கான காரணமாக இந்த யுத்தம் தொடரப்பட வேண்டும், கொடுத்த அகதிக் கோரிக்கைகள் ஏற்கப்பட வேண்டும் என்பதற்காக யுத்தம் உக்கிரம் அடைய வேண்டும் என்று விரும்பிப் பணம் கொடுக்கும் நிலை தான், மக்கள் போராட்டம் என்று இருந்த மற்ற இடதுசாரி சிந்தனை இயக்கங்கள் புறக்கணிக்கப் பட்டதற்கும், புலிகள் எழுச்சி பெற்றதற்குமான காரணங்களில் ஒன்று.

மற்ற இயக்கங்கள் பற்றிய 'விடியும் வரை காத்திரு!'வுக்கும், புலிகளின் 'அலைகள் ஓய்வதில்லை'க்குமான யாழ்ப்பாணி ஜோக்குகளின் அடிப்படையே அது தான்.

மற்றது, இடதுசாரி இயக்கங்கள் சமூகநீதியை அமுலாக்கி, சமத்துவத்தை ஏற்படுத்தி விடும் என்ற அச்சம் தான் மற்ற இயக்கங்களை அடக்கப்பட்ட சமூகங்களோடு அடையாளப்படுத்திய கேவலம்.

அதே யாழ்ப்பாணியச் சிந்தனையை நீடிக்க வைக்கும் என்ற அடிப்படைக் காரணம் தான் துப்பாக்கி காட்டிய மரண பயத்தையும் மீறி, யாழ்ப்பாணிக்கு புலிகள் மேல் தீராக்காதல் வந்ததற்கான காரணம்.

எந்தவொரு சமூகமும் தன் எதிர்காலச் சந்ததி மீது மிகவும் கரிசனை கொண்டதாக, அதன் எதிர்காலத்தை வளமுள்ளதாக உறுதிப்படுத்தும் எண்ணம் கொண்டதாக இருக்கும்.

இந்த யாழ்ப்பாணிச் சமூகம் தான், தன்னுடைய தலைமுறையின் நலனுக்காக தன் அடுத்த தலைமுறைகளைப் பலிகொடுத்த ஒரே இனம்.

இறுதியுத்தத்தில் துப்பாக்கி முனையில் சிறார்கள் கடத்திச் செல்லப்பட்டதை நியாயப்படுத்தியதும், இழுத்துச் செல்லப்பட்டு, செஞ்சோலையில் கொல்லப்பட்ட சிறார்களை அப்பாவிகள் ஒன்று ஒப்பாரி வைத்ததும் இந்த அழிவில் தான் பயன்பெறலாம் என்ற ஒரே எண்ணத்தில் தான்.

இறுதியுத்தம் யாழ்ப்பாணத்தில் நடந்திருந்தாலோ, இழுத்துச் செல்லப்பட்டது யாழ்ப்பாணிகளின் பிள்ளைகளாகவோ இருந்திருந்தால், யுத்தத்தை நிறுத்தும்படி யாழ்ப்பாணிகளே புலிகளை நிர்ப்பந்தித்திருப்பார்கள். புலிகளைக் கை கழுவியிருப்பார்கள்.

”

எந்தவொரு சமூகமும் தன் எதிர்காலச் சந்ததி மீது மிகவும் கரிசனை கொண்டதாக, அதன் எதிர்காலத்தை வளமுள்ளதாக உறுதிப்படுத்தும் எண்ணம் கொண்டதாக இருக்கும்.

இந்த யாழ்ப்பாணிச் சமூகம் தான், தன்னுடைய தலைமுறையின் நலனுக்காக தன் அடுத்த தலைமுறைகளைப் பலிகொடுத்த ஒரே இனம்.

இறுதியுத்தத்தில் துப்பாக்கி முனையில் சிறார்கள் கடத்திச் செல்லப்பட்டதை நியாயப்படுத்தியதும், இழுத்துச் செல்லப்பட்டு, செஞ்சோலையில் கொல்லப்பட்ட சிறார்களை அப்பாவிகள் ஒன்று ஒப்பாரி வைத்ததும் இந்த அழிவில் தான் பயன்பெறலாம் என்ற ஒரே எண்ணத்தில் தான்.

அழிவு வன்னியில் என்பதால் மட்டும் தான் அவர்களால் வெளியே இருந்து ஆதரவு வழங்குவது வசதியாக இருந்தது.

இன்றைக்கும் இத்தனை அழிவுக்குப் பின்னாலும், தங்களுடைய தவறுகளை ஏற்றுக் கொள்ள மனமில்லாமல், உலகத்தில் தங்களைத் தவிர்ந்த எல்லார் மீதும் பழியைப் போட்டபடியே, அதே ஆட்களிடமே நீதி பெற்றுத் தரும்படி கோரிக்கை விட, யாழ்ப்பாணிகளால் மட்டும் தான் முடியும்.

இராமநாதன், பொன்னம்பலம், செல்வநாயகம், அமிர்தலிங்கம் என்று தொடங்கி, பிரபாகரன் என்று போய் நாசமாகி, பின்னால் அனந்தி, கஜேந்திரகுமார், விக்னேஸ்வரன் என்று யாரோ எவரோ ஈழம் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையில் தான் இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு சமூக அறம் என்பது பற்றி எந்த கருதுகோளும் இல்லை.

யுத்த காலத்தில் சிங்கள அரசின் அடக்குமுறையால் நாட்டில் வாழ முடியவில்லை என்று அகதிக் கதை எழுதிய அதே யாழ்ப்பாணிகள், சமாதான காலத்தில் புலிகளின் அடக்குமுறையால் வாழ முடியவில்லை என்று கதை எழுதினார்கள்.

யுத்தம் முடிந்து, இவ்வளவு அழிவுகளைச் சந்தித்த பின்னாலும், 'நாங்கள் தமிழர்கள், எங்கட ஒற்றுமையைக் காட்ட வேண்டும்' என்கிற இந்த யாழ்ப்பாணிகளுக்கு, வெளிநாடுகளிலும் யாழ்ப்பாணத்திலும் அதே சாதி வேறுபாடுகளை அமுல்படுத்துவதிலும், தொடர்வதிலும் எந்த வெட்கமும் இன்றைக்கும் இல்லை.

இன்றைக்கு எந்த வெட்கமும் இல்லாமல், இன அழிப்பு என்று ஒப்பாரி வைத்தபடியே, நீதி கேட்கின்ற இந்த யாழ்ப்பாணிச் சமூகத்திற்கு, யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதை இனச் சுத்திகரிப்பு என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

**இன்றைக்கும் இன அழிப்பு என்று சர்வதேசம் முத்திரை குத்தி விட வேண்டும் என்பதில் இருக்கும் அக்கறை, சமரசங்களோடு ஒரு தீர்வைப் பெறுவதில் இல்லை.**

**இதையெல்லாம் பற்றி ஒரு சமூகமாகவே எந்த வித குற்றவுணர்வும் இல்லாமல், குறைந்தபட்சம் ஒரு சிறிய அளவிலான படித்த கூட்டமாவது அதைப் பற்றிப் பேசுவதற்குக் கூட இல்லாத நிலையில் தான் இந்தச் சமூகம் இருக்கிறது.**

மலையகத் தமிழ்ச் சிறார்களை வீட்டு வேலைக்காகக் கொண்டு வந்து நிகழ்த்திய அநீதிகளும், கலவரத்தில் கப்பலில் அகதியாய் வந்தவர்களை வேலைக்கு வைக்க முயற்சித்த நிகழ்வுகளும், அகதிகளாய் வந்த மலையக அகதிகளை நடத்திய விதமும் மறந்து போகக் கூடியவை அல்ல.

இன்றைக்கும் இன அழிப்பு என்று சர்வதேசம் முத்திரை குத்தி விட வேண்டும் என்பதில் இருக்கும் அக்கறை, சமரசங்களோடு ஒரு தீர்வைப் பெறுவதில் இல்லை.

இதையெல்லாம் பற்றி ஒரு சமூகமாகவே எந்த வித குற்றவுணர்வும் இல்லாமல், குறைந்தபட்சம் ஒரு சிறிய அளவிலான படித்த கூட்டமாவது அதைப் பற்றிப் பேசுவதற்குக் கூட இல்லாத நிலையில் தான் இந்தச் சமூகம் இருக்கிறது.

பாலைவனம் போல, வளங்கள் பெரிதாக இல்லாத நிலம் ஒன்றில், இடத்திற்கு இடம் கூட்டிச் செல்லும் மந்தைகளை வளர்க்கும் நாடோடிகள் போல, இனக்குழுக்களாக, பரஸ்பர வெறுப்போடு வாழ்ந்த சமூகத்தை, இராணுவ அடக்குமுறை மூலம் சோமாலியாவை ஒரு நாடாக கட்டி வைத்துக் கொண்டிருந்தது முகமட் சியாட் பார் என்ற இராணுவத் தலைவன். அவர் மீதான கொலைப் பயத்தில் வாயைப் பொத்தி மௌனமாக இருந்தவர்கள் எல்லாம் அவர் இறந்த பின்னால், பழையபடி குழுக்களாக மோதிக் கொண்டார்கள்.

தொண்ணூறுகளில் தலைநகர் மொகடிசுவில் மூலைக்கு மூலை இனக்குழுக்கள் இருந்து, warlords எனப்படும் யுத்தச் சண்டியர்கள் அதை லெபனானின் பெய்ரூட் போல நாசமாக்கியதும், அமெரிக்கர்கள் தலையிட முயற்சித்து அவர்களின் எரிந்த பிணங்கள் வீதிகளில் சோமாலியர்களால் வெற்றிவாகையோடு இழுத்துச் சென்றதையும், யாழ்ப்பாண நிலைமையோடும் மனநிலையோடும் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

பிரபாகரன் இறந்த பின்னால் கிட்டத்தட்ட துப்பாக்கி இல்லாத civil war நிலைமையில் தான் யாழ்ப்பாணம் இருக்கிறது. சோமாலியர்களை துப்பாக்கி முனையில் அடக்கி ஆண்ட முகமட் சியாட் பார் மாதிரியே, பிரபாகரனும் துப்பாக்கியை வைத்து ஆண்டது போல, இன்னொரு துப்பாக்கி ஏந்திய தனிமனிதனுக்குப் பயந்து மட்டுமே இவர்கள் அடங்கி வாழக்கூடுமே தவிர, ஜனநாயக ரீதியாக தமிழ்ச் சமூகத்தின் பிரச்சனைகளை அணுகுவார்கள் என்று எந்த நம்பிக்கையும் இல்லை.

காரணம், இவர்களுக்கு என எந்த விதமான அடிப்படை அறநெறிகளும் இல்லை.

தனக்கென ஒரு அறநெறியைக் கொண்டிராத சமூகம், தனக்கென ஒரு சமூக நீதியைக் கொண்டிராத சமூகம்,
தனக்குக் கீழே இருக்கும் சமூகங்களுக்கு சமனாகக் கருதி, நீதியை வழங்காத சமூகம்...

தனக்கான நீதியைக் கோருவதற்கு எந்தத் தகுதியும் இல்லாதது.



# ஆர்ப்பாட்டம் இல்லாமல் அதிசயங்கள் படைக்கும்

# ஸ்டெம் கல்வி தன்னார்வத் தொண்டு நிறுவனம்

**பூங்கோதை**

தொடர்ச்சியான போராட்ட காலமும், அதனைத் தொடர்ந்து வந்த போரும் அதன் பின்னான காலமும் தமிழ் மக்களைப் பல தளங்களிலும் மிகவும் பின்னடையைப் பண்ணியிருக்கிறது. சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக பலமாகத் தாக்கப்பட்ட ஒரு சமூகத்தில் முக்கியமாகப் பாதிக்கப்பட்டவர்கள் எமது மாணவர்களும் கல்வியும், அவர்கள் எதிர்காலமும் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. கல்வியால் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் நிச்சயமாகப் பின்தங்கி விடும் என்பதை உலகளாவிய ரீதியில் நாம் காண்கின்ற அனுபவங்கள் பறை சாற்றுகின்றன.



தரமான கல்வி இல்லாத மாணவர்கள் பிற்காலத்தில் ஆரோக்கியக் குறைபாடுகள், வேலை வாய்ப்பு கிடைக்காமை, சம்பாதிப்பதற்கான கணிசமான தடைகளை எதிர் நோக்கல், அவர்களைப் பாதிக்கும் முடிவுகளில், பிரதானமாக அரசியல் நெருக்கடிகள் சார்ந்த முடிவுகளைத் தெரிவு செய்ய இயலாமை, அவற்றில் பங்கேற்க முடியாமை, இவற்றினால் வாழ்க்கைத் தரம் குறைதல், தங்களுக்கும் தாம் சார்ந்து நிற்கும் சமூகங்களுக்கும் சிறந்த எதிர்காலத்தை வடிவமைக்கும் திறனை அடைய முடியாமை போன்ற இன்ன பிற இடர்களை அடைகிறார்கள்.

இந்த வகையில் ஒரு சமூகத்தின் கல்வியை மேம்படுத்தல் என்பது அங்கிருக்கும் மாணவர்கள் தமது எதிர்காலத்தை தமக்கேற்ப தகவமைத்துக் கொள்வதற்கு உதவுவது என்று தான் பொருள் கொள்ள வேண்டும். அரசின் கல்வித் திணைக்களம், பல தனியார் நிறுவனங்கள், பல பாடசாலை பழைய மாணவர் சங்கங்கள், தனிப்பட்டவர்கள் தாயகத்தில் கல்விக்காக உழைத்தாலும், சரியான ஒரு கட்டத்தில், வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட இலங்கையில்ப் பரந்து வாழ்கின்ற தமிழ் மாணவர்களின் கல்வி தொடர்பாக ஆராய்ந்து, குறிப்பிட்ட பாடங்களில் பின் தங்கியுள்ள மாணவர் குழுக்களைத் தெரிவு செய்து, அவர்களது பரீட்சைக்கான பாடங்களில் அவர்களைத் தேர்ச்சி அடையப் பயிற்றுவிப்பது மட்டுமன்றி மட்டுமன்றி,




அவர்களுக்குத் தேவையான இன்னும் பல தேவைகளையும் தனி ஒருவரின் உந்துதலால், ‘ஸ்டெம் கல்வி தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்’ (STEM-Kalvi) ஊடாக நடைமுறைப் படுத்துவது என்பது முற்றிலும் தனித்துவமான ஒரு செயல்நெறியே.

இவ்வாறு, எந்த ஆர்ப்பாட்டமும் விளம்பரமும் இன்றி, அவுஸ்திரேலியாவில் வாழுகின்ற, யாழ், எழுதுமட்டுவாளைச் சேர்ந்த கலாநிதி குமாரவேல் கணேசன் இந்நிறுவனத்தை ஸ்தாபித்து அதன் ஆணிவேர் போல் ஸ்டெம் கல்வியைத் தாங்கி நிற்கிறார். இவர் 2014 இல் நிறுவப்பட்ட e-கல்வி (E-Kalavi) நிறுவனத்தின் ஸ்தாபகர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. e-கல்வி நிறுவனத்திலிருந்து வேறுபட்ட ஒரு நிறுவனமாக ஸ்டெம் கல்வி நிறுவனம் (STEM-Kalvi) 2022 இல் நிறுவப்பட்டது.

பல்வேறு தன்னார்வத் தொண்டர்களின் பங்களிப்புடன் இந்த நிறுவனம் S-Science. T-Technology. E-Engineering. M-Mathematics என்பவற்றின் முக்கியத்துவம் அறிந்து ஸ்டெம் கல்வி இத்துறைகளில் மாணவர்களின் அறிவையும் வினைத்திறனையும் அதிகரிக்கப் பண்ணுவதற்காக அவர்களுக்கான இலவசக் கல்வியை தகுதியுள்ள ஆசிரியர்களினூடாக, இலங்கை முழுவதற்கும் முக்கியமாக மலையகத்தை மையப்படுத்திச் செயற்படுத்துகிறது.

இது வெறுமனே ஒரு மாகாணத்திற்கு மட்டுப்படுத்தப்படாமல் இலங்கை முழுவதிலும் மாணவர்களது கல்வித் தேவையைக் கருத்திற் கொண்டு, அவுஸ்திரேலியாவில் பதிவு செய்யப்பட்ட ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாக ஒரு வருடத்திற்குள் வளர்ந்து விருட்சமாகி நிற்கின்றது.

இதன் சேவைகள் கல்விக்கான வழிகாட்டல்களையும் கடந்து உயர்தரம் கற்கவுள்ள மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டலுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகளும் நடாத்தப் படுவதோடு, பல்கலைக்கழக மாணவர்களால் உருவாக்கப்பட்ட Young -STEM அமைப்போடும், இணைந்து அவர்களது கல்வி, வாழ்வு அனுபவங்களையும் ஊக்கமளிக்கும் வழிகாட்டல்களையும் சாதாரணதர, உயர்தர மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

கீழேயுள்ள படங்களில் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள ஒரு தமிழ்ப் பாடசாலையில் ஸ்டெம் கல்வியின் அனுசரணையுடன் Ratnapura Young-STEM இன் வாயிலாக நடைமுறைப் படுத்தப்பட்ட Motivational and O/L Exam Preparation Seminar இல் பங்கு பற்றிய மாணவிகளையும் அதன் வளவாளர்கள், அதன் ஒருங்கிணைப்பாளரையும், ஸ்டெம்




கல்வி அமைப்பு இலவச விஞ்ஞான செயன்முறை செயல் அமர்வு களையும் நெறிப்படுத்துகிறது. இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள காவத்தையில் அமைந்துள்ள ஃகிருஷ்ணா தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற விஞ்ஞான செயன்முறை செயலமர்வின் போது மாணவர்கள் பங்குபற்றுவதையும் காணலாம்.

பாடசாலையை விட்டு விலகிய தமிழ் மாணவர்களுக்கான அடிப்படை ஆங்கிலக் கல்வி இவ்வருடம் பெப்பிரவரி 3 மாதங்களாக இணையவழியில் ஆங்கிலக்கல்வி பிரித்தானியாவில் இருந்து என்னால் தன்னார்வமாக கற்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 500 பேருக்கு மேல் பதிவுகளை மேற்கொண்டிருந்தாலும் இறுதிப்பரீட்சையில் 75 பேரே பங்குபற்றி இந்தக் கல்வி நெறியைப் பூர்த்தி செய்திருந்தனர். இதன் இரண்டாம் பகுதி செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இது தவிர இதன் வளர்ச்சி, செயற்பாடு, வினைத்திறனோடு சேர்ந்து செயலாற்றுவதற்கு மூன்று கல்வி அறிஞர்கள் ஸ்டெம் கல்வியுடன் இணைந்துள்ளார்கள். ஸ்டெம் கல்வி மேலும் மேம்பட்டு, கல்வியில் பின் தங்கியுள்ள மாணவர்களுக்கு தன் சேவையை வழங்க வேண்டும் என்று வாழ்த்துவோம். அ





நின்று நிதானித்தால்
இயற்கை கண்முன்னே மலர்கிறது.

இதுவரை காணாத இரகசியங்களை
கண் சிமிட்டி கைகொட்டி
பரவசப்படுத்துகிறது.

அ, ஆ எனவும்
அம்மாடியோ எனவும்
வியக்க வைக்கிறது.

சிலவேறு இதுவரை
என்னைக் காண வரவில்லை என்று
சிணுங்குகிறது.

ஊடலாகி முகத்தைத் திருப்புகிறது,
மூடுகிறது.

ஏமாற்றம் படரக் கடந்து போகையில்
கிளைக்கரங்களால் ஆடையைப் பற்றி
திரும்பிப் பார்க்க அழைக்கிறது.

**சுதா**



படம் ஜோர்ஜ் இ.

# அபத்தம் மின்னிதழும், விருதுகளும், சில கருத்துகளும்!

வ.ந.கிரிதரன்

அபத்தம் மின்னிதழின் ஆசிரியரான நண்பர் ஜோர்ஜ்.இ.குருஷேவ் ஆடி அபத்தம் இதழில் எழுதிய கட்டுரைகளில் என் கவனத்தை ஈர்த்த சில பகுதிகளை இங்கு குறிப்பிடுவது நல்லதென நினைக்கின்றேன். ஓரிடத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்“

..... தாயகத்தில் எழுதியவர்கள் எல்லாம் இயல் விருதுக்கு அழைப்புக் கிடைத்து ஆஜராவது போல், எனக்கு ஒரு போதும் அழைப்புத் தரப்பட்டதுமில்லை. கிடைக்காதது பற்றி அலட்டிக்கொள்வதுமில்லை. Black Tie Affair இல், முத்தரின் Coat Tail இல் தொங்கிக்கொண்டு ஈடேற நினைக்கும் அளவிலும் எனக்குத் தேவை இல்லை
இங்கு அவர் தாயகத்தில் எழுதியவர்கள் எல்லாம் இயல் விருதுக்கு அழைப்புக் கிடைத்து ஆஜராவது போல், எனக்கு ஒரு போதும் அழைப்புத் தரப்பட்டதுமில்லை என்று குறிப்பிடுவது தாயகத்தில் எழுதிய எழுத்தாளர்களை அவமானப்டுத்துவது போல் தென்பட்டதால் யார் யார் தமிழ் இலக்கியத்தோட்டத்தின் இயல் விருதின் ஒரு பிரிவில் விருது பெற்றவர்கள் என்று சிந்தித்துப்பார்த்தேன்.

எஸ்.பொவுக்கு வாழ்நாள் இலக்கியச் சாதனைக்காக இயல் விருது கிடைத்துள்ளது. அவருடனான பாரிஸ் இலக்கியச் சந்திப்பு பற்றித் தாயகத்தில் தொடரொன்று வந்துள்ளது. ஆனால் எஸ்.பொ தாயகத்தில் எழுதியுள்ளாரா என்பது உறுதியாகத் தெரியவில்லை. அதனால் அவர் எழுதவில்லையென்றே வைத்துக் கொள்வோம். இதுபோல் தான் கலை, இலக்கிய விமர்சகர் மு.நித்தியானந்தனும். அவரும் எழுதியது மாதிரியும் உள்ளது. ஆனால் உறுதியாகத் தெரியவில்லை. அதனால் அவரும் தாயகத்தில் எழுதவில்லையென்று தற்போது வைத்துக்கொள்வோம். அவருக்கும் அபுனைவுக்காக அவரது கூலித்தமிழ் நூலுக்கு தமிழ் இலக்கியத்தோட்டத்தின் இயல்விருது கிடைத்துள்ளது. எழுத்தாளர் பொ. கருணாகரமூர்த்திக்கும் புனைவுக்காக இயல் விருது கிடைத்துள்ளது. அவரும் தாயகத்தில் எழுதியிருக்கக் கூடும். ஆனால் உறுதியாகத் தெரியாததால் அவரையும் எழுதாதவர் பட்டியலில் சேர்த்து விடுவோம். எழுத்தாளர் மு.புஷ்பராஜனுக்கும் இயல் விருது கிடைத்துள்ளது. அவரும் தாயகம் சஞ்சிகையில் எழுதியிருக்கக் கூடும். ஆனால் உறுதியாகத் தெரியாததால் அவரையும் தற்காலிகமாக எழுதாதவர் பட்டியலில் சேர்த்து விடலாம்.

எஞ்சியிருப்பவர்கள் எழுத்தாளர்கள் கவிஞர் திருமாவளவனும், கவிஞர் செழியனும், பா.அ.ஜயகரனும், வ.ந. கிரிதரனுமே. பா.அ.ஜயகரனின் கவிதைகள், சிறுகதை ஆகியன தாயகத்தில் வெளிவந்ததாகத் தெரிகின்றது. எனது படைப்புகள் பல (நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் ஹ கட்டுரைகள்) வெளிவந்துள்ளன. கவிஞர் திருமாவளவனும் தாயகத்தில் எழுதியுள்ளார். கவிஞர் செழியனின் ஒரு போராளியின் நாட்குறிப்பு தாயகத்தில் தொடராக வெளிவந்துள்ளது. கவிதைகள், கட்டுரைகளும் தாயகத்தில் வெளியாகியுள்ளன. கவிஞர் செழியனுக்கு சிறப்பு இயல்விருது கிடைத்துள்ளது. திருமாவளவனுக்குக் கவிதைக்காக இயல்விருது கிடைத்துள்ளது. பா.அ. ஜயகரனுக்கு புனைவுக்காகவும், எனக்கு இலக்கியப் பங்களிப்புக்காகவும் இயல் விருதுகள் கிடைத்துள்ளன.

ஆக, ஜோர்ஜ் குறிப்பிடுவது எழுத்தாளர் ஜயகரனையும், கவிஞர் திருமாவளவனையும், கவிஞர் செழியனையும், வ.ந.கிரிதரனையும் என்றுதான் கருத வேண்டியுள்ளது. இது தாயகத்தில் எழுதியதற்காகக் கிடைத்த மிகப்பெரிய விருதென்று கருதலாம். ஜோர்ஜ் குருஷேவுக்கு விருதுகள் பற்றி, தமிழ் இலக்கியத்தோட்டம் பற்றி எவ்விதக் கருத்துமிருக்கலாம்.அது அவரது உரிமை. அதுபோல் எமக்கும் அவரது கருத்துக்கெதிராகக் கருத்துகள் இருக்கலாம். அது எம் உரிமை. இந்நிலையில் எம்மையெல்லாம் விருதுகளுக்காக, அங்கீகாரத்துக்காக அலைபவர்களாக அவர் சித்திரிப்பது வருத்தத்துக்குரியது. துரதிருஷ்டவசமானது.

நான் அந்த விருதை ஏற்றுக் கொள்ளவில்லை யென்றாலும், விருதுகளை பெற்ற தாயகத்தில் எழுதிய எழுத்தாளர்களை வாழ்த்துகிறேன் என்றுதான் பொதுவாக இதழாசிரியர் ஒருவர் கூறுவார். அவ்விதம் செய்திருந்தால் அது கியூறியஸ் ஜீக்குப் பெருமை சேர்த்திருக்கும். ஆனால் அதற்குப்பதிலாக அவர் அவர்களைக் கேலி செய்திருக்கின்றார். அது அவரது ஆளுமையைச் சிறுமைப்படுத்துகின்றது.

அபத்தம் தேவைக்கு அதிகமாக தமிழ் இலக்கியத்தோட்டத்தின் மீது விமர்சனத்தை வைப்பது போல் தெரிகிறது. எத்தனையோ அமைப்புகள் (அரசுகளின் சாகித்திய விருதுகள், பல்வேறு கலை, இலக்கிய அமைப்புகளின் , எழுத்தாளர்களின் விருதுகள் போன்ற) விருதுகள் வழங்குகின்றன. இவற்றையெல்லாம் தமிழ் இலக்கியத் தோட்டத்தை விமர்சிப்பதுபோல் அபத்தம் விமர்சிக்கவில்லை. ஆனி அபத்தம் இதழில் இயல் விருது பற்றி அபத்தம் நிறையவே விமர்சித்து

விட்டது. அதற்கான எதிர்வினைகள் கிடைத்திருந்தால் அவற்றைப் பிரசுரிக்கலாம்.

இதே சமயம் தாயகம் சஞ்சிகையில் எழுதிய எழுத்தாளர்களான என்.கே. மகாலிங்கம், காலம் செல்வம் ஆகியோர் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயக்குநர்களில் இருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் தொண்ணூறுகளில் கனடாவில் தமிழர்கள் மத்தியில் நிலவிய சமூக, அரசியல் சூழலில் விருதுகளையோ, அங்கீகாரத்தையோ எதிர்பார்க்கும் எவரும் தாயகம் பத்திரிகையில் எழுதியிருக்க மாட்டார்கள். இந்நிலையில் அவ்விதம் அக்காலத்தில் தாயகத்தில் எழுதியவர்களை அபத்தம் கிண்டலடிப்பதாகவே கருத வேண்டியுமுள்ளது.

இன்னுமோரிடத்தில் ஜோர்ஜ் புகலிடத் தமிழ் இலக்கியம் பற்றி எழுதும் எவரும் தாயகம் சஞ்சிகையின் ஐந்தாண்டுப் பங்களிப்பைக் குறிப்பிடுவது இல்லையென்றும் குற்றஞ் சாட்டியிருக்கின்றார். அதுவும் தவறானதொரு கூற்று. தாயகம் பற்றியும், ஜோர்ஜ் இ.குருஷேவ் பற்றியும் அவ்வப்போது நான் சுட்டிக்காட்டத் தவறுவதில்லையென்பதைக் கீழுள்ள இணைய முகவரிகளிலுள்ள பதிவுகள் வெளிப்படுத்தும்.

---

நன்றி, கிரிதரன்.

நீங்கள் குறிப்பிட்ட வரிகள் தாயகத்தில் எழுதியவர்களைக் கிண்டல் அடிப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியிருக்கிறது போலிருக்கிறது.

இது குறித்து நீங்கள் சஞ்சலப்பட வேண்டிய தேவை இல்லை என்று நினைக்கிறேன்.

தொப்பி அளவானவர்கள் எல்லாம் திருடனுக்கு தேள் கொட்டியது போல 'முழிசிக் கொண்டு' இருக்க, சம்பந்தம் இல்லாத உங்களுக்கு மனச்சஞ்சலத்தை அந்த வரிகள் ஏற்படுத்தியிருப்பது வருந்தத்தக்கது.

இயல் விருது விழாவுக்கு யார் அழைக்கப்பட வேண்டும் என்பதை யார் தீர்மானிக்கிறார், விருதை வழங்கும் புரவலருக்கு இங்குள்ள இலக்கியச் சூழல் புரியுமா என்பதெல்லாம் விருதுத் தெரிவுக் குழுவில் இடம் பெற்றிருந்த உங்களுக்கும் தெரிந்திருக்கக் கூடும்.

தாயகத்தில் எழுதியவர் களுக்கு அழைப்புகள் கொடுக்கப்படும்போது, ஏன் எனக்குத் தரப்படுவதில்லை என்பதும், அதற்கான சூத்திர நரி யார் என்பதும் உங்களுக்குத் தெரியாவிட்டாலும், அது பகிரங்க ரகசியம்.

என்னுடைய விமர்சனம் அது சம்பந்தமானதே.

ஸ்காபரோ நகர மண்டபத்தில் பல வருடங்களுக்கு முன் நடந்த கூட்டம் ஒன்றில் பங்கு பற்றியோர் இயல் விருது பொதுநிகழ்வாக இல்லாதது பற்றிக் கருத்துத் தெரிவித்த போதும், மொனிக்கா அது பற்றிக் கேட்டபோதும், ஹி...ஹி தான் பதிலாக வந்தது.

அதற்காக, அழைப்புக் கிடைத்தால் நான் போகப் போவதில்லை. ஆனால், அழைப்புத் தராமல் இருப்பதன் பின்னால் உள்ள பொறாமையையும், இதை ஏதோ இலக்கிய மேதகுக்கள் மட்டுமே கலந்து கொள்ளத் தகுதியான மேல்தட்டு விவகாரம் என்ற பில்டப் செய்வது பற்றியும், தான் தான் இலக்கியத் தோட்டத்திற்குள்ளே நுழைவோரின் டிக்கட்டுகளைச் செக் பண்ணும் வாயில்காவலன் என்ற நினைப்போடு திரிகிறவர் குறித்தும் நான் பரிதாபப் படுவதுண்டு.

இது சம்பந்தமானவர் குறித்து மிகவும் விபரமாக எழுதுவேன்.

உங்கள் மீதான என்னுடைய மதிப்பு எப்போதுமே உயர்ந்ததாகத் தான் இருக்கிறது.

அபத்தம் ஆரம்பிக்கும்போது கூட, நீங்கள் எழுத வேண்டும் என்று விரும்பித்தான் உங்களோடு தொடர்பு கொண்டிருந்தேன். அந்த அழைப்பை ஏற்று உடனடியாகவே நீங்கள் உங்கள் ஆக்கங்கங்களை அனுப்பியிருந்தீர்கள்.

ரதனுடைய புத்தக வெளியீட்டில் பேசிய போதும், தாயகத்தில் எழுதிய ரதன் தன்னுடைய புத்தகத்தில் தான் தாயகத்தில் எழுதியது பற்றிக் குறிப்பிடவேயில்லை என்று சொன்ன போது, '25 வருடங்களுக்கு முன்னால், அரசியலில் மட்டுமல்லாமல், கலை, இலக்கியத்திலும் பெரும் பங்களிப்புச் செலுத்திய தாயகத்தை புலன் பெயர்ந்த இலக்கியத்தைக் குறிப்பிடுவோர்கள் யாரும் குறிப்பிடுவதில்லை. சொல்வதாக இருந்தால் நண்பர் வ.ந.கிரிதரன் மறக்காமல் குறிப்பிடுவார். எங்களோடு சர்ச்சையில் ஈடுபட்ட சகோதரர் சிறிஸ்கந்தன் குறிப்பிடுவார். ஆனால் தாயகத்தில் எழுதியவர்கள் பலர் அதை பகிரங்கமாகக் குறிப்பிடுவதில்லை.

இந்தப் புத்தகத்திலும் திறந்தவுடனேயே ரதனின் ஆக்கங்கள் இடம் பெற்ற பிரசுரங்களின் பெயர்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. தாயகத்தின் பெயர் இல்லை. சில நேரம் புத்தகத்தில் உள்ள கட்டுரைகள் வெளிவந்த வெளியீடுகளா என்று பார்த்தால் அப்படியும் இல்லை.' என்று கூறியிருந்தேன்.

இந்தக் கட்டுரை தாயகம் இணையத்தளத்தில் 'சோத்துக் கடையும் காதலும் சினிமாவும் 1' என்ற கட்டுரையில் இப்போதும் இருக்கிறது.

நீங்கள் கூர் இதழில் தாயகம் பற்றி விரிவாக எழுதியதன் இணைப்பைக் கூட சில தடவைகள் பேஸ்புக்கில் பகிர்ந்தும் இருக்கிறேன்.

தாயகம் பற்றி வெளியில் சொல்ல மறுக்கிறவர்கள் பற்றிச் சொல்லும்போது, நீங்கள் தாயகம் பற்றி அடிக்கடி சொல்வதை நான் பெருமையோடு குறிப்பிட்டுத் தான் சொல்வதுண்டு. எனவே இந்தக் கட்டுரையின் நோக்கம் பற்றித் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

உங்களுடைய உழைப்புப் பற்றியும், வாசிப்புப் பற்றியும் எனக்கு எப்போதும் பிரமிப்பு இருக்கிறது. மற்ற எழுத்தாளர்களை அறிமுகப் படுத்துவதிலும், அவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதிலும் நீங்கள் காட்டும் ஆர்வம் குறித்து மதிப்பும் இருக்கிறது.

அதை நான் நண்பர்களோடு பேசும்போது எப்போதும் குறிப்பிடுவதுண்டு. அதை

உங்களுக்கு நேரடியாகச் சொல்வது எனக்குக் கூச்சமாக இருக்கும். அதனால் அதைச் சொல்வதில்லை.

இங்குள்ள இலக்கியவாதிகள் போல, முகத்துக்கு முன் நேரடியாகப் புகழ்ந்து விட்டு, பின்னால் அவதூறு செய்யும் பழக்கம் எனக்கு இல்லை என்பது உங்களுக்கும் தெரிந்திருக்கக் கூடும்.

இம்முறை இயல் விருது பற்றி எழுதும்போது கூட, பெரும் சங்கடத்தோடு தான் எழுத வேண்டியிருந்தது.

நான் பெரும் மதிப்பு வைத்திருக்கும் உங்களுக்கும், முருகபூபதிக்கும் இம்முறை விருது வழங்கப்பட்டிருக்கும் நிலையில், இயல் விருதுக்கூத்தைப் பற்றி எழுத வேண்டி வந்தது.

இருந்தாலும், உங்களுக்குத் தந்து விட்டார்கள் என்பதற்காக நான் கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

என்னுடைய விமர்சனத் திற்கான காரணம், அவர்களின் விருது வழங்கல்களின் பின்னால் உள்ள நரித்தனமான நோக்கங்கள் தான்.

எஸ்.பொவுக்கும் விருது கொடுத்து ஜீவாவுக்கு ஆறுதல் பரிசும் கொடுத்த நோக்கங்கள் என்னைப் பொறுத்தவரைக்கும் விமர்சனத்துக்குரியவை தான்.

எனக்குத் தரக்கூடும் என்பதற்காக, என்னுடைய கருத்துக்களை மாற்றும் அளவிலும் நான் இல்லை.

நீங்கள் விருதுத் தெரிவுக் குழுவிலும் இருந்திருக்கிறீர்கள். உங்களுக்கு அதில் உள்ள உள்வீட்டு ரகசியங்கள் தெரிந்தும் இருக்கும்.

அதில் இருந்து நீங்கள் விலகியதும், ஒவ்வொரு முறையும் விருது வழங்கப்படுகின்ற போதுகளில், உங்களுடைய கருத்துக்களும் விமர்சனமாகத் தான் இருந்த நினைவு. பேஸ்புக் பழைய பதிவுகளைத் தேடிப்பிடிப்பதை இலகுவாக்காததால் தேடிப் பிடிக்க முடியவில்லை.

முப்பது வருடங்களுக்கு மேலாக, கனடாவில் புலம் பெயர் இலக்கியத்தில் உங்களின் பங்களிப்பை இவர்கள் யாரும் இதுவரைக்கும் குறிப்பிட்டதாக நினைவில்லை. காலம் சஞ்சிகை உங்களையும் கனடிய இலக்கியவாதியாக அங்கீகரித்ததாகக் கண்டதுமில்லை.

தெரிவுக்குழுவில் அங்கத்தினராக இருந்த உங்களுக்குக் கூட, சயந்தனுக்கும், முத்துலிங்கத்திற்கு பாட்டுப் பாடிப் பரிசில் பெற்ற சாம்ராஜ்க்கும், விடுமுறையில் வந்த ஒருவருக்கு அவசரமாகவும், இன்னும் இன்னோரன்ன பேருக்கும் என்று எல்லாருக்கும் கொடுத்து முடிந்து தான் சாவகாசமாக, நீங்களும் கண்ணில் பட்டு, உங்களுடைய இலக்கியப் பங்களிப்பையும் அங்கீகரிக்கத் தோன்றியிருக்கிறது என்பது எனக்கு கோபத்தை வருவிக்கிறது.

இப்போதும் உங்களுக்குத் தரப்பட்டிருப்பதற்கான காரணம் என்று நான் நினைப்பது கூட, இவர்களின் நரித்தனமான நோக்கங்கள் கொண்ட அயோக்கியத்தனங்கள் பற்றியது தான். இன்றைக்கு உங்களை ஒரு இயல்விருதின் உத்தியோகப்பற்றற்ற பேச்சாளராக உங்களை ஆக்கியிருக்கிறார்கள் போலத் தோன்றுகிறது. அவர்களை நியாயப்படுத்துவதற்காக பேஸ்புக்கில் நீங்கள் களம் இறங்கியதைக் கண்டு, அவர்கள் தங்களை நியாயப்படுத்த வேண்டிய இடத்தில் அவர்களுக்காக நீங்கள் கருத்து மோதலில் ஈடுபடுகிறீர்களோ என்று கூட நினைத்திருக்கிறேன்.

அவர்களுடைய நோக்கமே இப்படியானதாகத் தான் இருக்கும். தாங்கள் நேரடியாக கருத்துச் சொல்லப் பயப்படும் இடங்களில் வேறு யார் மூலமாகக் கருத்துச் சொல்ல முனைவது தான் அவர்களின் இயல்பே.

இயல்விருது நீக்கம் செய்யப்பட்ட முத்துலிங்கத்தைத் தமிழ்நாட்டில் யாரும் கணக்கெடுத்து இருக்கவே மாட்டார்கள். அவரும் தமிழ்நாட்டுக்கு விஸ்கி சுமந்து செல்லும் இன்னொரு இலக்கியவாதியாகத் தான் இருந்திருப்பார்.

இயல் விருது அவருடைய தனிப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் (Agenda) தன்னை முன்னிலைப் படுத்தி அங்கீகாரம் பெற, தமிழர் தகவல் விருதுகள், உதயன் சர்வதேச விருதுகள் பாணியில் வழங்கப்படுகின்ற ஒரு விருது தான்.

இதில் கொஞ்சக் காலம் தனியே ஒருவருக்குக் கொடுத்துப் பின்னர் ஆறுதல் பரிசுகளையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்... ஆட்களை வளைத்துப்பிடிப்பதற்காக!

வாங்கியவர்கள் வாழ்நாள் பூராவும் முத்தர் காலடி மண்ணைப் போற்றிப் பாடிக் கொண்டிருக்க வேண்டியது தான்.

அதைப் பெற்றுக் கொள்கிறவர்கள் அதை தங்களுடைய திறமைக்கு அங்கீகாரமாக நினைத்தால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

எனவே, விருது பற்றிய என் மதிப்பீடே இவ்வாறு இருக்கும்போது, விருது பெற்றவர்கள் மீதான பொறாமை என்று யாரும் வியாக்கியானம் செய்யத் தேவையில்லை.

குறைந்த பட்சம் ஒரு எழுத்தாளர் மற்ற எழுத்தாளர்களுக்கு விருது கொடுப்பது பற்றிய conflict of interest பற்றியும், கொடுப்பவர்களுக்கான தகுதிகள், நோக்கங்கள் பற்றியும், விருது வாங்கியவர்களுக்கு இல்லாவிட்டாலும், எனக்குக் கேள்விகள் எப்போதுமே இருக்கும்.

சும்மா தருகிறார்களே என்பதற்காக வாங்கிக் கொள்வதில் எனக்கு எந்தப் பெருமையும் இல்லை.

ஆசான் போல, விருதின் மரணம் என்று எழுதி விட்டு, மரணமடைந்த விருதை வெட்கம் இல்லாமல் வாங்கிக் கொள்ள முடியுமா?

இயல்விருது பற்றிய என்னுடைய விமர்சனங்கள் சற்று ஓவராக இருந்தாலும், கிடைத்த இன்னும் ஒரு சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தியிருக்கிறேன் என நினைக்கிறேன்.

உள் நோக்கங்களோடு அயோக்கியர்கள் தரும் விருதுகளை விட, உண்மையான வாசகர்கள் சொல்லும் கருத்துக்களும், நண்பர்கள் கொண்டிருக்கும் மதிப்பும் மேலானவை.

நீங்கள் இதையெல்லாம் தனிப்பட்ட ரீதியாக எடுத்துக் கொண்டு, சஞ்சலம் கொள்ளாமல் தொடர்ந்தும் அபத்தத்தில் எழுத வேண்டும் என்றே விரும்புகிறேன்.


ஜோர்ஜ் இ.

# மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்:

## வரலாற்று தேடல்கள் 8

எம்.ஆர்.ஸ்டாலின் ஞானம்
Facebook: M R Stalin Gnanam






*தனது 96ஆவது பிறந்தநாளை (26. யூலை) கொண்டாடும் சொல்லின் செல்வர் செ.இராஜதுரை என்னும் பெருந்தலைவரின் வாழ்வை கௌரவிக்கும் விதமாக இக்கட்டுரை பிரசுரமாகின்றது.*

*இலங்கையின் சுந்திரத்திற்கான கோரிக்கைகள் வலுப்பெற்றிருந்த காலகட்டத்தில் சுதந்திர உணர்வையும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கலாசாரத்தையும் மட்டக்களப்பு மக்களிடம் பரப்புவதில் இருந்து இராஜதுரையின் அரசியல் பிரவேசம் நிகழ்கின்றது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஆண்ட 6 ஆம் ஜோர்ஜ் மன்னனின் பிறந்ததின விழா இலங்கையெங்கும் கொண்டாடப்பட ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தது. மட்டக்களப்பு நகரில் அவ்விழா நடாத்தக்கூடாது என்று திட்டமிட்ட பல பள்ளி மாணவர்களுக்கு தலைமையேற்று மட். மத்தியகல்லூரியின் உயர்தர மாணவனாக இருந்த இராஜதுரை களமிறங்கினார். நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. கறுப்புக்கொடிகள் வீதிகளை அலங்கரித்தன. பொலிசாரால் யார் இந்த சதிகாரர்கள் என்ற கேள்வியோடு சம்பந்தப்பட்டவர்கள் தேடப்படுகின்றார்கள். அன்றில்*

இருந்து மட்டக்களப்பின் ஒரு புரட்சிகர இளைஞனாக இராஜதுரை பரிணமிக்கத் தொடங்கினார்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்கின்ற பழந்தமிழ் பாராம்பரியம் தமிழ் தேசியக் காவலர்களுக்கு இன்றுவரை அன்னியமாகவே இருக்கின்றது. சாதி சொல்லி திட்டித்திரியும் சண்டித்தனங்களை கண்டிக்கத் தயங்குகின்ற தமிழ் தேசிய ஒற்றுமை இன்றுவரை எம்மை மெய்சிலிர்க்க செய்கிறது. ஆனால் சாதி வேறுபாடுகள் எமது சமூகத்தை பிடித்தாழும் பெருவியாதி என்ற பெரியாரின் கர்ஜனையை அன்றே மட்டக்களப்பு மண்ணில் பிரதிபலிக்க முன்வந்தவர் இராஜதுரை தான். அவர் ஆரம்பித்த 'அறிவே கடவுள்' எனும் பகுத்தறிவு இயக்கம் ஏற்படுத்திய சமூக சீர்திருத்தங்கள் பற்பல. பல மதுச்சாலைகள் மூடப்படுவதற்கும் கடவுளின் பெயரால் நிகழ்த்தப்பட்ட மிருக பலிகள் நிறுத்தப்படுவதற்கும் தீ மிதித்தல் போன்ற சாதனைகள் எல்லாம் தெய்வங்களின் கிருபைகள் அல்ல, பகுத்தறிவின் பாற்பட்டவை என்று நிரூபிப்பதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மறுக்கப்பட்டிருந்த பல ஆலயங்களின் கதவுகள் திறக்கப்படுவதற்கும் இராஜதுரை ஆரம்பித்த 'அறிவே கடவுள்' எனும் பகுத்தறிவு இயக்கம் கடுமையாக போராடியது. அதற்காக அவர் பட்ட துன்பங்களும் எதிர்கொண்ட சவால்களும் அளவு கணக்கற்றவை. கல்லெறி முதற்கொண்டு தீவைப்பு வரை 'அறிவே கடவுள்' இயக்கத்தினரின் பிரசன்னங்களின்போதெல்லாம் பல எதிர்ப்புகள் தோன்றின.

பகுத்தறிவு பிரச்சாரத்தை இலங்கை மண்ணில் பாய்ச்ச இராஜதுரை பல பேச்சாளர்களை அழைத்துவந்தார். என்.எஸ். கிருஷ்ணன் போன்ற பகுத்தறிவு கலைஞர்களை அழைத்துவந்து கலைநிகழ்ச்சிகள் மூலமான விழிப்புணர்வுகளையும் டோபிடோ ஜனார்த்தனம், அருப்புக்கோட்டை இராமசாமி போன்றோர்களை அழைத்துவந்து சுயமரியாதைப் பிரச்சாரங்களையும் மட்டக்களப்பில் மட்டும் அல்ல, மலையகத்திலும் பரப்புவதில் இராஜதுரை முன்நின்று உழைத்தார். மாமாங்க ஆலயப்பிரவேச முனைப்பின்போது ஏற்பட்ட எதிர்ப்புகளை வெல்ல ஆலயமுன்றலை ஒரு யுத்தகளமாக்கியது குறித்து இன்றும் பல முதியவர்கள் இராஜதுரையின் தைரியத்தை நினைவு கூருவார்கள்.

இவை அனைத்தும் யாழ் மண்ணில் இடம்பெற்ற சாதியத்துக்கெதிரான வெகுஜன எதிர்ப்பு போராட்டங்களைக் கண்டு தமது பங்கிற்கு தமிழரசுக்கட்சியினர் செய்த சாதி எதிர்ப்பு போராட்ட பாசாங்குகளின் ஒரு பகுதியல்ல. கட்சி அரசியலுக்கு வரமுன்னராகவே பெரியார் வகுத்த பகுத்தறிவு, சுயமரியாதைக் கருத்துக்களின் மீது இராஜதுரை கொண்ட பற்றுகளின் காரணமான போராட்டங்களாகும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாக்குரிமை கொடுக்காதே என்று வெள்ளைக்காரனோடும் 'ஏழை எளிய' மக்களுக்கெல்லாம் இலவசக்கல்வி எதுக்கு என்று சிங்களவரோடும் ஜி.ஜி. பொன்னம்பலம் போன்ற யாழ்ப்பாணத் தலைமைகள் கட்டைப் பஞ்சாயத்து செய்து கொண்டிருந்தபோது இராஜதுரை மட்டக்களப்பு மண்ணில் செய்த பகுத்தறிவு சுயமரியாதைப்



போராட்டங்கள் ஆகும்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் தமிழ் நாட்டில் உக்கிரம் பெற்றிருந்தபோது இராஜாஜி தலைமையிலான காங்கிரசு ஆட்சியில் கல்வி அமைச்சராக இருந்தவர் அவினாசிலிங்கம் என்பவராவார். அவரது மட்டக்களப்பு வருகையை எதிர்த்து கறுப்புக்கொடி காட்டி பகிஷ்கரிப்பு போராட்டம் நடாத்தியவர் இந்த இராஜதுரையாகும். மட்டக்களப்பானின் தமிழ் உணர்வை அன்று பிரதிபலித்து இந்தியாவரை இச்செய்தியை கொண்டு செல்ல வழிவகுத்தவர் மட்டக்களப்பு வாலிபர் சங்கத்தலைவராக இருந்த இந்த இராஜதுரைதான்.

தென்னிந்தியாவிவில் இருந்து இலங்கைக்கு விஜயம் செய்த ப.ஜீவானந்தத்தை மட்டக்களப்பிற்கும் அழைத்துவந்து கம்யூனிச சித்தாந்த கொள்கைகள் பற்றி உரையாற்றச் செய்தவர் இராஜதுரை. பிராஜவுரிமை சட்டத்தின் ஊடாக 10 லட்சம் தோட்டத் தொழிலாளர்களை நாடற்றவர்களாக்கி தமது அமைச்சு பதவிகளை காப்பாற்றிக்கொள்ள தமிழ் தேசியத் தலைமைகள் தொழிலாளர் விரோத அரசோடு கூடிக்குலாவிக்கொண்டிருந்தபோது லங்கா சமசமாஜக் கட்சியின் தாபகர்களில் ஒருவரான என்.எம். பெரேராவை அழைத்து மட்டக்களப்பு மக்களுக்கு தொழிலாளர்களின் உரிமை பற்றியும் சமதர்மக் கொள்கை பற்றியும் உரையாற்றச் செய்தவர் இந்த இராஜதுரைதான்.

> **பிராஜவுரிமை சட்டத்தின் ஊடாக 10 லட்சம் தோட்டத் தொழிலாளர்களை நாடற்றவர்களாக்கி தமது அமைச்சு பதவிகளை காப்பாற்றிக் கொள்ள தமிழ் தேசியத் தலைமைகள் தொழிலாளர் விரோத அரசோடு கூடிக்குலாவிக் கொண்டிருந்தபோது லங்கா சமசமாஜக் கட்சியின் தாபகர்களில் ஒருவரான என். எம்.பெரேராவை அழைத்து மட்டக்களப்பு மக்களுக்கு தொழிலாளர்களின் உரிமை பற்றியும் சமதர்மக் கொள்கை பற்றியும் உரையாற்றச் செய்தவர் இந்த இராஜதுரைதான்.**

பிராஜவுரிமைச் சட்டத்தின் மூலம் நாடற்றவர்கள் ஆகியதன் காரணமாக 1952 ஆம் ஆண்டு தேர்தலில் தமது பாராளுமன்ற பிரதிநிதிகளை இழந்துநின்ற மலையக மக்களுக்காக சத்தியாக்கிரகம் செய்து பிரதமரிடம் மனுக்கொடுக்கச் சென்றனர் இலங்கை இந்திய காங்கிரசுக்காரர்கள். அவ்வேளை தொண்டமான், அசீஸ், இராஜலிங்கம், வெள்ளையன் போன்றோருடன் மட்டக்களப்பில் இருந்து தனியாகச் சென்று சத்தியாக்கிரகத்தில் பங்கெடுக்கும் அளவிற்கு இராஜதுரை கொண்டிருந்த தொழிலாளர் வர்க்கம் மீதான அக்கறை அபரீதமானது.

செயற்பாட்டு வீரனாக மட்டுமல்ல கலை இலக்கியத் துறையில் முத்திரை பதித்தவர் இராஜதுரை. 1948 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அவர் நடாத்திய மாதாந்த பத்திரிகையின் பெயர் 'லங்கா முரசு' என்பதாகும். அதனைத் தொடர்ந்து 'முழக்கம்', 'தமிழகம்', 'சாந்தி', 'தேன்நாடு', 'பூமாலை', 'உதயசூரியன்' என்கின்ற சஞ்சிகைகளின் ஆசிரியராக இருந்து செயற்பட்டவர். தமது எழுத்து செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ள 'இளங்கோ' அச்சகம் எனும் ஒரு அச்சகத்தினை உருவாக்கி மட்டக்களப்பு மண்ணில் வாசிப்பு பாராம்பரியத்திற்கு வளம் சேர்த்தவர் இராஜதுரையாகும். சிறுகதை, கவிதை துறைகளில் மட்டுமல்ல மட்டக்களப்பில் நவீன நாடக முயற்சிகளுக்கான முன்னோடி இந்த இராஜதுரையாகும். கண்ணகி, சங்கிலியன் என்று பல மேடை நாடகங்களை இயக்கி அவற்றில் முன்னணிப் பாத்திரங்களை தாமே நடித்ததன் ஊடாக நடிப்புத்துறையிலும் கால் பதித்தவர் இந்த இராஜதுரை. 'இலங்கை எழுத்தாளர்கள்' என்கின்ற நூலினை எழுதிய கனக.செந்தில்நாதன் இராஜதுரை பற்றி இவ்வாறு குறிப்பிடுவார். 'இராஜதுரை அரசியலுக்கு ஆதாயமானார், இலக்கியத்திற்கு நட்டமானார்'

கிழக்கு மாகாணத்தை பொறுத்த வரையில் நீண்டகாலமாகவே இனநல்லிணக்கம் பேணப்பட்டுவந்த வரலாற்றைக்கொண்ட பூமியாகவே அது திகழ்ந்து வந்திருக்கிறது. தமிழ், முஸ்லிம், சிங்களம் என்கின்ற அடையாளங்கள் அரசியலில் கூடியளவு தாக்கம் செலுத்தி இருக்கவில்லை. இந்தநிலையில்தான் தமிழ் அரசுக்கட்சி என்கின்ற இன அடையாளத்துடனான அரசியல் கட்சி கிழக்கில் கால் ஊன்றுவதற்கு கடுமையான பிரயத்தனம் பண்ண வேண்டியிருந்தது. தமிழரசுக் கட்சியின் உருவாக்கத்திற்கு முன்னர் தமிழ் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் தனது ஆதரவுத்தளத்தினை உருவாக்க பகீரதப்பிரயத்தனம் பண்ணியும் தோல்வியே தழுவவேண்டியிருந்தது. தமிழ் காங்கிரசுக்கு ஆதரவு தேடி அறிமுகக் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விட்ட ஜீ.ஜீ.பொன்னம்பலம் மட்டக்களப்பு மக்களிடம் கூழ்முட்டை எறிவாங்கி திரும்பிச் செல்லவேண்டியிருந்தது. தமிழ் காங்கிரசின் மட்டக்களப்புக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் மட்டக்களப்பு 'வெல்காசிம் மண்டபத்தில்' இடம்பெற்ற போதே மட்டக்களப்பு நல்லையா தலைமையில் திரண்ட பொதுமக்கள் 'யாழ்ப்பாணத்தானுக்கு இங்கே என்னடா வேலை' என்று கலகம் செய்து ஜீ.ஜீ.பொன்னம்பலத்திற்கு கூழ்முட்டை வீசினர். இதன் காரணமாக தமிழ் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தை நோக்கிய தமது கட்சி விஸ்தரிப்பு வேலைத் திட்டங்களை கைவிடவேண்டியதாயிற்று.

> **தமிழ் காங்கிரசுக்கு ஆதரவு தேடி அறிமுகக் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விட்ட ஜீ.ஜீ.பொன்னம்பலம் மட்டக்களப்பு மக்களிடம் கூழ்முட்டை எறிவாங்கி திரும்பிச் செல்லவேண்டியிருந்தது. தமிழ் காங்கிரசின் மட்டக்களப்புக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் மட்டக்களப்பு 'வெல்காசிம் மண்டபத்தில்' இடம்பெற்ற போதே மட்டக்களப்பு நல்லையா தலைமையில் திரண்ட பொதுமக்கள் 'யாழ்ப்பாணத்தானுக்கு இங்கே என்னடா வேலை' என்று கலகம் செய்து ஜீ.ஜீ.பொன்னம்பலத்திற்கு கூழ்முட்டை வீசினர். இதன் காரணமாக தமிழ் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தை நோக்கிய தமது கட்சி விஸ்தரிப்பு வேலைத் திட்டங்களை கைவிடவேண்டியதாயிற்று.**

மட்டக்களப்பில் 1947 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலும் கூட யாழ் எதிர்ப்பு மனநிலை பாரிய தாக்கம் செலுத்தியது. மட்டக்களப்பில் போட்டியிட்ட கே.வி.எம்.சுப்பிரமணியம் எனும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல வக்கீல் ஒருவர் படுதோல்வியடைய நேரிட்டது. இவர் மட்டக்களப்பு நீதிமன்றத்திலேயே வக்கீலாக இருந்தது மட்டுமல்ல இவரது தந்தையார் மட்டக்களப்பு நகரின் பிரபல வர்த்தகராகவும் பணக் காரராகவும் இருந்தவர். அத்தகைய செல்வாக்குகளை எல்லாம் தாண்டி சுப்பிரமணியத்திற்கு எதிராக எழுப்பப்பட்ட 'வந்தேறு குடி' பிரச்சாரம் மட்டக்களப்பு மக்களை ஆட்கொண்டது. தமிழனா? முஸ்லிமா? என்பதல்ல 'உள்ளூர்காரன்' மேல் எனும் பிரதேச உணர்வு 1947 ஆம் ஆண்டு தேர்தலில் சின்னலெவ்வையை வெற்றியீட்டச் செய்தது.

இதுபோன்றதொரு வரலாற்று பின்னணியில்தான் தமிழரசுக்கட்சி கிழக்கு மாகாணத்தில் காலடி எடுத்து வைக்க முனைந்தது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழ் காங்கிரசில் இருந்து பிரிந்துநின்று அடுத்து என்ன செய்வது என்கின்ற கேள்வியுடன் எழுந்த காலம் தொட்டு இராஜதுரை செல்வநாயகத்துடன் இணைந்து செயற்பட தொடங்கினார். புதிய கட்சிக்கான ஆலோசனைகளிலும் கொள்கைத் திட்டங்களை வடிவமைப்பதிலும் தந்தை செல்வாவுடனேயே இருந்து பங்காற்றினார். கொழும்பில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் அங்குரார்ப்பண கூட்டத்திற்கு மட்டக்களப்பில் இருந்து

கலந்துகொண்ட ஐந்து பேருக்கும் முன்னணியில் இருந்து செயற்பட்டவர் அவர். அவரூடாகவே தமிழரசுக்கட்சி கிழக்கு மாகாணத்தில் தமது முதலாவது காலடியை எடுத்து வைத்தது.

1952 ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சி எதிர்கொண்ட முதலாவது தேர்தல் இடம் பெற்றது. அதற்கான வேட்பாளர்களைத் தேடி மட்டக்களப்பின் மூலை முடுக்கெல்லாம் தந்தை செல்வா பயணித்தார். படித்தவர்கள், பட்டதாரிகள், பணக்காரர்கள், போடிமார்கள் என்று பலரது வீடுவீடாக ஏறி இறங்கிய செல்வநாயகத்துடன் யாரும் முகம் கொடுத்துப் பேசவும் தயாராக இருக்கவில்லை. குறுமண்வெளித்துறையில் இருந்து தோணிமூலம் மண்டூர் சென்ற செல்வநாயகத்தை மண்டூர் மண்ணிலேயே கரையிறங்கவிடாமல் திருப்பி அனுப்பியவர்கள் படுவான்கரை மக்கள். அந்தளவிற்கு மாகாணபேதம் ஆழமாயிருந்த காலமது. இறுதியில் கல்குடா தொகுதியில் எஸ்.சிவஞானமும் மட்டக்களப்பு தொகுதியில் ஆர். பி.கதிர்காமரும் இராஜதுரையின் முகத்திற்காக போட்டியிட முன்வந்தனர். ஆனபோதும் கடைசி நேரத்தில் 'யாழ்ப்பாணக் கட்சியில் போட்டியிட்டால் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்' என்பதைக் காரணம் காட்டி ஒதுங்கிக்கொண்டார்கள். பட்டிருப்பில் பேருக்குக்கூட யாருமே கிடைக்கவில்லை.

திருகோணமலையில் மட்டும் இராஜவரோதயம் போட்டியிட முன்வந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி சார்பில் யாருமே போட்டியிட முடியாத நிலையில் திருகோணமலை மாவட்ட பிரச்சார வேலைகள் இராஜதுரையிடம் ஒப்படைக்கப்பட்டன. திருகோண மலையில் தமிழரசுக்கட்சியின் முதலாவது பிரச்சாரக் கூட்டமே கல்லெறி தாங்கமுடியாது கலைந்து போனது. ஆனாலும் இராஜதுரையின் நெஞ்சுரமும்

**1952 ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சி எதிர்கொண்ட முதலாவது தேர்தல் இடம் பெற்றது. அதற்கான வேட்பாளர்களைத் தேடி மட்டக்களப்பின் மூலை முடுக்கெல்லாம் தந்தை செல்வா பயணித்தார். படித்தவர்கள், பட்டதாரிகள், பணக்காரர்கள், போடிமார்கள் என்று பலரது வீடுவீடாக ஏறி இறங்கிய செல்வநாயகத்துடன் யாரும் முகம் கொடுத்துப் பேசவும் தயாராக இருக்கவில்லை. குறுமண்வெளித்துறையில் இருந்து தோணிமூலம் மண்டூர் சென்ற செல்வநாயகத்தை மண்டூர் மண்ணிலேயே கரையிறங்கவிடாமல் திருப்பி அனுப்பியவர்கள் படுவான்கரை மக்கள். அந்தளவிற்கு மாகாணபேதம் ஆழமாயிருந்த காலமது.**

சொல்வீச்சும் திருகோணமலை மக்களை தமிழரசுக்கட்சியை திரும்பிப்பார்க்க வைத்தது. இராஜவரோதயத்தின் வெற்றிக்காக இராஜதுரை சுமார் அறுபது கூட்டங்களை நடத்தி முடித்தார். தமிழரசுக்கட்சி எதிர்கொண்ட முதலாவது தேர்தலில் தந்தை செல்வா கூட தோற்றுப்போனார். திருகோணமலையில் இராஜ வரோதயம் வென்றார்.

'உன் தீந்தமிழ் பேச்சாலேதான் நாம் திருமலையை வென்றோம்' என்று தந்தை செல்வா இராஜதுரையை பாராட்டினார். இவ்வாறாகத்தான் கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக்கட்சியை அறிமுகப்படுத்தி வளர்த்தெடுப்பதில் இராஜதுரை ஆற்றிய பங்கு ஒப்பற்றதாய் இருந்தது. 1952 ஆம் ஆண்டு தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலுமாக தலா ஒரு பிரதிநிதியை மட்டும் தமிழரசுக்கட்சி வெல்ல முடிந்த நிலையில் பரந்தளவில் கட்சி தோல்வியையே தழுவியிருந்தது. இவ்வாறானதொரு நிலை இனியொருபோதும் இடம்பெற்றுவிடக்கூடாது என்று பெரும் கவலை கொண்டிருந்த தந்தை செல்வாவுக்கு கிழக்கின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்தவர் இராஜதுரையாகும்.

அடுத்துவந்த 1956 ஆம் ஆண்டு தேர்தலுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் மூன்று தொகுதிகளிலும் தமிழரசுக்கட்சியை போட்டியிட வைப்பதிலும் இராஜதுரை மும்முரமாக உழைத்தார். கல்குடாவில் மாணிக்கவாசகரும், பட்டிருப்பில் இராஜமாணிக்கமும் இராஜதுரையால் தமிழரசுக் கட்சிக்காக உள்வாங்கப்பட்டனர். மட்டக்களப்புத் தொகுதியில் தானே முன்வந்து போட்டியிட துணிந்தார்.

பகுத்தறிவு இயக்கம், மட்டக்களப்பு முற்போக்கு வாலிபர் சங்கம், வரியிறுப்பாளர்கள் சங்கம், இலக்கியம், எழுத்துலகம் என்று விரிந்து கிடந்த தனது ஆற்றல்களையும் அனுபவங்களையும் தமிழரசுக் கட்சிக்காக தாரைவார்த்தவர் இராஜதுரையாகும். தமிழரசுக்கட்சியால் வளர்ந்தவர்கள் பலர் உண்டு. இன்றும் தமிழரசுக்கட்சியின் பெயரை உச்சாடனம் செய்வது ஒன்றே பதவி சுகத்தை தக்கவைப்பதற்கான அரசியல் மந்திரமாக பலருக்கு இருக்கின்றது. (இந்த பட்டியல் சாணக்கியன் வரை நீண்டு செல்கிறது)

இராஜதுரை விடயத்தில் இந்த சூத்திரம் தலைகீழானது. இராஜதுரை தமிழரசுக்கட்சியால் வளர்ந்தார் என்பதைவிட இராஜதுரையால்தான் தமிழரசுக்கட்சி வளர்ந்தது என்பதே சாலப்பொருத்தமும் சத்தியமுமாகும்.

1956 ஆம் ஆண்டு தேர்தலில் மட்டக்களப்பு தொகுதியின் இரண்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களை கட்டுக்காசு இழக்க வைத்து அபார வெற்றியீட்டினார் இராஜதுரை. அன்று தொடங்கி ஆறு தேர்தல்களில் தொடர்ச்சியாக ஒரே தொகுதியில் வெற்றியீட்டிய தமிழ் தலைவர்கள் இராஜதுரையை தவிர வேறு யாருமிலர். தமிழர்களுடன்

முஸ்லிம்களும் இணைந்து வாழும் மட்டக்களப்பு தொகுதியில் தன்னால் தோற்றகடிக்கப்பட்ட சின்னலெவ்வை அவர்கள் பதவியை இழந்ததன் ஊடாக முஸ்லிம்களுக்கான பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டதென்பதை இராஜதுரை உணர்ந்துகொண்டார். அதன் அடிப்படையில் முஸ்லிகளின் பிரதிநிதித்துவத்தை தொடர்ச்சியாக உறுதிப்படுத்திக் கொள்ள மட்டக்களப்பு தொகுதியை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கும் முயற்சியில் இராஜதுரை இறங்கினார். தேர்தல் ஆணையாளர் தல்கொட பட்டியா முன்னிலையில் சாட்சியம் அளித்து மட்டக்களப்பில் இரட்டை அங்கத்துவ தொகுதியின் அவசியம் பற்றி விளக்கிக் கூறினார். அதன் பலனாகவே மட்டக்களப்பு தொகுதியானது இரட்டை அங்கத்துவ தொகுதியாக்கப் பட்டமையும் தொடர்ச்சியாக முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படவும் ஏதுவாயிற்று.

1956 ஆம் ஆண்டு முதற்தடவையாக பாராளுமன்றத்திற்கு தெரிவான போது மட்டக்களப்பு நகரின் கூலித்தொழிலாளர்களும் நகரசுத்தித் தொழிலாளர்களும் உரிய வசிப்பிடம் இன்றி அல்லலுற்றதை கண்ணுற்றார். புகையிரத நிலையத்தை அண்டிய முடிக்குரிய காணிகள் அனைத்தையும் காடுவெட்டி குடிசைகள் அமைக்கத் தூண்டினார். அதற்காக அரசஅதிகாரிகளால் நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிறுத்தப்பட்டார். தனது பாராளுமன்றப் பதவியை பயன்படுத்தி பாராளுமன்றில் தொழிலாளர்களின் காணிப் பிரச்சனையை எழுப்பியதின் ஊடாக அன்றைய காணிஅமைச்சர் சி.பி.டி. சில்வாவைக் கொண்டு அவர்களுக்கு காணி உறுதி வழங்கச்செய்தார். அந்த குடியேற்றப்பிரதேசங்களை இன்று இருதயபுரம் எனும் பெரும் பிரதேசமாக எழுந்துநிற்கின்றது.

கடல் கடந்த நாடுகளில் நிறுவப்பட்ட முதலாவது காந்தி சிலையை மட்டக்களப்பு மாநகரில் இராஜதுரையே திறந்துவைத்தார். 1960 ஆம் ஆண்டுவரை சிறுநகரசபையாக இருந்துவந்த மட்டக்களப்பை பெருநகரமாக மாற்ற இராஜதுரை அவர்கள் பெருமுயற்சி எடுத்தார். மட்டக்களப்பின் புறநகர் பகுதியாக இருந்துவந்த கல்லடி கிராமசபைக்குட்பட்ட கிராமங்களை மட்டக்களப்பு நகருடன் இணைத்து மாநகரசபையாக மாற்றினார். மட்டக்களப்பு மாநகர சபைக்கு முன்னே வெறிச்சோடிக் கிடந்த முற்றவெளி மைதானத்தை புனர்நிர்மாணம் செய்து ஸ்ரேடியங்கள் அமைத்து மட்டக்களப்பின் விளையாட்டுத்திறனை தேசிய அளவில் பரிணமிக்கச் செய்த அருட்தந்தை வெபர் அவர்களின் பெயரை அந்த ஸ்ரேடியத்துக்கு சூட்டி மகிழ்ந்தார்.

1961 ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சியில் முதற்தடவையாக மே தினக்கூட்டம் ஒன்றை மட்டக்களப்பில் நடத்தி சாதனை படைத்தவர் இராஜதுரை. வைரமுத்து என்கின்ற ஒரு சாதாரண தொழிலாளியை அம்மேதின ஊர்வலத்திற்கு தலைமை ஏற்கச்செய்து தமிழரசுக்கட்சியின் பாரம்பரிய மேட்டுக்குடிப் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முயன்றார். அதுமட்டுமன்றி தமிழரசுக்கட்சியின் சார்பிலான அந்த மே தினக்கூட்டத்தை கம்யூனிசக் கட்சிக்காக மட்டக்களப்பில் அயராது பாடுபட்டுக் கொண்டிருந்த தோழர் கிருஷ்ணகுட்டியை கௌரவிக்கும் விழாவாக மாற்றினார். மட்டக்களப்பு மக்களுக்கு தன்னால் முடிந்த சேவைகளையாற்றி தொடர்ச்சியாக பாடுபட்டுவந்த இராஜதுரைக்கு உரிய கௌரவம் கட்சியில் வழங்கப்படவில்லை.

தந்தை செல்வா இறந்த பின்னர் தலைமைப் பொறுப்புக்கு தகுதியாக இருந்த இராஜதுரை திட்டமிட்ட வகையில் கட்சியால் ஒதுக்கப்படத் தொடங்கினார். கட்சியின் உருவாக்க காலத்தில் இருந்து தந்தை செல்வாவின் வலதுகையாக செயற்பட்டுவந்த இராஜதுரை அவர்கட்கு தந்தையின் மறைவை அடுத்து தலைமைப்பதவி வழங்கப்பட்டிருக்க வேண்டும். அந்த உரிமை மறுக்கப்பட்டது மட்டுமல்ல அவரை கட்சியில் இருந்து நீக்கிவிடுவதற்கான சதிகள் மெதுமெதுவாக பின்னப்பட்டன.

1977 ஆம் ஆண்டு தேர்தலையொட்டி கட்சியில் அவருக்கு தேர்தலில் நிற்பதற்கான வாய்ப்பை மறுப்பதற்கு கூட திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன. கட்சிக்காக இராஜதுரையால் வளர்த்தெடுக்கப்பட்ட காத்தமுத்து சிவானந்தன் எனும் இளைஞனுக்கு பதவியாசை ஊட்டி மட்டக்களப்பு தொகுதியில் இராஜதுரையை போட்டியிடாமல் தடுக்கும் முயற்சி அமிர்தலிங்கத்தினால் மேற்கொள்ளப் பட்டது. இராஜதுரையை தன் அரசியல் குருவாகவே எண்ணி வளர்ந்த காசி ஆனந்தன் மட்டக்களப்பு தொகுதியில் 'நான் களையெடுக்கப் போகின்றேன்' என்று கட்சிப்பத்திரிகையான சுதந்திரனில் அறிக்கை விட்டார். கட்சிக்குள்ளேயே இரண்டு பேர் மட்டக்களப்பு தொகுதியில் ஒரே நேரத்தில் போட்டியிட சதி தீட்டப்பட்டது.

இதனால் அதிர்ச்சியடைந்த இராஜதுரை கட்சித்தலைமையை அணுகியபோது அதனை தேர்தல் நியமனக் குழு பார்த்துக்கொள்ளும் என்று அமிர்தலிங்கம் பதிலளித்தார். வேட்புமனு தாக்கல் செய்வதற்கான வேளை வந்தபோது 1952 ஆம் ஆண்டில் இருந்து 1970 ஆம் ஆண்டுவரை கட்சியின் தேர்தல் நியமனக் குழு உறுப்பினராக இருந்து வந்த இராஜதுரை அப்பதவியில் இருந்து நீக்கப்படுவதாக கட்சியின் தலைமை ஒருதலைப்பட்சமாக அறிவித்தது. இது இராஜதுரைக்கு விழுந்த முதுலாவது அடியாகும். அதுமட்டுமல்ல தொடர்ச்சியாக ஐந்து தேர்தல்களில் (இருபது ஆண்டுகள்) வெற்றியீட்டிய இராஜதுரையை தேர்தல் நியமனக் குழுவின் முன்னர் நேர்முகப்பரிட்சைக்கு ஆஜராகுமாறு அழைத்து அவமானப்படுத்தினார் அமிர்தலிங்கம்.

அந்த நேர்முகப்பரிட்சைக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும் செல்லக்கூடாது என்றும் ஆதரவாளர்கள் இராஜதுரையை வேண்டிக் கொண்டனர்.

ஆனபோதிலும் கட்சி ஒழுங்கும் கட்சியின் நன்மையையும் கருதி தேர்தல் நியமனக்குழு முன்னர் ஒரு புதுமுக வேட்பாளரைப் போன்று இராஜதுரை ஆஜராகினார். அங்கு மட்டக்களப்பு தொகுதிக்கு புதிய வேட்பாளர்கள் எவரையும் போடவேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்பதற்கான காரணங்களை எடுத்துச் சொன்னதோடு இரட்டை அங்கத்தவர் தொகுதியான மட்டக்களப்பில் ஒரு பிரதிநிதித்துவம் தொடர்ச்சியாக முஷ்லிம் களுக்குரியதாகவே இருந்துவரும் நிலையில் தமிழரசுக்கட்சி சார்பில் இரண்டு வேட்பாளர்கள் களத்தில் நிற்பதுவும் முஸ்லிம்களுக்குரிய பிரதிநிதித்துவத்தை மறுக்கும் செயலாகும் என்றும் விளக்கிக் கூறினார்.




அவரது எந்த விளக்கங்களும் தேர்தல் நியமனக்குழுவின் தலைமை நீதிபதியாக இருந்த அமிர்தலிங்கத்திடம் எடுபடவில்லை. இறுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இராஜதுரையையும் தமிழரசுக்கட்சியில் காசி ஆனந்தனையும் நிறுத்த கட்சி முடிவுசெய்தது. வடக்கு கிழக்கின் அனைத்து தொகுதிகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியாக பரிணமித்து சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தமிழரசுக்கட்சியினர் மட்டக்களப்பில் மட்டும் மேலதிகமாக தமிழரசுக்கட்சியை இராஜதுரைக்கு போட்டியாக களமிறக்கினர். சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் தமிழரசுக்கட்சியின் சின்னமாக இருந்துவந்த வீட்டுச்சின்னம் காசி ஆனந்தனுக்கு வழங்கப்பட்டமை புதிய சின்னத்தில் போட்டியிட நேர்ந்த இராஜதுரையின் ஆதரவாளர்களுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

தேர்தல் நெருங்கிய வேளைகளில் இராஜதுரையின் தேர்தல் மேடைகளில் உரையாற்ற எந்தவொரு கட்சி முக்கியஸ்தர்களும் முன்வரவில்லை. ஈழவேந்தன், கோவை மகேசன், மாவை சேனாதிராஜா போன்றோர் மட்டக்களப்பில் களமிறக்கப்பட்டு காசி ஆனந்தனுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தனர். அவர்களது விசமத்தனமான பேச்சுகளும் கட்சிப் பத்திரிகையான 'சுதந்திரனில்' இராஜதுரைக்கு எதிராக வெளிப்படையாகவே எழுதிய பண்புகெட்ட எழுத்துகளும் அளவற்றன. பட்டிருப்பு தொகுதியிலும் கல்குடா தொகுதியிலும் உதயசூரியனை ஒளிரச் செய்யுங்கள் என்று பேசிய கட்சித் தலைவர்கள் அதே வாயால் மட்டக்களப்பு தொகுதியில் உதயசூரியனை உதிக்காமல் செய்யுங்கள் என்று பேசினர். 1977 ஆம் ஆண்டு தேர்தலில் ஒரே கட்சிக்குள்ளேயே இராஜதுரைக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட அவமானங்களுக்கும் குத்துவெட்டுகளுக்கும் நிகர்த்த பிறிதொன்று இலங்கை வரலாற்றில் எங்கேனும் நிகழ்ந்ததில்லை.

1977 ஆம் ஆண்டு தேர்தலில் இராஜதுரைக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட இந்த சதி மட்டக்களப்பு மக்களால் தோற்கடிக்கப்பட்டது. வழமை போலவே அந்தத் தேர்தலிலும் இராஜதுரை அமோக வெற்றியீட்டினார். வெற்றியின் பின்னர் தேர்தலில் நடந்த கழுத்தறுப்புகளை எல்லாம் மறந்துவிட முயன்று கட்சியில் தொடர்ந்து பணியாற்ற அவர் சித்தம் கொண்டேயிருந்தார். அதன் காரணமாகவே பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்த பூ.கணேசலிங்கத்தின் வீட்டில் இடம்பெற்ற கட்சியின் செயற்குழு கூட்டத்திற்கு வருமாறு விடப்பட்ட அழைப்பை ஏற்று அங்கு சென்றார்.

ஆனால் அவர் எதிர்பார்த்தது போன்று அங்கு சமரச முயற்சியில் யாரும் ஈடுபடவில்லை. செயற்குழுக்கூட்டம் இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளையில் கூட்டம் இடம்பெற்ற வீட்டைச் சுற்றி திட்டமிடப்பட்ட வகையில் குவிக்கப்பட்டிருந்த கட்சித் தொண்டர்களால் இராஜதுரை கேவலப்படுத்தப்பட்டார். அன்று மாலை பாட்டாளிபுரத்தில் இடம்பெற்ற கட்சியின் நன்றி நவிலல் பொதுகூட்டத்தில் இராஜதுரைக்கு பேச சந்தர்பம் மறுக்கப்பட்டது. தேர்தலில் தோற்ற காசி ஆனந்தன் முன்னணி பேச்சாளராக திகழ்ந்தார். மேடையிலே வீற்றிருந்த அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும் செய்த சதியே அதுவாகும். தமிழரசுக்கட்சியின் தூணாக இருந்து கட்சியை வளர்த்தெடுத்த இராஜதுரைக்கு மட்டக்களப்பு

மண்ணிலேயே பேசும் சந்தர்ப்பம் மறுக்கப்பட்டமை அவமானத்திலும் அவமானமாகும்.

இந்த நேரத்தில்தான் 1978 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தையே அழித்தொழித்த 'சூறாவளி' வீசியது. வரலாறு காணாத பேரழிவுக்கு இலக்காகி நூற்றுக்கணக்கான மக்கள் இறந்து கிடக்க பதினைந்து அடிகளுக்கு மேல் எழுந்த கடல்கொந்தளிப்பு பல கிராமங்களை தடைமட்டமாக்கிவிட 14 லட்சம் தென்னைமரங்கள் வீழ்ந்துகிடக்க வீதிகள் எங்கும் உடைந்து மறிபட்டு சிதிலமடைந்து சீரழிந்த நிலையில் அவ்வழிவுகளை பார்வையிட பிரதமர் பிறேமதாசா மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தார். மக்கள் முன்னிலையில் மட்டக்களப்பின் அழிவுநிலையை எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பும் அவசரமும் மட்டக்களப்பு பாராளுமன்ற பிரதிநிதி எனும் வகையில் இராஜதுரைக்கு இருந்தது. அந்தவகையில் இராஜதுரை பிரதமர் பிறேமதாசாவை சந்தித்து மட்டக்களப்பின் அழிவுநிலையை எடுத்தியம்பினார்.

மட்டக்களப்பின் பரிதாப நிலையை ஆதரவற்றுக்கிடந்த மக்களுக்கான அவசரத் தேவைகளை பிரதமரிடம் எடுத்துக்கூறியது மன்னிக்க முடியாத குற்றம் என்று கட்சியின் மேலிடம் குற்றம் சுமத்தியது. இதற்கான விளக்கம் கோரி உடனடியாக பதிலிறுக்குமாறு கட்சி மேலிடம் இராஜதுரைக்கு நெருக்கடி கொடுத்தது. அந்த வேளையில் யாழ்ப்பாணம் செல்வதோ கட்சியினுடனான சமரச முயற்சிகளில் ஈடுபடுவதற்கோ கால அவகாசம் இருக்கவில்லை. மட்டக்களப்பு மண் அழிந்துகிடக்க உடனடியாக யாழ்ப்பாணம் செல்லமுடியாத நிலை முப்பது நாட்கள் அவகாசம் கேட்டு கட்சி மேலிடத்திற்கு கடிதம் எழுதினார் இராஜதுரை. முப்பது வருடங்கள் கட்சி வளர்த்தவனுக்கு தன் மீது சுமத்தப்பட்ட அபாண்டமான பழி பற்றி சுயவிளக்கம் சொல்ல முப்பது நாட்கள் அவகாசம் மறுக்கப்பட்டது.

**கட்சித் தலைமையினால் தனக்கு எதிராக இழைக்கப்பட்டு வந்த அலட்சியங்கள், அநீதிகள், உபத்திரவங்கள், உத்தரிப்புகள், கழுத்தறுப்புகள் அனைத்துக்கும் முடிவாக கட்சியை விட்டே விலகிவிடுவதென்ற முடிவுக்கு இராஜதுரை வந்தார். தனது அரசியல் லாபத்திற்காக நாளொரு கட்சிதேடி அலைந்தவர் அல்ல இராஜதுரை. யாழ்ப்பாணத்து மேட்டுக்குடி அரசியல் மட்டக்களப்பானை எப்படியெல்லாம் அலைகழிக்கும் என்கின்ற பாடங்களை வருடக்கணக்கில் அனுபவித்த பின்னரே தமிழரசுக்கட்சி அரசியலை விட்டுத்தொலைக்க அவர் முடிவெடுத்தார்.**

இந்நிலையில் கட்சித் தலைமையினால் தனக்கு எதிராக இழைக்கப்பட்டு வந்த அலட்சியங்கள், அநீதிகள், உபத்திரவங்கள், உத்தரிப்புகள், கழுத்தறுப்புகள் அனைத்துக்கும் முடிவாக கட்சியை விட்டே விலகிவிடுவதென்ற முடிவுக்கு இராஜதுரை வந்தார். தனது அரசியல் லாபத்திற்காக நாளொரு கட்சிதேடி அலைந்தவர் அல்ல இராஜதுரை. யாழ்ப்பாணத்து மேட்டுக்குடி அரசியல் மட்டக்களப்பானை எப்படியெல்லாம் அலைகழிக்கும் என்கின்ற பாடங்களை வருடக்கணக்கில் அனுபவித்த பின்னரே தமிழரசுக்கட்சி அரசியலை விட்டுத்தொலைக்க அவர் முடிவெடுத்தார். தர்மத்தின் ஆவேசம் அது.

யாழ் மேட்டுக்குடி அரசியலில் மொத்த வடிவமாகிவிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து அவர் தன்னை விலக்கிக்கொண்டார். சூறாவழி காரணமாக நிர்க்கதியாக கிடந்த மட்டக்களப்பு மக்களின் துயர்துடைக்க அரசாங்கத்தில் இணைவதா? அன்றில் அரசியலை விட்டே ஒதுங்கிவிடுவதா? என்கின்ற கேள்வியில் சிக்கித் தவித்தார். தமது ஆதரவாளர்களினதும் மட்டக்களப்பு புத்திஜீகளினதும் ஆலோசனையின் பேரில் அரசியலில் இருந்து ஒதுங்குவதில்லை எனும் முடிவுக்கு வந்தார்.

அரசாங்கத்தில் இணைய முன்வந்தபோது அரசாங்கம் அவருக்கு அமைச்சு பதவி வழங்கி கௌரவித்தது. பிரதேச அபிவிருத்தி, இந்துசமய கலாசார தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சு எனும் புதிய அமைச்சு ஒன்றை உருவாக்கி வடக்கு கிழக்கு மக்களின் பல அரசியல் கோரிக்கைகளை தீர்க்க அவருக்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. இலங்கையில் முதன் முதலாக இரண்டு மாகாணங்களை விசேடமாக குறிப்பிட்டு அப்பிரதேசத்திற்கான அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு பிரதேச அபிவிருத்தி அமைச்சு உருவாக்கப்பட்டது. இதனூடாக கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வேலைவாய்ப்பு . போன்ற அனைத்து துறைகளிலும் வடகிழக்கில் அபிவிருத்தி மேற்கொள்ள இவ்வமைச்சுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மட்டுமல்ல கொழும்பு பல்கலைக்கழகத்திலும் தமிழ் பேராசிரியராய், இராஜாஜியின் ஆட்சிக்காலத்தில் நிறுவப்பட்ட தமிழ் கலைச்சொல் அகராதி கழகங்கள் அனைத்துக்குமான பொதுத்தலைவராய் 2000 ஆண்டுகால தமிழ் இசையை மீட்டெடுத்து யாழ் நூல் ஆக்கித் தந்த இசைமுனியாய் வாழ்ந்த தமிழிலக்கியப் பேரூலகின் ஒரே முத்தமிழ் வித்தகன் விபுலானந்தனின் ஒப்பற்ற சாதனைகளை பிரதேசநலம் பேணும் தமிழ் அறிவுலகம் பேரூவகை கொண்டு அணுக மறுத்து வந்தபோது இராஜதுரை தமது அமைச்சு பதவி உதவியுடன் விபுலானந்தருக்கு பெரும் கௌரவம் அளித்தார்.

விபுலானந்தர் இசைநடனக் கல்லூரி என்கின்ற பென்னம்பெரு மையத்தினை அமைத்து அப்பெருமானரின் பெயரை நீக்கமற நிலைக்கச்செய்தார். அந்த இசைநடனக் கல்லூரியே இன்று கிழக்கு பல்கலைக்கழகத்தின் அழகியல் கற்கை நிறுவகம் என்னும் வளாகமாக நிமிர்ந்து நிற்கின்றது.




# அன்டன் செக்கோவும் ஆயிரம் முட்டாள்களும்

## பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

வழமை போல, பேஸ்புக் அதிர்ந்தது...

அந்த அதிர்வலைக்கும் வழமையான ஒரு வார ஆயுள் கோட்டா தான்!

எத்தனை பேர் அதைப் பகிர்ந்தார்கள் என்று நினைவில்லை.

பார்க்கும் இடம் எல்லாம் நந்தலாலா தான்...

ஓ... அன்டன் செக்கோவ்!

'ஒரு தோல்வி அடைந்த சமூகம் எப்படி இருக்கும் என்று அன்டன் செக்கோவைக் கேட்ட போது அவர் சொன்ன கருத்து' என்று தொடங்கிய பதிவு ஒன்றைப் பலரும் பகிர்ந்திருந்தார்கள்.

எந்தப் பதிவையாவது பகிர வேண்டும் என்று எவராவது நினைத்தால், அது அவரில் ஏதோ ஒரு அதிர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ஒன்றில் 'யாம் பெற்ற இன்பப்' பெருந்தன்மை.

அல்லது, தாங்கள் சொல்ல விரும்பிய, தன்னுடைய கருத்துக்களோடு ஒன்றிப் போகிற, அல்லது நியாயப்படுத்துகிற ஒன்றாகத் தான் பெரும்பாலும் இருக்கும்.

நான் சொல்வது, சாதாரண மனிதர்கள் பற்றி.

இலக்கியவாதிகள், பேஸ்புக் புத்திஜீவிகள் பற்றி இல்லை.

லைக்கே பண்ணாதவர்கள் ஷெயர் பண்ணுவார்கள் ஆக்கும்!

Hahaha. lol!

ஓ! தங்களைப் பற்றி யாராவது அனாதேயம் புகழ்ந்திருந்தால் மட்டும், அதற்கு தாராளமான விதிவிலக்கு.

அப்படியாகப் பகிர்ந்தவர் களில் பெரும்பாலோர் யாழ்ப்பாணிகளும் இலங்கை முஸ்லிம்களும் தான்.

எழுத்துக் காப்புரிமை பற்றி எந்தக் கவலையும் இல்லாத தமிழ்ப் பாரம்பரியத்தோடு, பேஸ்புக் பாரம்பரியம் வேறு.

> **வேறு எவருடையவோ பதிவைக் கபளீகரம் பண்ணி தன்னுடைய மணி மூளையில் உதித்தது போல, லைக் பெறத் துடிக்கும் சுத்திசாலிகள் ஒரு புறம்.**
>
> **தன்னுடைய பதிவு மாதிரித் தொடங்கி, அடியில் ஒரு வரியில் எழுதியவரின் பெயரைப் போடும் மனச்சாட்சியுள்ளோர், அதைக் கூடச் சொல்ல விரும்பாத பெரிய மனதுடைய, 'படித்ததில் பிடித்தது', copied from fb வகையினர் எனக் கொப்பி பேஸ்ட் பண்ணிச் சுட்ட பதிவு, சுடாத பதிவுகளால் பேஸ்புக் அதிர்ந்தது.**

பகிர்ந்தவர்களை விட அதிகமாக...

வேறு எவருடையவோ பதிவைக் கபளீகரம் பண்ணி தன்னுடைய மணி மூளையில் உதித்தது போல, லைக் பெறத் துடிக்கும் சுத்திசாலிகள் ஒரு புறம்.

தன்னுடைய பதிவு மாதிரித் தொடங்கி, அடியில் ஒரு வரியில் எழுதியவரின் பெயரைப் போடும் மனச்சாட்சியுள்ளோர், அதைக் கூடச் சொல்ல விரும்பாத பெரிய மனதுடைய, 'படித்ததில் பிடித்தது', copied from fb வகையினர் எனக் கொப்பி பேஸ்ட் பண்ணிச் சுட்ட பதிவு, சுடாத பதிவுகளால் பேஸ்புக் அதிர்ந்தது.

பதிவு இது தான்.

'புகழ் பெற்ற ரஷ்ய எழுத்தாளரான Anton Chekhov விடம் ஒரு முறை 'தோல்வியடைந்த ஒரு சமூகம் எப்படியிருக்கும்?' என்று கேட்கப்பட்ட போது அவர் தெரிவித்த கருத்து இது.

தோல்வியடைந்த சமூகங் களில், ஆரோக்கியமாக சிந்திக்கும் ஒவ்வொருவனுக்கும் எதிராக ஆயிரம் முட்டாள்கள் களத்திலிருப்பார்கள்.

அவ்வாறே, சிந்தனையோடும் கரிசனையோடும் உதிர்க்கப்படும் ஒவ்வொரு சொல்லுக்கும் எதிராக தீவிரமானதும் முட்டாள்தனமானதுமான ஆயிரம் சொற்கள் உதிர்க்கப்படும்.

**முதன் முதலில் என் கண்ணில் பட்ட பகிர்வு ஊருக்குள் தற்போது புழுதி கிளப்பும் சமூகப் போராளி!**

**புலிகள் இருக்கும் வரைக்கும் ‘அண்ணை அடிச்சுப் பறிப்பார்’ என்றபடி, புலிகளின் சகல சமூக விரோதச் செயல்களையும், இனத் துரோக இழிவுகளையும் கண்டும் காணாமல், வாயைப் பொத்திக் கொண்டு, தமிழ்ச்செல்வன் சொன்னதை விழுங்கி வாந்தி எடுத்தபடி, கும்பலோடு கோவிந்தா போட்டு விட்டு, இன்றைக்கும் புலிகளைப் பற்றி வாய் திறந்தால் துரோகி ஆக வேண்டி வருமே என்று, யாழ்ப்பாணித் தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டே தன்னை ஒரு சமூகப் போராளியாக சீன் போட்டுக் கொண்டிருக்கிற ஒருவர்.**

**அட, இந்த ‘ஆரோக்கியமாகச் சிந்திக்கிற ஒருவருக்கு’ இப்போது தான் இந்த சமூகம் தோற்றுப் போயிருப்பதும், இந்த சமூகத்தில் ஒவ்வொரு புத்திசாலிக்கும் ஆயிரம் முட்டாள்கள் இருப்பதுமான உண்மை உறைத்திருக்கிறது.**

*அங்கே பெரும்பான்மை, முட்டாள் தனத்தினாலேயே போஷிக்கப்பட்டிருக்கும்.*

*எந்த சமூகத்தில், அற்பமான விஷயங்கள் பெரும் தலைப்புகளாக மாற்றப்பட்டு, நல்லுணர்ச்சி பெறும் வகையிலான சிந்தனை களையெல்லாம் மிகைத்ததாக இடம் பிடித்திருக்கின்றனவோ, எந்த சமூகத்தில் அதன் களத்தை அற்பர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்களோ, அதுவே தோல்வியடைந்த சமூகமாகும்.’*

*இது எத்தனையோ பேருக்கு மனதைத் தொட்டிருக்கிறது.*

*அதற்கான காரணம் எதுவாக இருக்கும்?*

*ஒன்று, அவர்கள் வாழும் சமூகம் பற்றி அவர்களுக்கு ஒரு ‘அறச்சீற்றம்’ இருந்திருக்கிறது.*

*இரண்டு, அவர்களின் சமூகத்தில் ஆளுக்கு ஆயிரம் முட்டாள்கள் இருந்திருக்கிறார்கள்.*

*முக்கியமான மூன்று, அந்த ‘ஆரோக்கியமாகச் சிந்திக்கும் ஒவ்வொருவன்’ என்று அவர்கள் சொல்வது தங்களைத் தான்!*

*முதன் முதலில் என் கண்ணில் பட்ட பகிர்வு ஊருக்குள் தற்போது புழுதி கிளப்பும் சமூகப் போராளி!*

*புலிகள் இருக்கும் வரைக்கும் ‘அண்ணை அடிச்சுப் பறிப்பார்’ என்றபடி, புலிகளின் சகல சமூக விரோதச் செயல்களையும், இனத் துரோக இழிவுகளையும் கண்டும் காணாமல், வாயைப் பொத்திக் கொண்டு, தமிழ்ச்செல்வன் சொன்னதை விழுங்கி வாந்தி எடுத்தபடி, கும்பலோடு கோவிந்தா போட்டு விட்டு, இன்றைக்கும் புலிகளைப் பற்றி வாய் திறந்தால் துரோகி ஆக வேண்டி வருமே என்று, யாழ்ப்பாணித் தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டே தன்னை ஒரு சமூகப் போராளியாக சீன் போட்டுக் கொண்டிருக்கிற ஒருவர்.*

*அட, இந்த ‘ஆரோக்கியமாகச் சிந்திக்கிற ஒருவருக்கு’ இப்போது தான் இந்த சமூகம் தோற்றுப் போயிருப்பதும், இந்த சமூகத்தில் ஒவ்வொரு புத்திசாலிக்கும் ஆயிரம் முட்டாள்கள் இருப்பதுமான உண்மை உறைத்திருக்கிறது.*

*நம்ம தலைவிதி!*

*நம் வாழ்நாளிலேயே இதையெல்லாம் கண்டு அனுபவிக்க வேண்டியதாக நமக்கு விதிக்கப்பட்டிருக்கிறது.*

*கிட்டத்தட்ட பகிர்ந்த யாழ்ப்பாணிகளில் பெரும்பாலோர் இந்த ‘விதை நீக்கம் செய்யப்பட்ட புளிகள்... ஓ... புலிகளின்’ வால்களும், அந்த வால்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கும் ‘புலி நீக்கம் செய்யப்பட்ட’ யாழ்ப்பாணித் தமிழ்த்தேசியம் பேசுவோர்களும் தான்.*

*பகிர்ந்தவர்களின் எண்ணிக் கைக்கு ஆளுக்கு ஆயிரம் முட்டாள்படி பார்த்தால், புலன் பெயர்ந்த யாழ்ப்பாணிகளின் உலகளாவிய சனத்தொகையைத் தாண்டக் கூடும்.*

*இதற்குள் இன்றைக்கும் புலி வேடம் போட்டுக் கொண்டிருக்கும் தொங்குமான்கள் வேறு தங்களைப் புத்திசாலிகளாகக் காட்டிக் கொள்ளப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தார்கள். புலிவால் புத்திஜீவி புலிம் மேக்கர் ஒருவர், செக்கோவைத் துணைக்கு அழைக்காமல், சுயமாகச் சிந்தியுங்கடா என்றுதிட்டியிருந்தார்... தலைவரைத் துணைக்கு அழைத்து.*

*சுயமாகச் சிந்திப்பது தலைவரின் தனித்துவமாம்.*

*ஆக, அண்ணை ஒரே ஒருவர் தான் ‘ஆரோக்கியமாகச் சிந்திக்கத் தெரிந்தவர்’.*

*மற்றவர்கள் எல்லாம்?*

*‘அண்ணையிட்ட காசைக் குடுத்தாச் சரி!’ அறப்படிச்ச அதிமேதாவிப் பல்லிகள்.*

*வெள்ளைக் கொடி பிடிக்கும் வரைக்கும் துப்பாக்கியில் பிடித்த கையை விடாத மனிதனை, சிந்தனையாளன் ரேஞ்சுக்கு கொண்டு போக, இப்படிக்கொத்த யாழ்ப்பாணிச் சுத்திஜீவிகளால் தான் முடியும்.*

*ஆக, யாழ்ப்பாணிகள் அதைப் பகிர்ந்தபோது, இப்போது தான் யாழ்ப்பாணியின் தலையில் பனங்கொட்டை விழுந்து புவியீர்ப்பைக் கண்டுபிடித்திருக்கிறான் போல என்ற எண்ணம் தான் வந்தது. ஒரு சமூகம் தலையெடுக்க முடியாமல் நாறிப் போய் இருக்கிறது என்ற உண்மையை, இப்போது தாங்கள் தான் கண்டுபிடித்த மாதிரியும், தங்களைப் போன்ற புத்திசாலிகள் சொல்லும் கருத்துக்களுக்கு பதில் சொல்ல ஆயிரம் முட்டாள்கள் இருப்பது தான் அதற்குக் காரணம்*

என்ற மாதிரியும் தான், இந்தப் பகிர்வுகளும் அவற்றுக்கான பின்னூட்டங்களும் இருந்தன.

இப்படி, ஒட்டுமொத்த யாழ்ப்பாணிகளுமே அதிபுத்திசாலிகளாக இருக்கும்போது, அவர்கள் சொல்கின்ற, அந்த 'ஆளுக்கு ஆயிரம் முட்டாள்கள்' யாராக இருக்கும் என்ற கேள்வி உங்களுக்கு வந்திருந்தால், நீங்கள் நிச்சயம் யாழ்ப்பாணியாக இருக்க முடியாது.

துப்பாக்கி வைத்திருந்து, மண்டையில் போட்டு ஈழம் காணலாம் என்ற கனவோடு இருந்த பெரும் சிந்தனையாளனான தமிழீழத்தின் சோக்கிரட்டீசை 'அடிச்சுப் பறிப்பார்' என்று நம்பிய இந்த அதிபுத்திசாலிகள் எல்லாம், திடீரென்று ஆளுக்கு ஆயிரம் முட்டாள்களை எங்கே தேடிக் கண்டுபிடித்திருப்பார்கள் என்பது எனக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது.

சரி, அதெல்லாம் கிடக்கட்டும்.

முப்பத்தைந்து வருடங்களாக இந்த யாழ்ப்பாணி அதிபுத்திசாலிகளுக்கு, நீங்கள் ஒரு தோல்வி அடைந்த சமூகம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற நான் ஏன் இதைப் பகிர்ந்து கொள்ளவில்லை?

ஊரோடு ஒத்தோடுகின்ற, ஓடாவிட்டால் 'உவன் வியரன்!' என்றபடியே ஓடிக் கொண்டிருக்கின்ற ஒரு சமூகத்தில் பிறந்து வளர்ந்த எனக்கு வந்த முதல் கேள்வி...

இதை உண்மையிலேயே அன்டன் செக்கோவ் சொல்லியிருப்பாரா? என்பது தான்.

அன்டன் செக்கோவைத் தாங்கள் படித்ததாக எங்கள் இலக்கியப் புத்திஜீவிகள் மேற்கோள் காட்டக் கூடும். தோல்ஸ்தோய்க்கும், தோஸ்தோ யேவ்ஸ்கிக்கும் தாங்கள் தோஸ்துக்கள் என்று பீலா விடுவது போல, அன்டன் செக்கோவும் தங்களுக்கு அன்பன் என்று அதிகம் சொன்னதாகக் கண்டதாக நினைவில்லை. என்றாலும், ரஷ்ய இலக்கியம் படித்ததாகச் சொல்லும்போது, செக்கோவின் பேட்டிகளையும், சைக்கோவ்ஸ்கியினது நாவல்களையும், இல்லியிச் உல்யானோவின் கவிதைகளையும் படித்ததில்லை என்று சொல்ல முடியாதல்லவா? நீங்கள் படித்ததாக அடித்து விடும் எதுவும் அவர்கள் வாசித்திராததாக இருக்காது.

**வட்சப்பில் எது வந்தாலும், அதை வரலாறாக பகிர்ந்து பரப்புகின்ற சமூக வலைத்தள யுகத்தில், சந்திரயான் திடீரென்று பிரேக் அடித்து, 'திருநள்ளாறு சனி பகவான் சூப்பர் மார்க்கட்டு எல்லாம் இறங்கு!' என்று பக்தர்களை இறக்கிச் சென்றதாகச் சொன்னால், இன்றைக்கும் பகிர்ந்து கொள்ள ஆள் உண்டு.**

நான் ஏழாம் வகுப்பிலோ, பதினொராம் வகுப்பிலோ அன்டன் செக்கோவை வாசித்த ஞாபகம்.

வேறொன்றுமில்லை. எங்களுக்கான பாடசாலை ஆங்கிலப் பாடப் புத்தகத்தில் அவரது கதை இருந்தது. அதை வாசித்து எங்களுக்குப் படிப்பித்த ஆசிரியர் யார் என்பது எனக்கு இன்னமும் சரியாக நினைவு வரவில்லை.

The death of a government clerk என்ற அந்தக் கதை ஒரு அப்பாவி மனிதன் பற்றியது. நாடகம் பார்க்கச் சென்ற ஒரு அப்பாவி மனிதனுக்கு தும்மல் வந்து முன்னால் இருந்த ஜெனரல் ஒருவருக்கு பட்டு விட்டது. அதனால் மன உழைச்சல் அடைந்த அந்த அப்பாவி மனிதன் அதற்கு மன்னிப்புக் கேட்க முயன்று, அந்த ஜெனரலின் கோபத்திற்கு உள்ளாகி, மனம் உடைந்து இறந்து போவது பற்றிய அபத்தக் கதை.

அந்தக் கதைக்கான படத்தில் பார்வையாளர் வரிசையில் அமர்ந்திருந்த அந்த ஜெனரலின் மொட்டைத் தலை எனக்கு இன்னமும் ஞாபகம். அதே மொட்டைத் தலையோடு எங்களுக்குப் படிப்பித்த இரண்டு ஆசிரியர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு ஏன் கடவுள் மொட்டை விழக் கருணை கூர்ந்தார் என்பது பற்றிய கதைகளும் உண்டு.

எத்தனையாம் வகுப்புப் புத்தகம், படிப்பித்த ஆசிரியர் யார் என்பது தான் நினைவுக்கு வர மறுக்கிறது. எத்தனையாம் வகுப்பு என்பதை யாராவது சொன்னால், ஆசிரியரை நினைவு கூர முடியும்.

அதெல்லாம் இருக்கட்டும்.

வட்சப்பில் எது வந்தாலும், அதை வரலாறாக பகிர்ந்து பரப்புகின்ற சமூக வலைத்தள யுகத்தில், சந்திரயான் திடீரென்று பிரேக் அடித்து, 'திருநள்ளாறு சனி பகவான் சூப்பர் மார்க்கட்டு எல்லாம் இறங்கு!' என்று பக்தர்களை இறக்கிச் சென்றதாகச் சொன்னால், இன்றைக்கும் பகிர்ந்து கொள்ள ஆள் உண்டு.

ஏதாவது ஒரு துணுக்கை எழுதி, 'வாரியார் சொன்னது!' என்று தமிழ் வார இதழ்களுக்கு அனுப்பினால் பிரசுரமாகும் என்பது போல, எந்த முட்டாள்த்தனமான கருத்தையும் எழுதி யாரோ ஒரு பிரபலத்தின் பெயர் போட்டு, அவர் சொன்னதாக மீம் போட்டால், அதற்கு விருப்புக் குறியிடவும், பகிர்ந்து கொள்ளவும், 'செம' என்று பின்னூட்டம் விடவும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அதிபுத்திசாலிகள் உள்ளனர்.

இப்படி அப்துல் கலாமின் பெயரில் வந்த பேஸ்புக் பொன்மொழிகளைத் தொகுத்தாலேயே அவருக்கு இயல் விருது கிடைக்கக் கூடும்.

வேட்டி கட்டி வியாழனுக்குப் போய், வெற்றிலைக் கடை வைத்த தமிழன் பெருமையை, தமிழனாய் இருந்தா ஷெயார் பண்ணினாத் தான் தமிழனுக்கு கெத்து!

மார்க்கட் நிலவரம் அப்படி!

ஆனால், நான் எதையும் இலகுவாக நம்பி விடுவதில்லை. வாயைத் திறந்தாலேயே பொய் என்கிற யாழ்ப்பாணியோடு உண்டு, குடித்து, படுத்து எழும்பியதால் வந்த பாதிப்பு.

எதையுமே கேள்விக் குள்ளாக்கு!

யாரு மார்க்ஸ் சொன்னாரா? அப்படி அதையும் கேள்விக்குள்ளாக்குவதே என் இயல்பு.

எனவே, இதை செக்கோவ் சொல்லியிருப்பாரா என்ற ஆராய்ச்சியில் இறங்கினேன். முடிந்த வரைக்கும் தமிழில் இருந்ததை மொழி பெயர்த்து ஆங்கிலத்தில் தேடினால், எங்கேயும் அவ்வாறாக செக்கோவ் சொன்னதாக இல்லை.

செக்கோவ் எழுதிய எல்லாவற்றையும் நான் வாசித்திரா விட்டாலும், குறைந்த பட்சம் செக்கோவ் எழுதிய எல்லாமே இணையத்தில் தேடிப்பிடிக்கக் கூடியதாக இருக்கின்றன.

செக்கோவின் கூற்றுக்கள் என்று தேடி வாசித்தாலும் எங்கேயும் காணவில்லை.

அவரது கூற்றுக்கள் என்று தொகுக்கப்பட்டு இணையத்தில் உலவுகிற எல்லாமே அவர் எழுதியவற்றில் எங்கோ, எதற்கோ எழுதி, அவற்றின் தாற்பரியம் கடந்து, வெட்டி ஒட்டப்பட்டவையே.

அவர் சொன்னதாக இருந்தால், அது பேட்டியாகவோ, அல்லது இன்னொருவருக்குச் சொல்லி அவர் எழுதியதாகவோ தானே இருந்திருக்க முடியும்?

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்து, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இறந்து போன அவரை, இன்றையது போல, ஒலிவாங்கியோடு துரத்திப் பிடித்துப் பேட்டி கண்டிருப்பதற்கான சந்தர்ப்பங்களும் குறைவு.

சமூக ஏற்றத்தாழ்வுகளையும், சுரண்டல்களையும் அவர் கண்டிருக்கக்கூடும் ஆயினும், அக்டோபர் புரட்சி வருவதற்கு முன்னாலேயே இறந்து போன அவர், குறை சொல்லக் கூடிய அளவுக்கு ரஷ்ய சமூகம் ஒரு தோற்றுப்போன சமூகமாக இருந்ததாகவும் இல்லை.

அப்படி அவர் சொல்லியிருந்தாலும், அதை முதலில் பகிர்ந்தவர் கூட, எங்கோ இணையத்தில் கண்டு தானே அதை மொழிபெயர்த்து எழுதியிருக்கக் கூடும்?

இப்படி எந்தத் தடயமும் இல்லாத கூற்று ஒன்று எங்கே இருந்து தோற்றம் பெற்றிருக்கக் கூடும்?

இந்தப் பதிவு முதன்முதலாக சுற்றில் வந்த போது, அதை மொழி பெயர்த்தவர் என்று ஒருவரின் பெயர் வந்தது.

**இப்படி யாரோ எதையோ எழுதி, செக்கோவின் பெயரை ஒட்டியதை, எந்தக் கேள்விக்கும் உட்படுத்தாமல், உண்மை என்று நம்பி இத்தனை புத்திசாலிகளும் பகிர்ந்திருக்கிறார்கள்.**

**குறைந்த பட்சம் இதில் உண்மை இருக்குமா என்று எவருமே கேட்டதாக நான் காணவேயில்லை.**

**இப்படி, மரங்கள் தேர்தலில் நின்ற கோடரிக்கு திரும்பத் திரும்ப வாக்களித்த துருக்கியப் பழமொழியையும் பகிராதவர்கள் இல்லை. துருக்கி என்ற நாடே இருபதாம் நூற்றாண்டில் பிறந்த போது, பழங்காலத்தில் எங்கே தேர்தல் நடந்து பழமொழி வந்திருக்கும் என்று யாரும் கேட்டதில்லை.**

அவரும் பேஸ்புக்கில் இருப்பதால், அவரை உட்பெட்டியில் தொடர்பு கொண்டு, ‘இதை எங்கிருந்து மொழி பெயர்த்தீர்கள்? அதன் மூலத்தைத் தர முடியுமா? என்று கேட்டேன்.

அவரோ, தான் அதை ஒரு அரபு மொழி பேஸ்புக் பக்கத்தில் ஒரு கட்டுரையை வாசித்துக் கொண்டிருந்த போது அதில் இந்தக் கருத்து மேற்கோள் காட்டப் பட்டிருப்பதைக் கண்டதாகவும், ஒரிஜினல் மூலம் எது என்பது பற்றி எந்தத் தகவலும் தன்னிடம் கிடையாது என்றும் பதில் அனுப்பினார்.

ஆக, தனது சமூகத்தின் இழிநிலையைக் கண்டு பொங்கியோ, அல்லது தன்னைப் புத்திசாலியாகவும் மற்றவர்களை முட்டாள்களாகவும் நினைக்கும் இயல்பினாலோ, அரபியர் யாரோ ஒருவர் தானே எழுதி, அன்டன் செக்கோவின் பெயரை ஒட்டி விட்டதாகத் தான் இது இருக்க முடியும்.

இப்படி யாரோ எதையோ எழுதி, செக்கோவின் பெயரை ஒட்டியதை, எந்தக் கேள்விக்கும் உட்படுத்தாமல், உண்மை என்று நம்பி இத்தனை புத்திசாலிகளும் பகிர்ந்திருக்கிறார்கள்.

குறைந்த பட்சம் இதில் உண்மை இருக்குமா என்று எவருமே கேட்டதாக நான் காணவேயில்லை.

இப்படி, மரங்கள் தேர்தலில் நின்ற கோடரிக்கு திரும்பத் திரும்ப வாக்களித்த துருக்கியப் பழமொழியையும் பகிராதவர்கள் இல்லை. துருக்கி என்ற நாடே இருபதாம் நூற்றாண்டில் பிறந்த போது, பழங்காலத்தில் எங்கே தேர்தல் நடந்து பழமொழி வந்திருக்கும் என்று யாரும் கேட்டதில்லை.

நானும் ஒரு முப்பத்தைந்து வருடங்களாக இந்த யாழ்ப்பாணிகளைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கிறேன்.

யாழ்ப்பாணிகள் அதிபுத்தி சாலிகள்.

அதுவும் தாங்கள் மட்டும் தான் புத்திசாலிகள். மற்றவர்கள் எல்லாம் முட்டாள்கள் என்ற நினைப்புத் தான்.

தாங்கள் முன்னுக்குப் பின் முரணாகச் சொல்வதைப் பற்றிக் கூட அவர்கள் கவலைப்படுவது கிடையாது.

சர்வதேசம் சதி செய்து போராட்டத்தை அழித்தது என்று சொல்லிக் கொண்டே, சர்வதேசம் தீர்வு வாங்கித் தர வேண்டும் என்று சொல்கின்ற அதிமேதாவிகள் அவர்கள்.

இதனால் தான் கியூறியஸ் ஜியில், யாழ்ப்பாணிகளைச் சுத்திக் கொண்டிருந்த ஒரு உருட்டுவியலாளர் பற்றி எழுதியபோது ‘உங்களைப் புத்திசாலிகள் என்று நினைப்பதில் தப்பில்லை. ஆனால் மற்றவர்களை முட்டாள்கள் என்று நினைப்பது தான் தவறு’ என்று முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் எழுதினேன்.

இப்போதும் ‘முட்டாள்

களுக்கு அயோக்கியர்களே தலைவர்கள்!' என்று எழுதிக் கொண்டிருக்கிறேன்.

இன்னும் மூன்று தலைமுறைக்கு எந்தத் தீர்வையும் கண்டுவிட முடியாத நிலையில் இருக்கும் இந்தச் சமூகத்தின் பிரச்சனை புத்திசாலிகளும் முட்டாள்களும் மட்டும் பற்றியதில்லை.

ஒரு முட்டாள் கடலுக்குள் கல் எறிந்தால், ஆயிரம் புத்திசாலிகள் கூட அதை எடுக்க முடியாது.

பொன்னாலையில் தொடங்கி முள்ளிவாய்க்கால் வரைக்கும் கொண்டு போய், ஒரு முட்டாள் நந்திக்கடலில் எறிந்த தமிழரின் எதிர்காலத்தை எத்தனை ஆயிரம் புத்திசாலிகள் வந்தாலும் மீட்க முடியாது.

அப்போ, இந்த சமூகம் தோற்றுப்போனதற்கு காரணம் தான் என்ன?

எவன் எதைச் சொன்னாலும், அது உண்மையாக இருக்குமா? அதைச் சொல்கிறவனின் நோக்கம் என்ன? அவனால் அது முடியுமா? என்ற அடிப்படைக் கேள்விகளைக் கூடக் கேட்காமல், தாங்கள் கேட்க விரும்பும் பொய்களை நம்புவதும், அதை மற்றவர்களும் நம்ப வேண்டும் என்று அடம் பிடிப்பதும் தான் இந்தச் சமூகம் இன்றைக்குச் சீரழிந்து போனதற்குக் காரணம்.

அதாவது, எந்த விதமான கேள்விகளும் இல்லாமல், இந்த பதிவைப் பகிர்ந்தது மாதிரி!

இன்றைக்கும் கனடாவுக்கு அனுப்புகிறேன் என்று எந்த அயோக்கியன் கடை திறந்தாலும், 'அண்ணைக்கு காசைக் குடுத்தாச் சரி!, யாபோட்டுக்காலை கொண்டு போய் விடுவார்' என்கிற ஏமாற்றுப் பேர்வழிகளும் ஏமாளிகளும் உள்ள சமூகம் இது.

சொல்வது பொய் என்று தெரிந்த பின்னாலும், சொல்கிறவன் அயோக்கியன் என்று புரிந்த பின்னாலும், கேட்க விரும்புகிற பொய்யைச் சொல்கிறவன் தமிழ்த் தேசிய உணர்வாளன் என்பதால் மட்டுமே நம்புகின்ற ஒரு சமூகம் தோல்வி அடையாமல் வேறு என்ன தான் செய்யும்?

இதனால் தான் கடல் கடந்து கனடா வந்த பின்னாலும், இவர்களைக் குஷிப்படுத்துகிற பொய்களைச் சொல்கிற அயோக்கியர்கள் மூலமாக, கனடியப் பாராளுமன்றத்தில் ஈழம் எடுக்கலாம் என்று நம்புகிறார்கள்.

போராட்டத்திற்கு தாங்கள் கொடுத்த பணத்தை கபளீகரம் பண்ணிய அயோக்கியர்களை தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர்கள் என்று பாராளுமன்றம் வரைக்கும் அனுப்ப தயாராக இருக்கும் சமூகம் இது.

தங்களை மட்டும் புத்திசாலிகளாக நினைப்பது மட்டுமல்லாமல், மற்றவர்கள் எல்லாரையும் முட்டாள்களாக நினைக்கும் எண்ணம் தான் செக்கோவின் கூற்றைப் பகிர வைத்திருக்கிறது.

இப்போது திரும்பவும் செக்கோவ் சொன்னதாகச் சொல்லப்படும் கூற்றை வாசித்துப் பாருங்கள்.

முழுக்க முழுக்க யாழ்ப்பாணி களுக்குப் பொருந்துகின்ற கூற்றுத் தான்.

முள்ளி வாய்க்காலில் மண் கவ்வும் வரைக்கும் மேதகு முட்டாளை நம்பிய இந்த அதிமேதாவிகள் எல்லாம் 'ஈழத்தை அடிச்சுப் பறிக்கலாம்' என்று தான் நம்பிக் கொண்டிருந்தார்கள்.

இன்றைக்கு இந்த சமூகம் தோற்றுப் போய் விட்டது என்றும் அதற்கு தங்களைப் போன்ற புத்திசாலிகளுக்கு எதிராக ஆயிரம் முட்டாள்கள் இருந்ததும் தான் காரணம் என்கின்ற இந்த அறப்படிச்ச யாழ்ப்பாணிகள் யாரும் 'அண்ணையின்ரை காலத்தில்' 'சிந்தனையோடும் கரிசனையோடும்' சொற்களை உதிர்க்க, வாய் திறந்த வரலாறு இல்லை.

வாயைத் திறந்திருந்தால், அண்ணை வாய்க்குள்ள வைச்சிருப்பார்!

இன்றைக்கு, இந்த சமூகம் தோல்வியடைந்ததற்கு தாங்கள் காரணமில்லை, இந்த ஆளுக்கு ஆயிரம் முட்டாள்கள் தான் காரணம் என்பது கூட ஏதோ ஒரு வகையில் மூளை வளர்ச்சி தான்.

இது வரை காலமும், சமூகம் தோற்றதற்கு துரோகிகள் தான் காரணம் என்ற யாழ்ப்பாணிகள் இப்போது, 'சுயவிமர்சனம்' செய்து முட்டாள்கள் தான் காரணம் என்று கண்டுபிடித்திருப்பதே, மாபெரும் தவளைப் பாய்ச்சல் தான்.

தனக்கு தெரிகின்ற பொய்யைக் கூட, மற்றவனும் நம்ப மறுத்தால் துரோகி என்கின்ற யாழ்ப்பாணச் சமூகத்திற்கு...

அன்டன் செக்கோவ் எங்கோ, எதற்கோ சொன்னது தான் பொருத்தமாக இருக்கும்.

Only fools and charlatans know everything and understand nothing.

(எவன் எதைச் சொன்னாலும், அதை அப்படியே நம்பாமல், Tchaickovsky, Iliyich Ulyanov நாவலாசிரியர், கவிஞரா என்பதை கூகிளில் கண்டறியலாம்.)


**எவன் எதைச் சொன்னாலும், அது உண்மையாக இருக்குமா? அதைச் சொல்கிறவனின் நோக்கம் என்ன? அவனால் அது முடியுமா? என்ற அடிப்படைக் கேள்விகளைக் கூடக் கேட்காமல், தாங்கள் கேட்க விரும்பும் பொய்களை நம்புவதும், அதை மற்றவர்களும் நம்ப வேண்டும் என்று அடம் பிடிப்பதும் தான் இந்தச் சமூகம் இன்றைக்குச் சீரழிந்து போனதற்குக் காரணம்.**

**இன்றைக்கும் கனடாவுக்கு அனுப்புகிறேன் என்று எந்த அயோக்கியன் கடை திறந்தாலும், 'அண்ணைக்கு காசைக் குடுத்தாச் சரி!, யாபோட்டுக்காலை கொண்டு போய் விடுவார்' என்கிற ஏமாற்றுப் பேர்வழிகளும் ஏமாளிகளும் உள்ள சமூகம் இது.**










## உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**
**என்ற வார்த்தையைத்**

# தேடுங்கள்...
# கண்டடைவீர்கள்!

# கர்ப்பம் கலைக்க இயற்கை மருத்துவ வழிகள்

தாயகம்
சுவடிகள்

**நான் வெளியிட்ட சுவடி என்ற சிறு விளம்பர இலக்கியத்தில் (Newsletter) 2015 ல் எழுதியது.**

**இன்றைக்கும் இணையத்தில் கண்டதை உண்மை தெரியாமல் பகிரும் வியாதி தீரவில்லை.**

முன்பெல்லாம் அச்சில் வந்தால் அது உண்மையாகத்தான் இருக்கும் என்பது எங்கள் நம்பிக்கை. பத்திரிகைகளுக்கும் பொறுப்புணர்வுள்ளவர்கள் ஆசிரியர்களாக இருந்தார்கள். அச்சுக்குப் போகுமுன்னால் கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய் என்று தீரவிசாரித்து உண்மையை எழுதினார்கள். பின்னர் தமிழர்கள் புலன் பெயர்ந்த பின்னால், கணனியில் தமிழில் எழுதத் தெரிந்தவர்கள் எல்லாம் ஊடகவியலாளர்கள் தான். அந்த ஊடகவியலாளர்களும் கனடாவில் பிரதமர் செத்தாலும், வன்னியில் இருந்து வந்தால் தான் அதைப் பிரசுரிப்பார்கள் என்று ஒரு காலம் இருந்தது. பத்திரிகை என்பது உண்மையைத் தேடுவதை விட்டு, பொய்யைப் பிரசாரம் செய்வது என்றாகி விட்டிருந்தது. இருந்தாலும் அச்சில் வந்ததை நம்ப நாங்கள் விரும்பினோம். நாங்கள் நம்ப விரும்பியதை அவர்களும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நம்பினோம். கடைசியில் என்ன நடந்தது என்பதைச் சொன்னால் சண்டைக்கு வருவீர்கள். நமக்கேன் வம்பு?

இப்போது புதிதாக இணையமும் அதில் முகப்புத்தகமும் தோன்றியிருக்கிறது. யாரும் எவரும் இணையத்தில் எழுதலாம். அவர்களின் தகுதி பற்றி யாருக்கும் தெரியாது. அரசியலை எழுத என்ன, நடத்தவே தகுதி தேவையில்லை என்று இங்கே தேர்தலில் நிற்கும் தமிழர்களுக்குத் தெரியும். எல்லாம் தெரிந்த தமிழர்களுக்கு எழுதவா தகுதி தேவை?

இப்போது கண்டவர்கள்,

**ஜோர்ஜ் இ.**




www.thayagam.com
தாயகம்

நிண்டவர்கள் எல்லாம் நினைத்ததை எழுதி விட்டுப் போக அதை எல்லோரும் வேதவாக்காக நம்பி மற்றவர்களுடன் பகிர்கிறார்கள்.

சமீபத்தில் முகப்புத்தகப் பதிவு ஒன்றில், புத்தர் வடிவத்தில் ஒரு பழம் இருந்தது. எழுதியவரும் அது சீனாவைச் சேர்ந்த ஜின்செங் பழம் என்றும் இமயமலையில் வளரும் அந்த மரத்திற்கு குரங்கு ஓர்க்கிட் என்று பெயர் என்றும் அது 20 வருடங்களுக்கு ஒரு தடவை பழுக்கிறது என்றும் இறைவனின் அற்புதலீலைகளைப் படத்துடன் போட்டிருந்தார். (ஒக்கிட் மரத்தில் ஜின்செங் கிழங்குப் பழம். அதுவும் சீனாவில் உள்ள இமயமலையில்!) கண்டதும் கற்கும் நமக்கு, எங்கேயோ ஒரு தடவை சீன விவசாயி ஒருவர் பியர்ஸ் பழங்களுக்கு புத்தர் வடிவ பிளாஸ்டிக் அச்சுகளைக் கொழுவி அந்த அச்சுகளுக்குள் வளர வைத்து, புத்தர் வடிவப் பழங்களை நல்ல விலைக்கு விற்கிறார் என்று வாசித்த ஞாபகம் வந்தது. சும்மா படத்தை வைத்தே இவர்கள் இந்தக் கதையை

**வாங்கி புத்தர் பெருமானின் மாம்பழங்களை... சே... ஜின்செங் பழங்களை, ஊரில் உள்ள காணிகளில் வளர்த்து உண்ணலாம். அப்புறமாய் உங்கள் கொல்லைப்புறத்தில் விகாரை கட்ட யாராவது வந்தால், அதற்கு நாங்கள் பொறுப்பில்லை.**

இழுத்து விட்டிருக்கிறார்கள். இணையத்தில் தேடினால், சீனாவில் அந்த அச்சுக்களை விற்கிறார்கள். நீங்களும் விரும்பினால், வாங்கி புத்தர் பெருமானின் மாம்பழங்களை... சே... ஜின்செங் பழங்களை, ஊரில் உள்ள காணிகளில் வளர்த்து உண்ணலாம். அப்புறமாய் உங்கள் கொல்லைப்புறத்தில் விகாரை கட்ட யாராவது வந்தால், அதற்கு நாங்கள் பொறுப்பில்லை.

நிர்வாணப்பெண் வடிவில் ஒரு பூ இமயமலைச்சாரலில் பூப்பதாக இன்னொரு பதிவு. (இமய மலைச்சாரலுக்கு அப்படி திறமை! இமய மலைச்சாரலில் தவம் புரியும் முனிபுங்குவர்களை மயக்க இறைவன் செய்யும் அற்புத லீலையோ தெரியாது!) அது இந்தியத் தொலைக் காட்சிகளிலும் செய்தியாக வந்த யூடியூப் உள்ளது. நாரிலதா என்ற இந்தப் பூவைப் பார்த்தால், நிர்வாணப் பெண் பல பூக்களில் தன் அந்தரங்கத்தைக் கைகளால் மறைத்து நிற்க, சில பூக்களில் கைகளைப் பக்கத்தில் வைத்தபடி! இன்னொரு படத்தில் பாதங்கள் குறுக்காக ஒரு பூவில். இன்னொரு படத்தில் பூவின் காம்பு இடுப்பு பகுதியில் ஒட்டியிருக்கிறது. இணையம் முழுவதும் தேடினால், ஒரு மூன்று நாலு படங்களை வைத்து, எத்தனையோ பேர் கயிறு திரித்திருக்கிறார்கள். அப்படி எந்தப் பூவோ, மரமோ இருப்பதாக உத்தியோகபூர்வமாக எந்தப் பதிவுகளும் இல்லை. யாரோ நிர்வாணப் பொம்மைகளைக் கட்டித் தூக்கி கயிறு திரித்திருக்கிறார்கள். அதை ஆளுக்காள் முகப்புத்தகத்தில் பகிர்ந்து கொள்கிறார்கள்.




அப்புறம், திருநல்லாறு சனீஸ்வரன் ஆலயத்தின் மேல் செல்லும் உபகோள் மூன்று செக்கன் நிற்பதாகவும் நாசா விஞ்ஞானிகள் அதை ஆராய்ச்சி செய்து சனி பகவானின் திறமையைக் கண்டு வியந்ததாக இன்னொன்று! செக்கனுக்கு மூன்று கிலோ மீட்டர் வேகத்தில் சுற்றும் உபகோள் கோவிலுக்கு மேலே வந்து, திடீர் பிரேக் அடிக்க முடியாது. விஞ்ஞான விதிகளின்படி அவ்வாறு அசைவற்று நின்றால், புவியீர்ப்பினால் கீழே விழ வேண்டி வரும். நாசா இணையத்தளத்தில் இது பற்றி எந்தத் தகவலும் இல்லை. கதையைத் திரித்தவரோ, அதீத ஊதாக் கதிர்கள் பற்றி விஞ்ஞான விளக்கம் வேறு கொடுத்திருக்கிறார்.

தில்லை நடராஜரின் பெருவிரலில் தான் முழு உலகின் காந்தப் புள்ளி இருப்பதாக பல கோடி டொலர்கள் செலவு செய்து எட்டு ஆண்டுகள் உலக நாடுகள் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்ததாக இன்னொரு பதிவு. எந்த நாடுகள் எப்போது செய்த ஆராய்ச்சி என்று நாம் கேட்ட பின்னூட்டத்திற்கு இன்னமும் பதில் இல்லை. பூமியின் காந்தப்புலம்

துருவம் நோக்கியது என்பது நாங்கள் படித்தது. துருவப் பகுதியில் நடராஜர் சிலை எதுவும் இல்லை. தில்லையில் தான் உள்ளார்.

சுவிட்சலாந்தில் உள்ள CERN பௌதிக தத்துவவியல் ஆய்வு நிலையத்தில் நிலக் கீழ் சுற்றுப் பாதையில் அணுத் துகள்களை ஆராய்ச்சி செய்யப் போக, உலகம் அழிந்து விடும் என்ற பயத்தினால், நடராஜர் சிலையைக் கொண்டு போய் வைத்ததால் உலக அழிவு தடுக்கப்பட்டதாக இன்னொன்று. உண்மையில் இந்திய அரசுதான் அந்த சிலையை அன்பளிப்பாகக் கொடுத்ததாக செய்தி.

கணவன் சாப்பிட்ட மீதி இலையில் மனைவி சாப்பிட வேண்டும் என்ற பண்பாடு பற்றி வியந்து இன்னொன்று. அப்போது தானாம், கணவனுக்கு எது பிடிக்கும், பிடிக்காது என்பது மனைவிக்குத் தெரியுமாம். அதை விடப் பெரிய கதை... கணவனின் எச்சிலில் உள்ள டி.என்.ஏ மனைவியின் வயிற்றுக்குப் போய் ஆரோக்கியமான குழந்தைகள் பிறக்குமாம்.

பெண்கள் காலுக்கு மேல் கால் போட்டால், கர்ப்பப்பையில் பாதிப்பாம். அப்போ மற்ற நாடுகளில் உள்ள பெண்களுக்கு கர்ப்பப் பை பாதிப்போ என்ற கேள்விக்கு இன்னமும் பதில் இல்லை.

இப்படித் தான் 2012ல் உலகம் அழியப் போகிறது என்று பல இணையத்தள நிபுணர்கள் பல்வேறு கதைகளைக் கட்டி விட்டுக் கொண்டிருந்தார்கள். அதில் மாயர்களின் கண்டுபிடிப்புகளுக்கு தமிழர்கள் தான் மூலம் என்று பல தமிழ் 'அறிஞர்கள்' 'ஆய்வு' செய்து கொண்டிருந்தார்கள். முக்காலம் உணர்ந்த தீர்க்கதரிசனத் தமிழர்களின் இவ்வாறான அறிவின் உயர்ச்சியினால் தான் தமிழன் அழிந்து போக, உலகம் அழியாமல் போனதோ என்னவோ? இப்போதெல்லாம் இந்துமதத்தினதும், தமிழர்களினதும் பெருமையை எடுத்து இயம்புவதற்காக (தமிழேன்டா!) பலர் புதுப்புதுக் கதைகளோடு தோன்றுகிறார்கள்.

இது போதாதென்று, சித்த வைத்தியர்கள் பலர் இணையத்தை ஆக்கிரமித்திருக்கிறார்கள். ஏழு நாளில் தொப்பையைக் குறைப்பது முதல் விந்துக்களின் உற்பத்தியைப் பெருக்க நெருஞ்சி முள்ளைப் பாலில் காய்ச்சிக் குடிப்பது வரைக்கும் பல்வேறு மூலிகை மருத்துவங்கள் இணையத்தில் உலாவுகின்றன. மீனும் தயிரும் சேர்ந்து சாப்பிட்டால், தோல் வெளிறும் நோய் வரும் என்று ஒரு பதிவு. பெண்களை உச்சமடையச் செய்ய வைக்கும் வழிகள் பற்றி பாலியல் நிபுணர்கள் வேறு ஒரு புறத்தில். கறுப்பு நிறமானவர்கள் வெள்ளையாவதற்கும் மொட்டையில் மயிர் முளைக்கவும் தான் சித்தவைத்தியம் சொல்கிறார்களே என்று பார்த்தால் இப்போது, கர்ப்பம் கலைக்க இயற்கை மருத்துவ வழிகள் என்று தொடங்கியிருக்கிறார்கள்.

இவற்றை நம்புவதற்கு முதலில் இவை உண்மையாக இருக்குமா? இதை எழுதியவர் என்ன தகுதியுடையவர் என்பதை அறிந்து கொள்ளுங்கள். விசயம் தெரியாமல் இந்த மருந்துகளை உண்ணப்போய் உயிர் ஆபத்துக்களைத் தேடிக் கொள்ளாதீர்கள்.

அதிலும் இங்கே எங்கள் பிள்ளைகள் குடித்து விட்டு ஆட்டம் போடுவதாக வேறு செய்திகள் வருகின்றன. அவர்களுக்கு உதவட்டுமே என்ற பெருந்தன்மை இந்தச் இணையச்' சுத்தர்'களுக்குத் தோன்றியிருக்கக் கூடும். வீட்டுக்காரருக்குத் தெரியக் கூடாதே என்று அந்தப் பிள்ளைகள் இந்தக் கட்டுக்கதை மருத்துவங்களை நம்பினால் என்ன நடக்கும் என்பதைச் சொல்லி வையுங்கள்.

தங்கள் இணையத் தளத்தைப் பலர் பார்க்க வேண்டும், அதை வைத்து விளம்பரங்களைச் சேர்த்து பணம் சம்பாதிப்பது தவிர வேறு எந்த நோக்கமும் இவர்களுக்கு இல்லை.இணையத்தில் வந்ததை கொப்பி, பேஸ்ட் பண்ணும் நம் பத்திரிகையாளர்களும் இதைக் கண்டால் தங்கள் பத்திரிகைகளுக்கு மவுசு கிடைக்கும் என்று இவற்றை மறுபிரசுரம் செய்வார்கள்.



தீவுப் பகுதியில் கொடூரமாய் உயிரிழந்த பிள்ளையின் படங்களை வியாபாரம் செய்து முடிந்து, யாவாரம் தேக்கம் அடையும் போது, இவர்கள் மீண்டும் கிளம்புவார்கள். இன்னும் கொஞ்ச நாளில் பிள்ளைப்பேறுக்கும், ஆண்மைக் குறைவுக்கும் சித்த மருந்து லேகியங்களை இணையத்தில் வியாபாரம் பண்ணவும் இவர்கள் தொடங்குவார்கள்.

சுவடியில் வரும் மருத்துவக் குறிப்புகள் உலகப் புகழ் பெற்ற மாயோ மருத்துவ மனை போன்ற நம்பகமான இடங்களிலிருந்தே பெறப்படுகின்றன. சமையல் குறிப்புகளாக இருந்தாலும், உணவுப் பொருட்கள் பற்றிய தகவல்கள் என்றாலும் சரியான ஆய்வுகளால் உறுதி செய்த இடங்களிலிருந்தே பெறப்படுகின்றன. எனவே சும்மா பேஸ்புக்கில் கண்டோம் என்று கட்டுக் கதைகளை நம்புவதையோ, 'பெண்களுக்குத் தொடப் பிடித்தமான இடங்களை' வாசித்து விட்டு, பஸ்ஸில் செருப்படி வாங்குவதையோ தவிருங்கள்.

பத்திரிகைகளில் வந்ததை நம்பி எங்கள் இனம் அழிந்தது உங்களுக்குத் தெரியும். சும்மா கண்டவர்கள் எழுதும் முகப்புத்தகத்தை நம்பி உயிரை இழக்காதீர்கள்.

அதென்ன, வீடியோவைக் காட்டினால் சீ... சீ.. உது கொம்பியூட்டர் கிராபிக்ஸ் என்று சொல்லி நம்புகிறீர்கள் இல்லை. முன்பின் தெரியாதவர்கள் இணையத்தில் எழுதுவதை மட்டும் எப்படி நம்புகிறீர்களோ? அ